# உண்மையின் வெற்றி

இஸ்கந்தர் ஜதீத்



**UNMAYIN VETRY**
**(TAMIL)**

**VICTORY OF TRUTH**

**By**
**Iskander Jadeed**

All rights Strictly reserved. No Part of this publication may be transtated or transmitted on any form or by any means electronic or mechanical, including photocopy. recording or any information storage and retrieval system without permission in writing from the publisher.

## பொருளடக்கம்



# உண்மையின் வெற்றி

அந்த வார்த்தை மாம்சமாகி.... நமக்குள்ளே வாசம்பண்ணினார்... அவருடைய மகிமையைக் கண்டோம். யோவான் 1:14

உண்மையின் வெற்றி

சவுதி அரேபியாவில் ஒரு ஷேக் கேட்டதான கேள்விகளுக்குப் பதில்கள் இஸ்கந்தர் ஜதீத்

அன்புள்ள சகோதரருக்கு,

தேவனுடைய கிருபையும் சமாதானமும் உங்களுக்கு உண்டாகும்படி வாழ்த்துகிறேன். உங்களுடைய அன்பான கடிதம் கிடைக்கப் பெற்றேன். உங்கள் கருத்துக்களையும் நல்வாழ்த்துக்களையும் என்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்புவதாக எழுதியிருந்தீர்கள். உண்மையின் வெற்றி என்னும் இந்நூல் எழுதப்பட்டதன் நோக்கமும் அதுவேயாகும். மனதின் பெருமை மற்றும் மதத் தீவிரப்பற்று ஆகியவற்றை விலக்கிவிட்டு மனுக்குலத்தை குழப்பத்திலிருந்து இரட்சித்து, அதை இருளிலிருந்து ஒளிக்கு விடுவித்துக்கொண்டுவரும்படி ஒரு ஆரோக்கியமான உரையாடலை நாடுவோமாக.

நீங்கள் எனக்கு அனுப்பியிருந்த கேள்வியைக் கவனித்து, பின்பு இரண்டாவதான இயேசுவையும் ( ஈசா) மரியாளையும், பரிசுத்த ஆவியையும் தெய்வீகமானவர்களாக அங்கீகரிக்க ஆலோசனைச் சங்கங்களுக்கு உரிமையைத் தந்தது யார்? என்னும் வாக்கியத்தை உற்றுநோக்கினேன்.

இந்தக் கேள்வியினால் உங்கள் நல்லெண்ணம் மங்கிப்போனதைக் கண்ணுற்று நான் பெரிதும் ஏமாற்ற மடைந்தேன். நீங்கள் குறிப்பிட்டுள்ளது ஒரு உரையாடல் அல்லது மனிதனின் விடுதலைக்கு ஆதாரமான ஒரு விஷயமும் இல்லை. தேவனுடைய உண்மையான மார்க்கமான கிறிஸ்தவத்தின் சத்தியத்தின் மீது குறிவைத்து தான் உங்கள் கொடிய வார்த்தைகள் உள்ளன. நீங்கள் உங்களை சத்தியத்தின் பாதுகாவலர் என்று அழைத்துக் கொள்வதைப் பார்க்கும்போது இன்னும் அதிக ஏமாற்றம் அளிப்பதாயுள்ளது. தவறான போதனைக் காரர்களின் போதனைகளை விசுவாசித்து, மரியாளை ஒரு தேவதை ஆக்கிவிட்டதாக உண்மையான கிறிஸ்தவத்தை நீங்கள் குற்றஞ்சாட்டுகிறீர்கள்.

நான் உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லுமுன் நீங்கள் உங்களுடைய குற்றத்தை உணர்ந்து, நீங்கள் அதன் பாதிப்புக்கு உள்ளானவர் என்பதைக் கவனிக்கும்படி என்னுடைய கேள்விகளை ஆராய்ந்து பார்த்து பதில் கொடுங்கள் என்று சொன்னதன் மூலம் உங்களுடைய இலக்கைத் தவறவிட்டுவிட்டீர்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்தாக வேண்டும். நீங்கள் என்னுடைய கற்பனைகளைக் கைக்கொண்டால், மெய்யாகவே எனக்குச் சீஷராயிருப்பீர்கள் ; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் ( யோவான் 8:31-32) என்று இயேசுவானவர் கூறியுள்ள வார்த்தைகளை நான் கேட்டிருக்கிறேன். உண்மையாய்ச் சொல்வதென்றால் கிறிஸ்துவானவரின் வார்த்தைகள் எல்லா சங்கிலிகள் மற்றும் கட்டுகளிலிருந்து என்னை விடுதலையாக்கிவிட்டன.



அவைகளில் ஒன்று பழிவாங்க வேண்டும் என்ற வாஞ்சையாகும். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள். அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்களுக்கும் அநீதியுள்ளவர்களுக்கும் தம்முடைய மழையை அனுப்புகிறார். ( மத்தேயு 5:44-45) என்று சொல்லுகிற அவருடைய வார்த்தையின் மீது தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் என்னை உறுதியாய் நிற்க வைத்தார்.

இரக்கமற்ற உங்கள் வார்த்தைகளை நான் படித்து முடிந்தவுடனே உங்களுக்காக ஜெபம் செய்தேன் என்பதை நம்புங்கள். உங்கள் கேள்விகளுக்கு நான் பதில் சொல்லு முன்பு எனது உண்மையான வாழ்த்துக்களை தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள். இஸ்கந்தர் ஜதீத்

**கேள்வி :** புனித அகஸ்டின் கூறினார், நான் ஒரு விசுவாசி, ஏனெனில் அது மனதுடன் ஒத்துப்போகிறதில்லை அப்படியானால் ஒரு பைத்தியத்திற்கும் மனதை அடக்கும் ஒருவனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**பதில் :** இந்த வாக்கியத்துக்கு வியாக்கியானத்தை நீங்கள் கூறவில்லை. எந்தவொரு கூற்றுக்கும் தன் விருப்பம் போல வியாக்கியானத்தை எவரும் கூற முடியும். மனதால் கிரகிக்க முடியாத எதையும் ஏற்றுக் கொள்ளும்படி மனிதனை விசுவாசம் வலியுறுத்துகிறது தேவனுடைய வசனம் கூறுகிறது : விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும்

காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலில் விசுவாசம் தேவனுடைய புஸ்தகத்தில் இருக்கும் அவருடைய சாட்சியின் மேல் கட்டப்பட்டுள்ளது. நாம் நம்பியுள்ள ஆனால் காணமுடியாத பரலோகத்தின் மீதுள்ள விசுவாசமும் அப்படியே. தேவனால் அருளப்பட்ட புத்தகம் பரலோகம் உண்டென்று சாட்சியிடுகிறது.

இந்த வரையரையின் நம்பகத்தன்மைக்கு மேலதிகச் சான்று இதோ.

1. நாம் வரலாற்று ஆசிரியர்களின் சாட்சிகளின்படி வரலாற்று நிகழ்வுகளையும் விஞ்ஞானிகளின் சாட்சிகளின்படி அறிவியல் உண்மைகளையும் நம்புகிறோம். தேவனுடைய புனித நூலில் வெளிப்படுத்த பட்டவைகளின் அடிப்படையில் சிருஷ்டிப்பு, விழுகை, மீட்பு ஆகியவைகளை நம்புகிறோம். வேதவாக்கியம் கூறுகிறது. நாம் விசுவாசத்தினாலே உலகங்கள் தேவனுடைய கட்டளையினால் உண்டாக்கப்பட்டன என்றும், இவ்விதமாய் காணப்படுகிறவைகள் தோன்று கின்றவைகளால் உண்டாக்கப்படவில்லை என்றும் அறிந்திருக்கிறோம் (எபிரெயர் 11:3) நாம் மேலும் நித்திய வாழ்வு, குணப்படுதல், நீதிகரிக்கப்படுதல், பரிசுத்த மாக்கப்படுதல், உயிர்த்தெழுதல் மற்றும் கடைசி நாளின் நியாயத்தீர்ப்பு என்பவைகளையும் விசுவாசிக்கிறோம். தேவனுடைய சாட்சியின் அடிப்படையில் இவையாவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
2. வேதாகமமும் விசுவாசத்தை விவரிக்கிறது, புதிய ஏற்பாடு இயேசுவின் சாட்சி என்று அழைக்கப்படுகிறது. இயேசு



ஒரு தத்துவஞானியாக வராமல் ஒரு சாட்சியாக வந்தார். அவர் நிக்கொதேமுவிடம் கூறினார், நான் உனக்குச் சத்தியமாகச் சொல்லுகிறேன் ; நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டவைகளைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறோம் : நீங்களோ எங்கள் சாட்சிகளை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை (யோவான் 3:11) யோவான் ஸ்நானன் யூதர்களிடம் கூறினார். உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்... தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார்... அவருடைய சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான் (யோவான் 3:31-33)

கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களும் சாட்சியாக இருந்தனர். இயேசு அவர்களுக்கு வாக்குறுதி செய்ததாவது; ‘‘பரிசுத்த ஆவி உங்கள் மேல் வரும்போது நீங்கள்; பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயாவிலும், சமரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்’’ (அப்போஸ்தலர் 1:8). கிரேக்க நாட்டில் சாட்சி கொடுத்தபோது, தங்கள் போதனைகளை தத்துவஞானத்தின்மேல் அவர்கள் கட்டி எழுப்பவில்லை. மனித ஞானத்தின்மேல் கட்டப்படும் தத்துவஞானம் தேவனுக்கு முன் பைத்தியமாய் இருக்கிறது என்ற அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். அப்போஸ்தலர்கள் தத்துவஞானிகளல்ல, சாட்சிகள் ; அவர்கள் ஆவிக்குரிய விஷயங்களை மனித ஞானம் கொண்டு நிரூபிக்கவில்லை ; ஆனால் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தனர். விசுவாசம் குறித்த வேதாகம

போதனையின் நிரூபணங்களில் ஒன்று சாட்சியின் மீது கட்டப்பட்ட நம்பகத் தன்மையாகும். மீட்பைக் குறித்து தேவனுடைய ஆவி வெளிப்படுத்துவதை நாம் விசுவாசிக்கும்படி தேவனுடைய வார்த்தை நமக்குக் கட்டளையிடுகிறது. வேதாகமம் கூறுகிறது. தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் அந்தச்சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான். தேவனை விசுவாசியாதவனோ தேவன் தம்முடைய குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சி விசுவாசியாததினால் அவரைப் பொய்யராக்குகிறான். தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிற தென்பதே அந்தச் சாட்சியாம் (1 யோவான் 5:10-12). விசுவாசத்தின் மெய்த்தன்மை குறித்த சிறந்த கூற்று இதுவே.

சுருக்கமாக, தேவனுடைய சாட்சியை அடிப்படையாகக் கொண்ட தேவ வெளிப்பாடுதான் விசுவாசம். இந்தச் சாட்சியை ஏற்றுக் கொள்கிறவன் எவனும் தேவன் சத்தியபரர் என்று அறிக்கையிடுகிறான், மறுக்கிறவனோ தேவனைப் பொய்யராக்குகிறான். இது மிக மோசமான அவிசுவாசமாகும்.

மனிதருடைய சாட்சியை நாம் ஏற்றுக்கொள்வோம் எனில், தேவனுடைய சாட்சி அதிலும் பெரிதாயிருக்கிறது. வேதாகமம் இதை மீண்டும் மீண்டும் போதிக்கிறது. நாம் நமது விசுவாசத்தைக் கட்டியெழுப்பும் அடித்தளமாக அது அமைந்துள்ளது, கர்த்தர் சொன்னதாவது என்று அது நமக்குக் கட்டளையிடுகிறது.

வேதாகமம் விசுவாசத்திற்கு இன்னுமொரு அர்த்தத்தையும் கொடுக்கிறது. நமது ஆதிப்பெற்றோரான ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாமற்போனபோது,



''நான் உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிகாலைக் கடிப்பாய்''( ஆதியாகமம் 3:15) என்று சொல்லி அவர்களுக்கு ஒரு வாக்குறுதி கொடுத்தார். இந்த வாக்குறுதியின் மீதான விசுவாசம் தேவனுடைய சாட்சியின் மேல் கட்டப்படுகிறது. தேவன் நோவாவுக்கு ஜலப்பிரளயம் குறித்த எச்சரிக்கை விடுத்த போது, ஒரு பேழையை உண்டாக்கும்படி கட்டளை கொடுத்தார். நோவா தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தார்; ஆனால் பெருவெள்ளத்தின் அடையாளங்களைக் கண்டு அல்ல.

ஆபிரகாமின் வயதான மனைவி சாராள் ஒரு ஆண் குழந்தையை வாரிசாகப் பெற்றெடுப்பார் என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்குறுதி தந்தார். வேதாகமம் கூறுகிறது : விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமாயிருக்கிறது (எபிரெயர் 11:1)

வெளிப்படையாகச் சொன்னால் இந்த வாக்குத்தத்தம் மனித மனதின் யோசனைக்கு முரணாகத் தெரிகிறது. இன்னுமொரு வசனத்தையும் கவனித்துப்பாருங்கள் : ஆபிரகாமும் சாராளும் வயதுசென்று முதிர்ந்தவர் களாயிருந்தார்கள். ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்று போயிற்று (ஆதியாகமம் 18:11) சாராள் தொண்ணூறு வயதைக் கடந்துவிட்டார். இயற்கையின் படி சாத்தியமில்லாவிட்டாலும் சாராள் விசுவாசித்து, தேவனுடைய வல்லமையினாலே ஒரு குமாரனைப் பெற்றார், அக்குழந்தைக்கு ஈசாக்கு என்று பெயரிட்டனர்.

இந்த நிகழ்வுகளின் அடிப்படையில் நாம் விசுவாசம் உண்மையை ஏற்றுக் கொள்ளுதல் என வரையறுக்கிறோம்.

கிறிஸ்தவர்களுடைய விசுவாசம், புனித அகஸ்டின் உட்பட, பரிசுத்த வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகளையும் போதனைகளையும் அப்படியே விசுவாசித்து தேவனுடைய சாட்சியின்மீது சார்ந்து கொள்வதுதான்.

**கேள்வி :** ஈசாவுக்கும் ( இயேசு ) மரியாளுக்கும் பரிசுத்த ஆவிக்கும் தெய்வீகத் தன்மையை ( தெய்வீக ஸ்தானத்தை) கொடுக்க ஆலோசனைச் சங்கங் களுக்கு உரிமை அளித்தது யார்? இப்படிச் செய்ய அவற்றிற்கு உரிமை இருக்குமானால் தெய்வீகத் தன்மையை அவர்களை விட்டு எடுக்கவும், வேறு யாருக்காவது அதைக் கொடுக்கவும் கூட அவற்றிற்கு உரிமை இல்லையா? போப்புக்கு மாறாத்தன் மையைக் கொடுக்க அவற்றுக்கு அதிகாரம் அளித்தது யார்? அங்கத்தினர்களின் பாவங்களை மன்னிக்கவோ அல்லது அங்கத்தினர்களை சபைக்குப் புறம்பாக்கவோ சபைக்கு அதிகாரம் கொடுத்தது யார்?

**பதில் :** நான் பதில் சொல்வதற்குமுன் குர்ஆன் என்ன சொல்கிறது என்பதை உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன் : சிறந்த எதிர்வாதம் இல்லாமல் வேத நூலின் மக்களுடன் விவாதம் செய்யாதீர்கள். (ஸுரா 29:46 அல்அன்கபூத்) இந்தக் கேள்வியைக் கேட்டதினால் குர்ஆனின் போதனைகளைவிட்டு விலகிச் சென்றுவிட்டீர்கள், ஒவ்வொரு முஸ்லிமும் குர்ஆனின் போதனைகளைப் பின்பற்ற வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டுள்ளதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் கேள்விக்கான பதில் என்னவெனில்,



1. கிறிஸ்தவ மார்க்கம் மரியாளுக்கு தெய்வீக அந்தஸ்தைக் கொடுக்கிறதில்லை. உங்கள் கேள்வியில் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பு எதுவுமில்லை. இந்தக் கேள்வி குர்ஆனில் இருக்கிறது. "இறைவன் ஈசாவிடம் (இயேசு) சொன்னார்". மரியமின் மகனான ஈசாவே, இறைவன் அல்லது என்னையும் என் தாயாரையும் இரண்டு கடவுள்களாக வைத்துக்கொள்ளுங்கள் என்று நீர் சொன்னதுண்டா? (அல்மாயிதா 5:116). இஸ்லாமின் ஆரம்பகாலத்தில் சில மதக்குழுக்கள் இருந்ததால் இந்தக் கேள்வி கேட்கப் பட்டது. அக்குழுவினர் சிலை வணக்கத்தாராயிருந்தனர். அவர்களில் சிலர் சபையில் சேர முயற்சி செய்து மரியாளை ஒரு தேவதை என அழைத்தனர். தாங்கள் வணங்கி வந்த அல்–ஜஹ்ரா என்ற தேவதைக்குப் பதிலாக மரியாளை ஒரு தேவதை ஆக்கி தங்களை மரியாளின் பக்தர்கள் என்று அழைத்துக் கொண்டனர் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இந்த குழுக்கள் கிறிஸ்தவ உபதேசங்களுக்கு மிக எதிரானவைகள், ஒரு மெய்க்கிறிஸ்தவனும் இக்குழுக்களின் உபதேசத்தை விசுவாசிப்பதில்லை. அநேகம் கிறிஸ்தவ மார்க்க அறிஞர்களும், கல்விமான்களும் இத்தவறான போதனைக்கு எதிராக வேதாகம ஆதாரங்களுடன் போராடி வாதிட்டனர். ஏழாம் நூற்றாண்டின் இறுதிக்குள் இக்குழு முற்றிலும் இல்லாமற் போயிற்று.

அதோடு கூட இஸ்லாமும் கூட இப்படிப்பட்ட மதக்குழுக்களுக்கு அப்பாற்பட்டதோ அல்லது அவைகளிடமிருந்து பாதுகாப்பு பெற்றதோ அல்ல என்று

இந்தக் கேள்வியைக் கேட்ட நண்பருக்குச் சொல்ல விரும்புகிறேன் அப்படிப்பட்ட பல குழுக்கள் உள்ளன, ஒரு சிலவற்றை மட்டும் இங்கு காண்பிக்கின்றன.

அ. அல் செபய்யா : அப்தல்லா பென் செபாவின் பக்தர்கள். அலி பென் அபி தலிப் ஒரு கடவுள் என்று இவர்கள் நம்பினர். நெருப்பினால் சுட்டு அவர்களைத் தண்டித்த போது அவர்கள் அலியிடம் நீர் கடவுள் என்று நாங்கள் அறிவோம், ஏனெனில் கடவுள் நெருப்பைக் கொண்டு தண்டிக்கிறார் என்றனர்.

ஆ. சாத்தானிய குழு : சாத்தான் என்று அழைக்கப்பட்ட முஹம்மது பென் நாமானைப் பின்பற்றினவர்கள். இவர்கள் சாத்தானைக் கனப்படுத்தினார்கள்.

இ. தி விங்கர்ஸ் : அப்தல்லா பென் முயவய்யாவின் பக்தர்கள் தேவனுடைய ஆவி ஆதாமுக்குள் இருந்தது. என்றும், பின்பு அது இரு சிறகுகள் உள்ள கடவுள் என அழைக்கப்பட்ட தங்கள் தலைவன் அப்தல்லாவிற்குள் நுழைந்தது எனவும் அவர்கள் நம்பினர்.

ஈ. எல் பஸிகாஹ் : பலிஹ் பென் மவுசாவின் பக்தர்கள்.

உ. இஹைத்தியே அஹ்மெத் பென் ஹைத்தின் பக்தர்கள்

ஊ. இமிஹ்தரியே எல்மிஜ்தார் என்றழைக்கபடும் இஸா பென் சுப்ஹ்வின் பக்தர்கள்

தேவன் தவறு செய்யக்கூடியவர். பொய் சொல்லக்கூடியவர், கொடியவர் மற்றும் அநீதியுள்ளவர் எனவும் அவர்கள் நம்பினர், குர்ஆன் மனிதனால் உருவாக்கப்பட்டது. மனிதர் அதைப்போன்ற இன்னொன்றை உருவாக்கவும் முடியும் என்று அவர்கள் கூறினர். இதைப்போன்ற இன்னும் பல மதக் குழுக்கள் கூறினர். இதைப்போன்ற இன்னும் பல மதக் குழுக்கள் இருந்தன, அவற்றை இந்நூலில் நாம் பட்டியலிட முடியாது.



இம்மதக்குழுக்கள் உண்டாயிருப்பதற்கு இஸ்லாம் தான் பொறுப்பாளியா? அவைகள் இஸ்லாம் மார்க்கத்தை பயப்படுத்துமா, மாற்றிடுமா?

2. நியமனம் என்ற வார்த்தை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் பயன்படுத்தப்பட்டிருப்பது சரியன்று, ஏனெனில் தெய்வீகம் என்பது மனிதனால் நியமனம் செய்யப்படும் விஷயமல்ல. இதை நீங்கள் ஏற்க விரும்பாவிட்டாலும் சத்தியம் அதுதான். கிறிஸ்து மெய்யான கடவுளாயிருக்கிறார். கிறிஸ்துதாமே இந்த உண்மையை அறிவித்திருக்கிறார். திரள் கூட்ட மக்கள் இதை கேட்டிருக்கின்றனர் ; பல நாடுகள், மதங்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கொண்ட கோடிக்கணக்கான மக்கள் இந்தச் சாட்சியை வாசித்திருக்கின்றனர். விஞ்ஞானிகள், ஞானிகள், கல்விமான்கள், பெரியோர் மற்றும் சிறியோர் அவருடைய சாட்சியை வாசித்து அவர் தாமே தம்மைக்குறித்துச் சொன்ன மகிமையான வார்த்தைகளின் முழுமையை உட்கிரகிக்கும்படி தங்கள் இருதயங்களையும் கண்களையும் திறந்து தந்துள்ளனர். அவர் சொன்னதை அவர்கள் புகழ்ச்சியுடனும் வணக்கத்துடனும் கேட்டுள்ளனர்.

ஒரு ஜெர்மானிய எழுத்தாளர் கூறினார். கிறிஸ்து வெறுமனே ஒரு போதகர் மட்டும் எனில் அவர் வார்த்தைகளைக் கேட்ட யாவரது கவனமும் நம்பிக்கையும் வீணாயிருக்கும். அவர் உலகின் இரட்சகரானதால், மக்கள் அவரை விசுவாசிக்கும்படி தமது அற்புதமான

ஆள்தன்மையைக் குறிக்கும் வார்த்தைகளை வலியுறுத்திப் பேசவேண்டியதாயிற்று, அவரை விசுவாசிக்கிறவன் எவனும் இரட்சிக்கப்படுவான்.

ஆயர் செர்கியஸ் கூறினார், கிறிஸ்து தனித்துவம் உள்ளவர். நாம் புதிய ஏற்பாட்டை வாசிக்கையில், அவர் எங்கெல்லாம் சென்றாரோ கேட்கப்பட்ட கேள்விகள் அவரைக் குறித்ததாகவே இருந்தன என்று காணலாம். அவர் பிரசங்கிக்கிறதையும், போதிக்கிறதையும், கிரியை செய்கிறதையும் திரள் மக்கள் கேட்டபோது, இந்த ஞானமும் அதிகாரமும் இவருக்கு எங்கிருந்து வந்தது? இவர் தச்சனுடைய மகன் அல்லவா? இது என்ன? இந்தப்புதிய போதனை என்ன? இவர் அதிகாரத்தோடே கட்டளையிடுகிறார்.... பொல்லாத ஆவிகளும் கூட இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே?

**அவரைக் குறித்த இந்தக் கேள்விகள் தான் என்ன?**

இவ்வுலகில் வாழ்ந்த மிக அற்புதமான மனிதர் அவர் என்பதற்கு அவை சான்று பகரவில்லையா? அவர் தனித்துவமானவர், ஆதாமின் எல்லா பிள்ளைகளிலும் மேலானவர்.

கிறிஸ்து தேவன் இல்லையெனில் அவர் தம்மைக் குறித்து சொன்ன சாட்சிகள் செல்லுபடியாகாது. அவர் மெய்யான தேவனாக இருக்கிறபடியால் தான் அவர் தம்மைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறார். அவர் கூறியவைகளிலிருந்து அவர் இயற்கைக்கு மேலானவர் என்று காண்கிறோம்.

**கிறிஸ்துவின் குணாதிசயங்களில் சிலவற்றை இங்கே தருகிறோம்.**

அ) அதிகாரம் (மத்தேயு 28:8)

ஆ) தேவனோடுள்ள ஐக்கியம் (ஏக தேவத்துவம்) (யோவான் 10:30: 14:11;14:9)



இ) நித்தியத்துவம், என்றைக்குமுள்ள தன்மை ( யோவான் 8:58) தம்மைக் குறித்த மிக கம்பீரமான அறிவிப்பு இது நான் இருக்கிறேன் என்ற அவரது வார்த்தைகள் தேவன் மோசேயிடம் சொன்ன அதே வார்த்தைகளே.

நான் உன்னோடே இருப்பேன் ; நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவந்தபின், நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள் ; நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றார். அப்பொழுது மோசே தேவனை நோக்கி : நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்குச் சொல்லும்போது அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன் என்றான். அதற்குத் தேவன் இருக்கிற வராகவே, இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார். (யாத்திராகமம் 3:12-14) இருக்கிறவராகவே இருக்கிறேன் என்பதின் பொருள் கிறிஸ்து தம்மை வெளிப்படுத்தி, முட்செடியில் மோசேக்குத் தோற்றமளித்த அதே தேவன் நான் என்று கூறுகிறார்.

கிறிஸ்துவானவர் பத்மு தீவிலே யோவானுக்குத் தோற்றமளித்துக் கூறினார். "நான் அல்ஃபாவும் ஓமெகாவும் ஆக இருக்கிறேன் என்று இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்." (வெளிப்படுத்தல் 1:8). அல்ஃபா மற்றும் ஓமெகா என்பவை கிரேக்க மொழியின் முதலாம் மற்றும் கடைசி எழுத்துக்கள். துவக்கத்திலிருந்து முடிவு வரை நித்தியமானவராக கிறிஸ்து இருப்பதை அது குறிக்கிறது.

ஈ) தேவன் கிறிஸ்துவின் மூலம் பேசுகிறார் (யோவான் 14:10)

உ) கிறிஸ்து வானிலும் பூவிலும் இருக்கிறார். (யோவான் 3:12) இங்கே அவர் தாம் வானத்திலிருந்து வந்ததைக் குறித்துப் பேசுவதோடு தாம் முன்னமே பரலோகத்திலிருப்பதையும் குறிப்பிடுகிறார்.

ஊ) கிறிஸ்து ஜீவனுள்ளோருக்கும் மரித்தோருக்கும் நியாயாதிபதியாக இருக்கிறார் (மத்தேயு 25:31-41) இதைக் சொல்வதனால் தாம் நீதியுள்ள நியாயாதிபதி என்பதைக் கிறிஸ்து காண்பிக்கிறார். அவர் மிகுந்த மகிமையோடு தம்தூதர்களுடன் திரும்ப வருவார் (மத்தேயு 26:63-64)

எ) அவர் எங்கும் நிறைந்தவர் மத்தேயு 28:20 18:20 -ல் இதை அவர் தம் சீடர்களுக்குக் கூறுகிறார்.

ஏ) நியாயப்பிரமாணத்தின் துவக்கமும் முடிவுகளாய் அவர் இருக்கிறார் (மத்தேயு 5:21-48). கிறிஸ்துவின் கிரியைகள் அவருடைய தேவத்துவத்துக்கு சாட்சியிடுகின்றன.

1) மரித்தோரை உயிரோடடெழுப்பினது : (லூக்கா 7:13-15 மாற்கு 5:22 ; யோவான் 11:1-27)
2) பாவங்களை மன்னித்தது (மாற்கு 2:5-12)
3) சர்வஞானியாயிருப்பது (லூக்கா 22:10-12)
4) இயற்கையின் மீது அதிகாரம் மற்றும் வல்லமை (லூக்கா 8:22-25)
5) பரிசுத்த ஆவியை அனுப்பியது (யோவான் 15:26)
6) சகலத்தையும் சிருஷ்டித்தது (கொலொசெயர் 1:16)

பிதாவானவர் இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்துக்கு சாட்சியளிக்கிறார். பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலே பரிசுத்த ஆகமங்களை எழுதிய தமது தீர்க்கதரிசிகளுக்கு தேவன் இச்சத்தியத்தை வெளிப்படுத்தினார். ‘‘நமக்கு ஒரு பாலகன்



பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன் நித்திய பிதா, சமாதானப்பிரபு என்றழைக்கப்படுவார்.’’ (ஏசாயா 9:6). ‘‘ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தைக் கொடுப்பார் ; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்’’ என்று ஏசாயா 7:14 சொல்கிறது. ‘‘இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்... அதற்கு தேவன் நம்மோடிருக்கிறார்’’ என்று அர்த்தமாம் என்று நாம் மத்தேயு 1:23ல் நினைப்பூட்டப்படுகிறோம்.

இயேசுவின் சீடர்கள் அவருடைய தெய்வீகத்தைக் குறித்துச் சாட்சி கொடுத்தனர். பண்டைய யூத பிரமாணங்களைக் கற்றறிந்த அந்த சீடர்கள் மற்றும் அப்போஸ்தலர்களின் சாட்சி மிக முக்கியமானது.

கிறிஸ்துவுடன் இருந்து, அவருடைய போதனைகளைக் கேட்டு, அவருடைய அற்புதங்களைக் கண்டதினால் பெற்ற தங்கள் அனுபவங்களிலிருந்து அவருடைய சாட்சி உண்டானது. தேவன் ஒருவரே என்று அவர்கள் விசுவாசித்தனர், அவர்களுடைய இப்போதைய சாட்சி பழைய ஏற்பாட்டு உபதேசங்களுக்கு, முரணானவை என அவர்கள் எண்ணியதில்லை. கிறிஸ்துவில் தங்கள் ஆவிக்குரிய வாழ்வுக்கு அவசியமான வாழ்வு தரும் நீருற்று உள்ளதைக் கண்டனர் அவர்களில் மிகப் பெருமையுள்ள எவரும் கூட தாங்கள் இயேசுவை கர்த்தரும், இரட்சகரும் தேவனுமாக வணங்கியதை மறுக்கமாட்டார்கள். இயேசு கிறிஸ்துவின் தெய்வீகம் குறித்து அவர்கள் கொடுத்த சாட்சிகள் சில இதோ :

அ) சுவிசேஷகனாகிய மாற்கு தம்முடைய நற்செய்தி நூலுக்கு முன்னுரையாக தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷசத்தின் ஆரம்பம் என்று எழுதுகிறார். அதை முடிக்கையில் இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார் அவர்கள் புறப்பட்டுப்போய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூட கிரியைகளை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப் படுத்தினார் ஆமென் என்று எழுதுகிறார்.

ஆ) சுவிசேஷகனாகிய யோவான் என்னும் அன்பின் சீஷன் ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனோடிருந்தது, அந்த வார்த்தை தேவனா யிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாக்கப்பட்டது. உண்டாக்கப்பட்டதொன்றும் அவராலேயன்றி உண்டாக்கப்படவில்லை என்று தமது நற்செய்தி நூலை ஆரம்பிக்கிறார். மூல மொழி கிரேக்கத்தில் வார்த்தை என்பது லோகோஸ் என்று சொல்லப்பட்டுள்ளது. பேரண்டத்தை ஆளும் வல்லமை என்பது அதன் அர்த்தமாகும் ; இதன் இன்னொரு அர்த்தம் தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தர் என்பதாகும். அவர் மூலமாக எல்லாம் சிருஷ்டிக்கப்பட்டன. தேவன் மாம்ச அவதாரம் எடுப்பது அசாத்தியம் என்பவர்களுக்கு அந்த வார்த்தை மாம்சமாகி, நம் நடுவே சிலகாலம் வாழ்ந்தார். அவருடைய மகிமையைக் கண்டோம், அது



பிதாவிடமிருந்து வந்த ஒரே பேரான குமாரனுடைய மகிமையாகவே இருந்தது. அவர் கிருபையும் சத்தியமும் நிறைந்தவர் ( யோவான் 1:14) என்று கூறினார்.

இ) அப்போஸ்தலராகிய பேதுரு திரள் கூட்டமான யூதர்கள் மற்றும் புறஜாதிகளின் முன்பாகக் கூறினார். இஸ்ரவேல் மனுஷரே, இதைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும் தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும் அவருடைய முன்னிறவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து அவரை எழுப்பினார் ; அவர் மரணத்தினால் கட்டப்பட்டு இருக்கக் கூடாதிருந்தது. அவரைக் குறித்து தாவீது : கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக் கொண்டிருக்கிறேன். நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலது பாரிசத்திலே இருக்கிறார். அதினாலே என் இருதயம் மகிழ்ந்தது ; என் நாவு களிகூர்ந்து. என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர். உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர். ஜீவ மார்க்கங்களை எனக்கு

தெரியப்படுத்தினீர். உம்முடைய சந்நிதானத்திலே என்னைச் சந்தோஷத்தினாலே நிரப்புவீர் என்று சொல்லுகிறார். சகோதரரே, கோத்திரத்தலைவனாகிய தாவீதைக் குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள். அவர் மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டார். அவருடைய கல்லறை இந்நாள் வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது. அவர் தீர்க்கதரிசியாயிருந்து, உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியில் கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்ற தேவன் தனக்குச் சத்தியம் பண்ணினதை அறிந்தபடியால், அவர் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதிலலையென்றும் அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லை என்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன்னார். இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார். இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குறுதியின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். தாவீது பரலோகத்திற்கு எழுந்துபோகவில்லையே, நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் நீர் என் வலது பாரிசத்திலே உட்காரும் என்று கர்த்தர் என ஆண்டவருடனே சொன்னார் என்று அவரே சொல்லியிருக்கிறார். ஆகையினால், நீங்கள் சிலுவையிலறைந்த இந்த இயேசுவையே தேவன்



ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் அப்போஸ்தலர் 2:22-36.

இ அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் நாங்கள் தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம், ஆனால் இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையோ அல்லது அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையோ அல்ல, உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப் பட்டதுமாய் இருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை, அறிந்தார்களானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே (1 கொரிந்தியர் 2:6-8) என்று கூறினார். இயேசுவானவர் மனித சாயலைத் தம்மேல் ஏற்றுக்கொண்ட அதே வேளையில் மனுபுத்திரருக்கு அவர் அறியப்படாத தேவனாகவும் இருந்தார்.

இயேசுதான் மகிமையின் கர்த்தர் என்று அறிந்திருந்தார்களானால் மக்கள் அவரைச் சிலுவையில் அறைந்திருக்கமாட்டார்கள், பவுல் சொல்லுகிறார். பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது ; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு. அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாக நாமும் உண்டாயிருக்கிறோம் (1 கொரிந்தியர் 8:6). ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு

உங்களைத் தகுதியுள்ளவர்களாக்கின... பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம் ( கொலோசெயர் 1:12) மேலும் அவர் கூறுகிறார்; "லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டுபோகாதபடிக்கு, எச்சரிக்கையாயிருங்கள் . அது மனுஷர்களின் பாரம்பரிய ஞானத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல. ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் அடங்கியிருக்கிறது. மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ள வர்களாய் இருக்கிறீர்கள்" (கொலோசெயர் 2:8-10)

ஸ்டேன்லி ஜோன்ஸ் கூறினார். "தேவன் சரியாக இயேசு கிறிஸ்துவைப் போல இருப்பார் எனில் அவர் நல்லவரும் நம்பகமுள்ளவருமான தேவனாயிருப்பார் உலகமானது எல்லாவித பேரழிவுகளை சந்திக்கையில் மனிதர் வியந்து இப்பேரண்டத்தில் கடவுள் என்று ஒருவர் உண்டோ?" என்கின்றனர். தயக்கமும் பயமும் கொண்டிருந்த உள்ளங்கள், தேவன் இயேசு கிறிஸ்துவைப் போன்றவரானால் நிச்சயமாக அவர் மெய்யான தேவன்தான் என்று சொல்லி நிச்சயத்துடன் இயேசு கிறிஸ்து பக்கமாய்த் திரும்புகின்றன. கிறிஸ்தவர்களாக நாம் தேவன் அப்படிப்பட்டவரே என்று அறிக்கையிடுகிறோம். தமது எல்லா குணங்களிலும் சுபாவங்களிலும் சரியாக அவர் கிறிஸ்துவைப் போன்றவரே. உன்னதமான தேவனுடைய புனித நூலை விசுவாசிப்பவர்களாக நாம் தேவனுடைய வார்த்தையோடு சேர்ந்து, இசைந்து இயேசு கிறிஸ்துவானவர் சர்வ வியாபியான ( எங்கும் இருப்பவர்) தேவன் எனவும்



"நம்மோடிருக்கும் தேவன்" (இம்மானுவேல்) எனவும் சொல்ல வேண்டும், ஒப்புக்கொள்ள வேண்டும்.

சிறந்த கல்விமான்களும், பெரிய ஞானிகளும் வல்லுநர்களும் தேவனுடைய குணாதிசயங்களைக் கண்டடைய முயற்சித்து ஒரு கூட்டத்தைக் கூட்டியிருந்தால் தேவனாகவும், இப்பேரண்டத்தின் எஜமானராகவும் யாரை அவர்கள் தெரிவுசெய்வார்கள்? எல்லா சன்மார்க்க நெறிகளும் ஆவிக்குரிய குணநலன்களும் இயேசு கிறிஸ்துவின் சாயலில் இருப்பதைக் காண்பார்கள்.

மனுக்குலத்துக்கான மிகப்பெரிய செய்தி, I தீமோத்தேயு 3:16ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. யாவரும் ஒப்புக்கொள்கிறபடி தேவபக்தியின் இரகசியம் மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார், ஆவியினாலே நீதியுள்ளவர் என்று ஒப்புக்கொள்ளப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், மக்கள் நடுவில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்தில் விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே எடுத்துக்கொள்ளப்பட்டார். கிறிஸ்தவரல்லாத மக்களுக்கு அறிவிக்கப்படவேண்டிய மிகச்சிறந்த செய்தி என்னவெனில் அவர்கள் சிறிதளவு மட்டும் அறிந்துள்ள சர்வவல்ல தேவன் இயேசு கிறிஸ்துவிலுள்ள குணநலன்களும் சுபாவங்களும் உள்ளவரான அதே சர்வவல்ல தேவன் தாமே.

3. "நியமித்தல்" என்னும் வார்த்தை பரிசுத்த ஆவியானவருக்குப் பொருந்தாது, ஏனெனில் அவர் தேவனாய் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் தெய்வீகத்துக்குச் சான்றுகளான வசனங்கள் வருமாறு:

அ) நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சமாரிய

ஸ்திரீயிடம் கூறினார். "இதோ ஒரு காலம் வருகிறது, அது இப்பொழுதே வந்திருக்கிறது, பிதாவை உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்வார்கள். தம்மைத் தொழுது கொள்பவர்கள் இப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டுமென்று பிதாவானவர் விரும்புகிறார். (யோவான் 4:23)

ஆ) பேதுரு அப்போஸ்தலன், அனனியா பொய் சொன்ன போது... "அனனியாவே, பரிசுத்த ஆவியிடம் பொய் சொல்லும்படியாக சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினது என்ன? நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை உனக்காக வைத்துக் கொண்டதும் என்ன? அது விற்கப்படுவதற்கு முன்பு உனக்குரியதாய் இருந்ததல்லவா? அது விற்கப்பட்டபின்பும் அதின் கிரயம் உன்னுடையதாய் இருக்கவில்லையா? இப்படிச் செய்யும்படி உன்னைத் தூண்டியது எது? நீ மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்று கூறினார் (அப்போஸ்தலர் 5:3-4)

உங்களுடைய ஆட்சேபமும் அவிசுவாசமும் ஒரு வேளை பரிசுத்த ஆவியானவரே காபிரியேல் தூதன் என்று கூறும் இஸ்லாத்தின் போதனையினால் உருவான தாயிருக்கலாம். யூதாயிசமும் கிறிஸ்தவமும் இந்த உபதேசத்தை புறந்தள்ளுகின்றன, ஏனெனில் காபிரியேல் தூதன் சிருஷ்டிக்கப்பட்டவர், பரிசுத்த ஆவியானவரோ



சிருஷ்டிகர். யோபு 33:4 "தேவனுடைய ஆவி என்னை உண்டாக்கினார் சர்வ வல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர் தருகிறது என்று கூறுகிறது. சங்கீதம் 104:30 "நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது அவைகள் சிருஷ்டிக்கப்படுகின்றன; நீர் பூமியின் முகப்பைப் புதுப்பிக்கிறீர்;

**பரிசுத்த ஆவியின் பெயர்களில் சில :**

***கர்த்தருடைய ஆவியானவர்***
***கிறிஸ்துவின் ஆவி***
***பரிசுத்த தேவனுடைய ஆவி***
***பரிசுத்த ஆவி***
***சத்திய ஆவி***
***பரிசுத்தத்தின் ஆவி***

பரிசுத்த ஆவியனாவர் தேவத்துவத்தின் பரிசுத்த திரித்துவத்தில் மூன்றாவது ஆள்த்துவமாவார். அவர் தேவனின் எல்லா குணநலன்களுடைய தேவனாவார்

4. மாறாத் தன்மையுள்ள போப் : சுவிசேஷ மற்றும் புரொட்டஸ்டண்ட் சபைகளைச் சேர்ந்த நாங்கள் இந்த உபதேசத்தை நம்புகிறதில்லை, மாற்றமில்லாதவராகி இருந்தவரும் இருக்கிறவரும் கிறிஸ்து ஒருவரே. நாங்கள் போப்பின் தலைமையின் கீழோ அதிகாரத்தின் கீழோ இல்லை. நீங்கள் போப்பைப் பின்பற்றுகிறவர்களில் ஒருவரைக் கேட்பது நலம். இந்த உபதேசம் "எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமை அற்றவர்களானார்கள்" (ரோமர் 3:23). "நமக்குப் பாவம் இல்லை என்று சொல்வோமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம் ; சத்தியம் நமக்குள் இராது, நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டோமானால், நம்முடைய பாவங்களை

நமக்கு மன்னித்து, எல்லா அநீதியையும் நீக்கிச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். நாம் பாவம் செய்யவில்லை என்போமானால் நாம் அவரைப் பொய்யராக்குகிறோம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது" (1யோவான் 1:8-10) என்று கூறும் எமது பரிசுத்த வேதாகமத்தின் போதனைகளுக்கு எதிரானது மாயிருக்கிறது.

5. சபைக்குப் புறம்பாக்கவும் பாவங்களை மன்னிக்கவும் அதிகாரம் உண்டென்று கூறுதல்... சபைக்குப் புறம்பாக்குதல் குறித்து புதிய ஏற்பாட்டில் எந்த உபதேசமும் இல்லை. விசுவாசிகளை விட்டு துன்மார்க்க மனுஷரை அவர்கள் மனந்திரும்பும் மட்டும் விலக்கிவைக்க வேண்டுமென வேதாகமம் கட்டளையிடுகிறது. பாவிகளை விலக்க வேண்டுமென கூறும் சில வேதவசனங்கள் இவை: " நான் உங்களுக்கு எழுதினதென்னவெனில் சகோதரனென் னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாக, பொருளாசைக் காரனாக, விக்கிரகாராதனைக்காரனாக, உதாசி னனாக , வெறியனாக, கொள்ளைக்காரனாக இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது, அப்படிப் பட்டவனோடே கூட வசிக்கவும் கூடாது. புறம்பே இருக்கிறவர்களைக் குறித்துத் தீர்ப்பு செய்கிறது என் காரியமா? உள்ளே இருக்கிறவர்களைக் குறித்தல்லவோ நீங்கள் தீர்ப்புச் செய்கிறீர்கள்? புறம்பே இருக்கிறவர்களை தேவனே நியாயந்தீர்ப்பார். ஆகையால் அந்தப் பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப்போடுங்கள்" (1 கொரிந்தியர் 5;11-13)



"மேலும் சகோதரரே, எங்களிடத்தில் கற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலகவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் (2 தெசலோனிக்கேயர் 3:6)".

நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மன்னிப்பு குறித்துக் கூறிய போதனைகளாவன : "உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால் அவனைக் கடிந்துகொள், அவன் மனஸ்தாபப்பட்டால் அவனுக்கு மன்னிப்பாயாக. அவன் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்து ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து நான் மனஸ்தாபப் படுகிறேன் என்று சொன்னால் அவனுக்கு மன்னிப்பாயாக (லூக்கா 17:3,4)". உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ் செய்தால் அவனிடத்தில் போய் நீயும் அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து, அவன் உனக்குச் செவி கொடுத்தால் உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய். அவன் செவிகொடாமற் போனால் இரண்டு மூன்று சாட்சிகளாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக் கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவி கொடாமற் போனால் அதைச் சபைக்குத் தெரியப்படுத்து, சபைக்கும் செவிகொடாமற் போனால் அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக. பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீங்கள்

எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 18;15-18).

யாக்கோபு எழுதுகிறார் : "என் சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தை விட்டு விலகி மோசம் போகும்போது மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக் கடவன் ( யாக்கோபு 5;19,20).

6. ஈசா, மரியாள் மற்றும் பரிசுத்த ஆவியானவரை தெய்வீகத் தன்மைக்குத் தெரிந்தெடுக்க சபையின் ஆலோசனைக் குழுவுக்கு அதிகாரம் உண்டெனில், அவர்களைத் தெய்வீகப் பதவியிலிருந்து அகற்றி வேறு நபர்களை அப்பதவியில் அமர்த்தவும் அவர்களுக்கு அதிகாரம் உண்டல்லவா?

உங்கள், கேள்வியின் இந்தப் பகுதியானது அதிக பரிகாசம் நிறைந்ததும் தேவனுடைய வார்த்தையை அற்பமாக்குகிறதுமாயிருக்கிறது. "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும்... இருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்று சொல்லுகிற தேவ வசனத்துக்கு ( சங்கீதம் 1:1,2) பரியாசக் காரருடைய தொடர்புகள் மற்றும் நடக்கைகள் யாவற்றிற்கும் விலகியிருக்கும்படி பரிசுத்த வேதாகமம் எமக்குக் கட்டளை இடுகிறது.

**கேள்வி :** திருத்துவத்தின் ஆள்த்துவங்களில் ஒருவர் மீது



மட்டும் சிலுவை ஆக்கினை மற்ற இரு ஆளத்துவங்கள் பாதிக்கப்படாத அளவுக்கு சுமத்தப்பட்டதா?

**பதில் :** குர்ஆனை படித்தறிந்த ஒரு பக்தியுள்ள முஸ்லிமிடமிருந்து இதைப் போன்ற ஒரு கேள்வியைக் கேட்க நேரிட்டது மிக விசித்திரமான காரியம். இயேசு கிறிஸ்துவின் சிலுவையாக்கினை குறித்து யூதர்கள் கூறியதை குர்ஆன் நமக்குத் தந்துள்ளது. குர்ஆன் கூறுவதாவது: "மரியமின் மகனான ஈசா என்னும் கிறிஸ்துவை நாங்கள் கொன்றுவிட்டோம் என்று அவர்கள் கூறுவது (ஸுரா அல் நிஸா 157) (4:157)

பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையே முழு உலகத்தின் இரட்சிப்புக்காக ஏற்பட்ட மீட்பின் உடன்படிக்கையின் படி சிலுவை ஆக்கினை திருத்துவத்தின் இரண்டாவது நபரின் மேல் சுமத்தப்பட்டது. அந்த உடன்படிக்கையை நம்முடைய அறிவுக்கு அப்பாற்பட்டது. இந்த மீட்பின் போதனையை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும், ஏனென்றால் அது பரிசுத்த வேதாகமத்தின் சாரமாயிருக்கிறது, ஆம் நாம் ஒரே தேவனை விசுவாசிக்கிறோம். இந்த தேவன் தெய்வீகத்தின் எல்லா குணநலன்களும் உள்ளவரான ஒரு ஆளத்துவமாவார். ஒரே திரியேக தேவனில் மூன்று ஆளத்துவங்கள் உள்ளனர். அவர்கள் வல்லமையிலும் மகிமையிலும் சமமானவர்கள். இப்பெரிய இரகசியத்தை விளக்குவது நமது சக்திக்கு அப்பாற்பட்டது. இப்போதனை கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒரு பகுதியாகும், ஏனெனில் சர்வவல்ல தேவனுடைய புனித நூலானது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இதைப் போதித்திருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் : "அநாதி

தேவனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டதும், சகல ஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது மாயிருக்கிற இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷத்தின்படியே உங்களை ஸ்திரப்படுத்த வல்லவரும் "( ரோமர் 16:25,26) இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு" ( எபேசியர் 3:9) ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவ வசனத்தை (கொலோசெயர் 1:25)

தேவனுடைய திட்டத்தில் மீட்பின் வாக்குறுதி உண்டாயிருந்தது என கிறிஸ்துவானவர் தமது மனித அவதாரத்துக்கு முன்னமே குறிப்பிட்டுள்ளார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவரில் விசுவாசிக்கிற எவரும் இரட்சிக்கப்படும்படி நிறைவேற்ற வேண்டியதாயிருந்த மீட்பின் திட்டத்தைப் பற்றய ஒரு ஒழுங்கான மேற்கண்ணோட்டத்தை வேதாகமம் நமக்குத் தருகிறது. அவையாவன :

1. அவர் நம்முடைய தன்மையை எடுத்துக்கொண்டு ஒரு கன்னிகையினிடத்தில் பிறந்தார். வேதாகமம் கூறுகிறது, "அன்றியும் அவர் ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக, தேவ காரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய



சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது. ... நம்முடைய பெலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாவராகிய பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபரெயர் 2;17;4:15,16)

2. அவர் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவராக பிறக்க வேண்டியிருந்தது. "அப்படியே நாமும் சிறு பிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாய் இருந்தோம்... காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப் பரிமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார் ( கலாத்தியர் 4:3,4) நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங் களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள். அழிக்கிறதற்கல்ல நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் நியாயப்பிரமாணத்தில் உள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 5:17-18).

3. அவர் தம்மை முழு உலகத்தின் பாவங்களுக்கான

பூரணமான பாவ நிவாரண பலியாக தந்தருளினார். "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? அவருக்கு அழகுமில்லை, சௌந்தர்யமுமில்லை; நாம் அவரைப் பார்த்த போது நாம் விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் தள்ளப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவரு மாயிருந்தார். அவரை விட்டு நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம். அவர் அசட்டை பண்ணப் பட்டிருந்தார் ; அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நாமோ அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்கள் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து அவனவன் தன் தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமங் களையும் அவர் மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப் படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும் தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர்



தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார். அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்? ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார். என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். துன்மார்க்கரோடே அவர் பிரேதக்குழியை நியமித்தார்கள். ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார். அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை. கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார். அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும்போது அவர் தமது சந்ததியைக் கண்டு நீடித்த நாட்கள் வாழ்ந்திருப்பார். கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினாலே வாய்க்கும். அவர் தம் ஆத்தும வருத்தத்திற்குப் பின்பு வாழ்வின் ஒளியைக் கண்டு திருப்தியடைவார், என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார். அவர்களுடைய அக்கிர மங்களைத் தாமே சுமந்து கொள்ளுவார். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு அநேகருடைய பாவங்களைத் தாமே சுமந்து, அக்கிரமக் காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் பெரியோர் நடுவில் அவருக்குப் பங்களிப்பேன். அவர் பல வான்களுடன் தமக்குக் கொள்ளைப் பொருள்களைப் பங்கிட்டுக் கொள்வார். "(ஏசாயா 53:1-12)

மேலும் நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரிந்தியர் 5:21) எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி விடுவித்தார்" ( கலாத்தியர் 3:13)" கிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்து தம்மைத்தாமே தேவ னுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக் கொடுத்தது போல நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள் (எபேசியர் 5:2).

பிதாவாகிய தேவன் ஒரு சரீரத்தை அல்லது ஆதாமுடைய சரீரம் போன்ற ஒரு ஆலயத்தை, அழிவற்ற ஒரு சரீரத்தை அவருக்குள் யாதொரு குற்றமும் இல்லாதபடி உருவாக்குவதாக வாக்குறுதி செய்தார். ஆனபடியால் கிறிஸ்துவானவர் உலகத்திலே பிரவேசித்தபோது அவர் "பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை ; எனக்கு ஒரு சரீரத்தை ஆயத்தம் பண்ணினீர் ; சர்வாங்க தகனபலிகளும் பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரிய மானதல்ல என்றார். (எபிரெயர் 10:5)

தேவன் அந்த சரீரத்தை பரிசுத்த ஆவியினாலும் கிருபையினாலும் வல்லமையினாலும் நிரப்பினார். பிதாவானவர் தாம் எப்போதும் குமாரனோடிருந்து அவர் பொல்லாங்கனை ஜெயிக்கவும், சாத்தானின் தலையை தமது காலின்கீழ் மிதிக்கவும் அவருக்கு உதவி செய்வதாக வாக்களித்தார், வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் அவர் குமாரனுக்குக் கையளித்தார். "அப்பொழுது இயேசு அவர்கள் சமீபத்திலே வந்து, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்றார் (மத்தேயு 28:18)"

பிலிப்பியர் 2:6-18 கூறுகிறது, "அவர் தேவனுடைய



ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தம் கீழ்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றுக்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால்கள் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். ஆதலால் எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே ... இப்பொழுதும் அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்.

ஏனெனில், தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லை என்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளிலே எனக்கு உண்டாகும்படி ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு உலகத்திலே சுடர்களைப்போல பிரகாசிக்கிற நீங்கள் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறு முறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள். மேலும் உங்கள் விசுவாசமாகிய பலியின் மேலும் ஊழியத்தின் மேலும்

நான் வார்க்கப்பட்டுப் போனாலும், நான் மகிழ்ந்து உங்களனைவரோடும் கூட சந்தோஷப்படுவேன். இதினிமித்தம் நீங்களும் மகிழ்ந்து என்னோடே கூடச் சந்தோஷப்படுங்கள் யோவான் 5:22 சொல்லுகிறது, மேலும் "பிதாவானவர் தாமே ஒருவரையும் நியாயந்தீர்க்காமல், எல்லாரையும் நியாயந்தீர்க்கும் அதிகாரத்தைக் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்".

விசுவாசிகள் மறுபிறப்படையவும், அவர்களை பிரகாசிப்பிக்கவும், வழிநடத்தவும், தேற்றவும் பரிசுத்தமாக்கவும் பரிசுத்த ஆவியை அனுப்பும்படி தேவன் குமாரனுக்கு எல்லா அதிகாரத்தையும் கொடுத்தார். "நான் பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்ப போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் உங்களிடத்தில் வரும்போது அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். (யோவான் 15:26)

சத்திய ஆவியாகிய அவர் வரும்பொழுது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை வழிநடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் செல்லி இனி வரப்போகிற காரியங்களை அவர் உங்களுக்குக் காண்பிப்பார். (யோவான் 16:13)".

"நீர் அவருக்குத் தந்த யாவருக்கும் நித்திய ஜீவனை அவர் கொடுக்கும்படி, சகல ஜனங்கள் மேலும் அதிகாரத்தை அவருக்கு நீர் தந்திருக்கிறீர்." (யோவான் 17:2)

அவரை விசுவாசிக்கிறவர்கள் பிற்பாடு பெற்றுக் கொள்ளப்போகும் ஆவியைக் குறித்து அவர் இதைச் சொன்னார். இயேசு மகிமைப்படாதிருந்த படியினால் பரிசுத்த ஆவி அருளப்படாமலிருந்தது (யோவான் 7.39)

"அவர் தேவனுடைய வலது பாரிசத்துக்கு உயர்த்தப்பட்டு,



வாக்குறுதி செய்யப்பட்டிருந்த பரிசுத்த ஆவியை அவரிடமிருந்து பெற்று, நீங்கள் இப்போது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். (அப்போஸ்தலர் 2:33)

பிதாவானவர் குமாரன் மூலமாய் மகிமைப்படுத்தப்பட்டார் ; அவர் மூலமாய், அவருக்குள் மற்றும் அவருடைய சபையில் வெளிப்பட்டார். தேவத்துவத்தின் எல்லாக் குணநலன்களும் உடையவர் "கிறிஸ்துவில் முதலில் விசுவாசம் வைத்த நாம் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக இருக்கும்படி" ( எபேசியர் 1:11). "அவர் தம் ஆத்தும வருத்தத்திற்குப் பின்பு வாழ்வின் ஒளியைக் கண்டு திருப்தியடைவார். என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார். அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்ளுவார்." (ஏசாயா 53:11)

திரித்துவத்தின் ஆள்தத்துவங்கிடையேயுள்ள ஒரு ஒப்பந்தத்திலிருந்து மீட்பு பாய்ந்தோடுகிறது ! மீட்பின் மூலம் இரட்சிப்பின் செயல் குமாரனாகிய தேவனின் மனித அவதாரத்துக்கு முன்பே தேவனுடைய மனதில் நிறைவேறிவிட்டது என்று பரிசுத்த வேதாகமம் உறுதி செய்கிறது. "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்தில் இருக்கிறவைகளும் பூலோகத்தில் இருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று தமக்குள்ளே தீர்மானத்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மாத்தின்படியே

நாங்கள் முன்குறிக்கப்பட்டு அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்". (எபேசியர் 1:9-12).

"தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின் படியே உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங் களுக்கும் அவருடைய அனந்த ஞானமானது சபையின் மூலம் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதி காலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு இந்தக்கிருபை எனக்கு அளிக்கப் பட்டிருக்கிறது (எபேசியர் 3:9-11)

மீட்பின் மூலம் இரட்சிக்கும் தேவனுடைய திட்டத்தின் செயல்முறைகள் மூன்று ;

1. பலியின் தெரிவு மற்றும் நியமனம்
2. இதற்கு இசைவாக திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏதுவான சூழ்நிலைகளை ஆயத்தப்படுத்துதல்
3. ஏதுவான சூழ்நிலைகளை தமது முடிவான நோக்கத்துக்காகப் பயன்படுத்துதல். இவையாவும் மீட்பின் திட்டத்தில் நிறைவேறின. தேவன் ஒரு கிரமமான பேரண்டத்தைச் சிருஷ்டித்தார். வானத்து விண்மீன்கள் சாதாரண பார்வைக்கு சரியான கிரமமற்றுத் தோன்றுகின்றன, ஆனால் ஒரு வானியல் அறிஞரின் கண்களில் அற்புதமான இசைவமைப்பாக அவை தோன்றுகின்றன.

மகிமைக்குப் பாத்திரராகிய சிருஷ்டிகர் நம்முடைய



சிருஷ்டிப்புகள் யாவிலும் கிரமம் மற்றும் இசைவமைப்பின் கர்த்தராக இருக்கிறார். இயற்கையுலகிலேயே தேவன் இதைச் செய்திருக்கிறார் எனில் ஆவிக்குரிய உலகிலே அதினும் அதிகமானவைகளையும் மேலானவைகளையும் செய்வார். தேவனுடைய செயல் ஏற்பாடுகள் யாவும் கிருபையினாலே நிறைவேற்றப்பட்டன என்று பரிசுத்த வேதாகமம் நமக்கு தெளிவுபடுத்துகிறது தமது சித்தத்தின் ஆலோசனைபடியே தேவன் எல்லாவற்றையும் செய்தார் என்று வேதாகமம் கூறுகிறது. "தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன் குறிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும் படி தெரிந்து கொள்ளப்பட்டோம். (எபேசியர் 1:12)".

தேவன் ஆவிக்குரிய விஷயங்களைக்குறித்து நமக்கு என்ன சொல்கிறார் என்பதை நாம் வேதத்தை வாசித்துக் கண்டுபிடித்து மீட்பு என்பது என்ன என்பதை அனுபவத்தால் புரிந்து கொள்ள வேண்டும். உலகமனைத்தும் இரட்சிக்கப் படுவது அவசியம் என்பதில் ஐயம் ஏதுமில்லை; "எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமை அற்றுப் போனார்கள் (ரோமர் 3:23) பவுல் கூறுகிறார். பவுலுக்கு வெகுகாலம் முன்பே தீர்க்கதரிசியாகிய தாவீது கூறினார். "எல்லாரும் வழிவிலகி ஏகமாய்க் கெட்டுப் போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை ஒருவனாகிலும் இல்லை" (சங்கீதம் 14:3)

ஏசாயா தீர்க்கதரிசி எழுதினார்: "நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து அவனவன் தன் தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமங்களையும் அவர் மேல் விழப்பண்ணினார். (ஏசாயா 53:6)

இரட்சிப்பு இவ்வளவு அதி முக்கியமானது, மனிதனின் வாழ்க்கைக்கும் நித்தியத்துக்கும் அத்தியாவசியமானது எனில், இரட்சிப்பாவது என்ன? நாம் எதிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டும்? என்று நாம் கேட்க வேண்டும். கிறிஸ்தவம் ஒரு இரட்சிப்பின் மார்க்கம் என்பது மிகத் தெளிவு. முழு உலகத்தின் இரட்சகரான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே கிறிஸ்தவத்தை நிறுவி கட்டியெழுப்பியவர்.

நாம் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட வேண்டும் என்பதைச் சுவிசேஷங்கள் பதிலாகத் தருகின்றன. தேவதூதன் மரியாளிடம் : "நீ ஒரு குமாரனைப் பெறுவாய் ; அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக ; ஏனெனில் அவர் தம்முடைய ஜனங்களின் பாவங்களிலிருந்து அவர்களை இரட்சிப்பார்". (மத்தேயு 1:21)

யோவான் ஸ்நானன் இயேசுவைக் குறித்து "இதோ உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக் குட்டி" என்று கூறுகிறார்.

இயேசு கிறிஸ்து தம்மைக் குறித்துக் கூறுகிறார்; "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார்" ( லூக்கா 19:10). பவுல் எழுதினார் "பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார் என்ற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது அவர்களில் பிரதான பாவி நான்" (1 தீமோத்தேயு 1:15).

மனிதனின் இரட்சிப்பு மீட்பின் அடிப்படையிலேயே இருக்கிறது என்று பரிசுத்த வேதாகமம் போதிக்கிறது. ஆகவே இரட்சிப்பு என்பது வெறும் தத்துவ ஞானமல்ல, ஆனால் விசுவாசிக்கிற யாவருடைய பாவங்களையும் எடுத்துப்போட மெய்யான, தவிர்க்க முடியாத ஒரே வழியாகும். இந்த



அடித்தளத்தின் மேல் அமையாத எந்த தத்துவமும் அல்லது உபதேசமும் பிழையானதும், விலையற்றதும் ஆரோக்கியமற்றதுமாகும்.

**கேள்வி :** ஈசா ( இயேசு ) ஏன் ஆதாமின் பாவங்களுக்குப் பொறுப்பாளியாகிறார் என்று கூறுகிறீர்கள்; இவருடைய சந்ததியாரின் பாவங்களுக்காக அவர் ஏன் பாவநிவிர்த்தி செய்ய வேண்டும்?

**பதில் :** காரியங்களை அவற்றின் மெய்யான பெயர்களால் அழைத்தாலொழிய எவரும் சத்தியத்தைப் புரிந்துகொள்ள இயலாது. ஆகவே கிறிஸ்துவின் பெயர் இயேசு ஆகும். ஈசா அல்ல, என்று உங்களுக்கு நினைப்பூட்ட விழைகிறேன். காபிரியேல் என்னும் தேவதூதன் கன்னி மரியாளை நோக்கி : நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்; அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமான தேவனுடைய குமாரன் என்னப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குத் தந்தருளுவார் (லூக்கா 1:31,32).

தேவன் மனிதனைத் தமது சாயலில் நீதியிலும் பரிசுத்தத்திலும் சிருஷ்டித்தார் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது, தம்முடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும் என்ற நிபந்தனையுடன் நித்திய ஜீவனின் உடன்படிக்கையை மனிதனுக்கு அவர் கொடுத்தார். ஆதியாகம புத்தகம் சொல்வதைக் கவனியுங்கள்: "தேவன் தம்முடைய சாயலாக

மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார் ; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி : நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்." (ஆதியாகமம் 1:27,28)

"தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொணடுவந்து அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி, நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் ; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதியாகமம் 2:15-17)

ஆதாம் தேவனுடைய பரதீசிலே களங்கமற்ற நிலையில் சிறிதுகாலம் வாழ்ந்தார், கர்த்தராகிய தேவனுடன் ஆவிக்குரிய ஐக்கியத்தை அனுபவித்தார். அந்த ஆவிக்குரிய ஐக்கியம் ஆதாமின் இதயத்தையும் மனதையும் பெரும் மகிழ்ச்சியினால் நிரப்பிற்று.

ஆதாம் எளிமையானவராயிருந்தார். எளிமை ஒரு நபரை தேவனுக்குப் பக்கமாய்க் கொண்டு வருகிறது ஒரு நீதிமானாக ஆதாம் இருப்பினும் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தனது நிலையை அவர் காத்துக்கொள்வாரா என்று காண அவர் சோதிக்கப்படும்படி அவரைத் தேவன் அனுமதிக்க வேண்டியதாயிற்று. ஆதாம் செய்யக்கூடிய சரியான காரியம்



எது அவருக்கு விலக்கப்பட்டது எது என்பவற்றுக்கு இடையே ஒரு எல்லையை தேவனுடைய கட்டளையானது ஏற்படுத்தியது. வேறு வார்த்தையில் சொல்வதனால், தேவனுடைய நோக்கம் நம்முடைய முற்பிதாவுக்கு சரியானது மற்றும் தவறானதற்கு இடையே ஒரு தடுப்பு அல்லது பெரும் பிளவு உள்ளது என்பதைக் கற்பிப்பதேயாகும்.

ஏவாளிடம், ஒரு எளிய ஆனால் வஞ்சனை நிறைந்த சர்ப்பம் கேள்வியைக் கேட்ட ஏவாளிடமிருந்துதான் சோதனை வந்தது. அவன் ஏவாளிடம்: "நீங்கள் தோட்டத்திலுள்ள எந்த விருட்சத்தின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?" என்று கேட்டது ( ஆதியாகமம் 3:1). "உங்களை தமது பேரன்பினால் நேசிக்கும், தம்முடைய நன்மைகளால் உங்களை மூடியிருக்கும், இந்த எல்லா மகிழ்ச்சியையும் தந்திருக்கும் தேவன் இந்தத் தோட்டத்தில் உங்களுக்குக் கொடுத்திருக்கும் மரங்களின் கனியைப் புசிக்கக்கூடாது என்று தடுப்பது சரியா? என்று அவன் கேட்பது போல அக்கேள்வி இருந்தது.

சாத்தானுடைய தந்திரமான வார்த்தைகளுக்கு ஏவாள் செவிகொடுத்து : "நாங்கள் தோட்டத்திலுள்ள மரங்களின் கனியைப் புசிக்கலாம், ஆனால், நீங்கள் தோட்டத்தின் நடுவிலிருக்கும் மரத்தின் கனியைப் புசிக்கவோ அல்லது தொடவோ கூடாது இல்லாவிடில் நீங்கள் மரித்துப்போவீர்கள், என்று தேவன் கூறியிருக்கிறார் (ஆதியாகமம் 3:2-3) என்று பதில் கூறினார். தேவனுடைய வார்த்தைகளுடன் "அதைத் தொடக் கூடாது, என்ற வார்த்தையைக் கூட்டி ஏவாள் பதில் அளிப்பதைக் கவனியுங்கள். தேவன் சொல்லாத ஒன்றை அவர் கூறுகிறார். தேவனுடைய நன்மையை ஏவாள் இன்னும்

கூடுதலாகச் சந்தேகிக்கும்படியாக, தான் முன்பு சொன்னதை இப்போது விவரித்துச் சொல்கிறான்: "நீங்கள் அதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்பட்டு, நன்மை தீமை அறியத்தக்கதாக நீங்கள் தேவனைப் போலாவீர்கள் என்ற தேவன் அறிவார் (ஆதியாகமம் 3:5)

அதன் விளைவாக அந்தத் தந்திரக்கார எதிரிக்குச் செவிகொடுத்து ஏவாள் விழுந்துபோனார். அந்த விருட்சத்தின் கனி புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கதுமாயிருக்கிறது என்று ஏவாள் கண்டு, தன் கையை நீட்டி அதைப் பறித்துப் புசித்து. தன் புருஷனுக்கும் கொடுத்தாள், அவனும் அதைப் புசித்தான். அப்பொழுது இருவரின் கண்களும் திறக்கப்பட்டு தாங்கள் நிர்வாணிகள் என்று உணர்ந்து, அத்தியிலைகளைத் தைத்து தங்களுக்கு கச்சையை உண்டாக்கினார்கள் ( ஆதி யாகமம் 3:6,7) ஆதிப்பெற்றோரின் விழுகை அப்படியானதாயிருந்தது. தேவனுடைய உண்மையையும் நன்மையையும் சந்தேகித்து அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமற் போனதால் ஏவாள் விழுந்து போனார். ஏவாள் தேவனைப் போல இருக்கும்படி விரும்பினதால் இது நிகழ்ந்தது. தான் தேவ கட்டளையை மீறினதில் திருப்தி அடையாத அவர் தன் கணவனையும் அதற்கு உட்படச் செய்தார். இருவரும் தேவனுக்குக் கீழ்ப்படியாமை, காண்பித்து விழுந்த மனுக்குல வரலாற்றில் மிகப்பெரும் பாவத்தைச் செய்தனர். பாவம் என்றால் இலக்கைத் தவரவிடுவது ஆகும். "பாவஞ் செய்கிறவன் எவனும் நியாயப் பிரமாணத்தை மீறுகிறான் ; நியாயப் பிரமாணத்தை மீறுவதே பாவம் (1 யோவான் 3:4)"



"பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் வருகிற நித்திய ஜீவன்" (ரோமர் 6:23)

தேவன் தம்முடைய வார்த்தையின் படியே அவர்களைத் தண்டித்தார். "ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்". (ஆதியாகமம் 2:17)

இங்கே குறிப்பிடப்பட்ட மரணம் கல்லறையில் வைக்கப்படுவதற்கான சரீர மரணம் அல்ல, பரிசுத்த தேவனுடன் ஐக்கியம் வைக்க முடியாமல் ஆத்துமா பிரிக்கப்படும் ஆவிக்குரிய மரணமாகும். அதன் வினளவு மனித ஆத்துமாவின் நித்தியமான பாடு மற்றும் வேதனை இருவருமே தண்டிக்கப்பட வேண்டியதாயிருந்தது. பின்பு அவர் ஆதாமை நோக்கி : நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவி கொடுத்து, புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே பூமி உன்னிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும், நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும் வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால் நீ பூமிக்குத் திரும்பு மட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய். நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் (ஆதியாகமம் 3:17-19)

அதற்குப் பின்பு தேவன் ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றினார். அவர்கள்

பரதீசுக்கு வெளியே வாழ்ந்து பாடு அனுபவித்து பிள்ளைகளையும் பெற்றார்கள். அவர்கள் தாங்கள் மட்டும் பாவிகளானார்கள் என்றில்லாமல் வேதம் கூறுவதாவது: "அன்றியும் ஒரு மனுஷன் மூலமாகப் பாவமும், பாவத்தின் மூலமாக மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுசரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது (ரோமர் 5:12)

ஆதாமின் பாவம் நம்மீது விழவில்லை என்று நீங்கள் வீணாகச் சொல்கிறீர்கள். தேவனோடு உடன்படிக்கை செய்த போது ஆதாம் மனுக்குலத்தின் பிரதிநிதியாய் இருக்கவில்லையா? தேவன் ஆதாமுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் யாவும் அவருடைய சந்ததியாருக்கும் உரியவைகளே.

தாவீது கூறும் வார்த்தைகள் இதை உறுதி செய்கின்றன. "மெய்யாகவே நான் பாவத்தில் உருவானேன்; என் தாயார் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தார் (சங்கீதம் 51:5)

ஒரு புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் எழுதுகிறார்: "மனிதன் இன்னமும் கொலைகாரனாக, துன்புறுத்து கிறவனாக இருக்கிறான். பின்னர் தான் செய்த தீச்செயல்களை எண்ணி அழுது தான் தீங்கிழைத்தவர்களுடைய கல்லறைகளைக் கட்டுகிறான்... மனிதன் தன் சொந்த ஆத்துமாவை ஆழ்ந்தாழ்ந்து நோக்கி பாவப்பிரமாணம் தனக்குள் வாழ்வதை அறிந்து கொண்டால் போதும்.

தீர்க்கதரிசியாகிய தாவீது கூறுகிறார்: "துன்மார்க்கன் தன் உள்ளத்திலே தேவன் இல்லை", என்று சொல்லுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, வீணானவைகளைச் செய்கிறார்கள். நன்மை செய்கிறவன் ஒருவனாகிலும் இல்லை:



( சங்கீதம் 14:1) ஏசாயா தீர்க்கதரிசி மனிதனை இவ்வாறு வர்ணிக்கிறார் : "அவர்களுடைய வலைபின்னல்கள் உடுத்திக்கொள்வதற்கு உதவாதவை ; தாங்கள் உருவாக்குகிறவைகளைக் கொண்டு அவர்கள் தங்களை மூடிக்கொள்ள முடியாது. அவர்களுடைய கிரியைகள் பொல்லாதவைகள் அவர்களுடைய கைகளில் கொடுமையின் செயல்கள் உண்டு. அவர்கள் கால்கள் பாவஞ்செய்ய தீவிரிக்கின்றன ; குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்த விரைந்தோடுகிறார்கள். அவர்களுடைய எண்ணங்கள் பொல்லாதவைகள் ; அழிவும் நாசமும் அவர்கள் வழிகளில் இருக்கின்றன. சமாதான வழியை அவர்கள் அறியார்கள் அவர்களுடைய பாதைகளில் நியாயம் இல்லை ; தங்களைக் கோணலான வழிகளில் திருப்பிக் கொண்டார்கள் ; அவைகளில் நடக்கிற எவனும் சமாதானத்தை அறியான்". (ஏசாயா 59:6-8)

கண்ணீரின் தீர்க்கதரிசியாகிய எரேமியா "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாய்" இருக்கின்றது ; அதைப் புரிந்து கொள்ள யாரால் முடியும்?. (எரேமியா 17:9) என்று மனித இருதயத்தைப் படம்பிடிக்கிறார்.

குற்றத்தின் வரலாற்றைத் திரும்பிப் பார்ப்போமானால் மனிதர் தங்கள் நற்சுபாவத்தை இழந்து, காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு எதிராகப் புரிந்த முதலாவது குற்றத்திலிருந்து வந்த கேடுள்ள சுபாவத்தைத் தங்களில் தரித்துக் கொண்டனர் என்பதைக் காணும்போது வருத்தம் உண்டாகிறது. அவன் ஏன் அவனைக் கொன்றான்? நம்முடைய சுபாவம் பொல்லாததானபடியால் அல்லவா? ஒரு

நாடு இன்னொரு நாட்டிற்கு எதிராக ஏன் போர் செய்கிறது? மனித இருதயம் பொல்லாததாய் இருக்கிறபடியால் தான்.

அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார். "பாவத்தின் சம்பளம் மரணம் ; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் வருகிற நித்திய ஜீவன்" (ரோமர் 6:23)

எசேக்கியேல் தீர்க்கதரிசி கூறுகிறார் : "பாவஞ்செய்கிற ஆத்துமா சாகும். குமாரன் தன் தகப்பனுடைய குற்றத்தைச் சுமப்பதில்லை ; தகப்பனும் தன் குமாரனுடைய குற்றத்தைச் சமப்பதில்லை. நீதிமானுடைய நீதி அவனுக்கு எண்ணப்படும் ; துன்பமார்க்கனுடைய பொல்லாப்பு அவனுக்கு எதிராக எண்ணப்படும்." (எசேக்கியேல் 18;20)

ஆதாமும் ஏவாளும் விழுந்தபோது ஆவிக்குரிய மரணத்தைச் சந்தித்தனர். ஆவிக்குரியபடி தேவனைவிட்டு பிரிக்கப்பட்டனர். குளோனியஸ் கூறுகிறார்: "...ஆதாமும் ஏவாளும் தங்கள் விழுகையின் பலனாக தேவனை விட்டு பிரிக்கப்பட்டனர். தங்கள் அன்புள்ள சிருஷ்டிகரின் ஆவிக்குரிய ஐக்கியத்தை அவர்கள் இழந்தனர். அவருடைய சமுகத்தில் இருப்பதற்கும் அவர்கள் வெட்கப்பட்டனர்".

அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் "பகலின் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்திலே உலாவுகிற தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கேட்டு, கர்த்தராகிய தேவனுக்கு விலகி தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளிந்து கொண்டார்கள்." (ஆதியாகமம் 3:8)

அவர்கள் வெட்கப்பட்டது மட்டுமல்ல, பயப்படவும் செய்தனர். "ஆனால் உங்கள் அக்கிரமங்களே உங்களை உங்கள் தேவனை விட்டுப் பிரித்துவிட்டன. அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு உங்கள் பாவங்களே உங்களைவிட்டு அவர் முகத்தை மறைத்துவிட்டன". (ஏசாயா 59:2)



அதன் விளைவாக நம் ஆதிப்பெற்றோருக்கு பயங்கர நியாயத்தீர்ப்பு உண்டானது. "நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை நீ புசிக்க வேண்டாம். நீ அதைப் புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்" (ஆதியாகமம் 2:17)

மனுக்குலம் நம்பிக்கையை இழந்துவிட்டதா? மனிதன் பரதீசை இழந்த போது அவனுடைய நம்பிக்கை மரித்துப்போய்விட்டதா? இல்லை! நம்பிக்கை மரிக்கவில்லை. நம்முடைய தேவன் அன்புள்ளவர், நீதியுள்ள நியாயாதிபதி. தம் நித்திய அன்பினால் தேவன் ஆதாமை அழைத்தார். ஆதாமே நீ ஏன் என்னை விட்டு ஓடினாய்? என்னை மகிழ்ச்சியோடு சந்திப்பாயே! தேவன் தம் மிகுந்த அன்பினாலே மனிதனைத் தமது ஐக்கியத்தில் திரும்பக் கொண்டுவர அவனைத் தேடுகிறார், ஏனெனில் அவனைத் தமது சொந்தச் சாயலிலே அவர் சிருஷ்டித்திருந்தார்.

ஏற்ற வேளையில் ஆதாமின் பிள்ளைகளுக்கு பெரும் இரட்சிப்பு மற்றும் மீட்பின் திட்டத்தை தேவன் உருவாக்கினார்.

## தேவனுடைய அன்பு குறுக்கிடுகிறது

தேவன் குணநலன்கள் மற்றும் தன்மைகள் யாவிலும் பூரணமானவர். அவர் நீதியுள்ளவர் மற்றும் சத்தியமுள்ளவர்.

மனிதன் நரக அக்கினியிலே என்றைக்குமாகத் தண்டிக்கப்பட வேண்டியவனாயிருந்தான். தேவன் நீதியுள்ளவர், சத்தியமுள்ளவர் மட்டுமல்ல அன்பாகவும் இருக்கிறார். அவருடைய அன்புக்கு மன்னிப்பதில் எல்லையேதுமில்லை. எல்லா இனத்திலும் மொழிப் பிரிவுகளிலுமுள்ள எல்லா மனுஷரையும் இந்த அன்பு அரவணைத்துக் கொள்கிறது. நம்முடைய சிருஷ்டிகர் தமது இரக்கத்தில் மிகுந்த ஐசுவரியமுள்ளவர். எரேமியா

தீர்க்கதரிசனத்தில் அவர் அறிவிக்கிறார்: "கர்த்தர் கடந்த நாட்களிலே நமக்குத் தரிசனமாகி, அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன் ; காருண்யத்தினால் உன்னை இழுத்துக் கொண்டேன், என்றார்". (எரேமியா 31:3)

தேவனுடைய பெரிதான அன்பு, மனிதன் மீட்படைந்து என்றைக்கும் மகிமையில் வாழும்படியாக இரட்சிப்பை ஆயத்தமாக்கிற்று. எசேக்கியேல் தீர்க்கதரிசி கூறுகிறார். "துன்மார்க்கனுடைய சாவில் நான் பிரியப்படுகிறதில்லை, தன் வழிகளை விட்டு திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று இராஜரீகமுள்ள கர்த்தர் கூறுகிறார். திரும்புங்கள்! உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள்! இஸ்ரவேல் வீட்டாரே நீங்கள் ஏன் சாகவேண்டும்? என்று அவர்களுக்குச் சொல்வாயாக" (எசேக்கியேல் 33:11)

தேவன் நீதியுள்ளவர் என்றும்,அவருடைய நீதி ஒவ்வொரு பாவியையும் தண்டிக்க வேண்டும் என்றும் பரிசுத்த வேதாகமம் போதிக்கிறது. நம்முடைய கர்தத்தராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவக்கடன்கள் யாவற்றிற்கும் கிரயம் செலுத்தி, நமக்குப் பதிலாகக தம்மைத்தாமே ஒரு பலியாக அன்புள்ள பிதாவாகிய தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்து சிலுவையில் பலியனாதினால் தேவனுடைய நீதியானது தனது இயல்பான முறைமையின் செயல்பட்டு பாவிகளை நீதிமான்களாக்கியது. ஒரு குற்றவாளிக்காக வழக்காடிய ஒரு புகழ்பெற்ற வழக்கறிஞர் வாதங்களை முடிக்கையில் கூறினார், "நான் ஒரு புத்தகத்தில் படித்தேன், தேவன் தமது நித்தியமான ஆலோசனையின்படி நீதியையும் சத்தியத்தையும் பார்த்து" நான் மனிதனை படைக்கட்டுமா? என்று கேட்டார். நீதி



சொன்னது : "வேண்டாம், மனிதர் உனது பிரமாணங்களையெல்லாம் மிதித்துப்போட்டு அவைகளைப் பரிகசிப்பான்: அடுத்து சத்தியம் சொன்னது: வேண்டாம், அவனைச் சிருஷ்டிக்காதீர்கள், ஏனெனில் அவன் அருவருப்பாய் வாழ்ந்து மாயையைப் பின்பற்றுவான் அப்பொழுது அன்பு சொன்னது, இவையெல்லாம் நிகழும் என்று எனக்குத் தெரியும், ஆனால் அவனுடைய குற்றங்கள் மற்றும் பொல்லாங்குகளுடன் அவனைப் பொறுப்பேற்று இருளான பாதைகள் யாவிலும் நடத்தி அவனை உம்மிடம் திரும்பக் கொண்டுவர ஆயத்தமாயுள்ளேன்".

தேவன் மனிதனை முழுமையாய் படைத்தார், ஆனால் கீழ்ப்படியாமையின் மூலம் அவன் பாவத்தில் விழுந்தான். தேவனுடைய அன்பு அவன் மீது பொறுமை காண்பித்து, விழுந்துபோன மனிதனுக்கு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக முழுமையான பூரணமான ஒரு இரட்சிப்பை ஆயத்தமாக்கினார்.

தேவனுடைய பெரிதான இரட்சிப்பையும், அதைக் கண்டடையத்தக்க மெய்யான வழியையும் மீண்டும் நாங்கள் நின்று சிந்தித்துப் பார்க்கும்படி உங்கள் கேள்வி எங்களைத் தூண்டியது. மனுக்குலத்தின் வாழ்விலே தற்போது இந்த இரட்சிப்பை எப்படி நாம் காண்கிறோம்? மெய்யான கிறிஸ்தவத்தை நீங்கள் புரிந்து கொள்ள தேவன் விழுந்துபோன மனிதனுக்காக ஏற்படுத்திய மீட்பை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தேவனுடைய மனுஷனாகிய மோசேக்கு வெளிப்படுத்தப்பட்ட சிருஷ்டிப்பின் விவரத்தை நாம்

வாசிக்கும்போது, ஆதாம் ஏவாள் இருவரும் பாவஞ்செய்தபின்பு அவர்களது நிர்வாணத்தை மூடுவதற்கு செய்தது என்ன என்பதை எண்ணிப்பார்க்கும் போது, தேவனுடைய அன்பின் மெய்த்தன்மையை நாம் காணலாம்.

வேதாகமம் கூறுகிறது: "தேவனாகிய கர்த்தர் தோல் உடைகளை உண்டுபண்ணி அவற்றை ஆதாமுக்கும் அவன் மனைவியாகிய ஏவாளுக்கும் உடுத்தினார் (ஆதியாகமம் 3:21)".

இந்த நிகழ்வானது முதன் முதலில் ஏதேன் தோட்டத்தில் தான் மிருகங்கள் கொல்லப்பட்டன என்பதை நிரூபிக்கின்றது. ஜலப்பிரளயத்திற்குப் பிறகு மனிதன் மிருகங்களின் இறைச்சி சாப்பிட ஆரம்பித்தான் (ஆதியாகமம் 9:1-3). இது மனிதனின் விழுகைக்குப் பின் 500 ஆண்டுகள் கழித்து நிகழ்ந்ததாகும். அதற்கு முன் மனிதன் தாவர உணவு மட்டுமே உண்டு வந்தான். பாவம் உலகத்தில் பிரவேசிக்கும்வரை மிருகங்கள் கொல்லப்படவில்லை. ஆதாம் பாவஞ்செய்த பின்பு "இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவநிவர்த்தி இல்லை" (எபிரெயர் 9:22) என்பதை ஆதாமுக்குப் போதிக்கும்படி தோல் உடையை அவர்களுக்குத் தேவன் கொடுத்தார். இதன் மூலமாக பிற்பாடு பழைய ஏற்பாட்டுக் காலத்தில் செலுத்தப்பட்ட பாவநிவாரண பலிகளின் உடன்படிக்கையை அடையாளமாகக் காட்டினார். எல்லாப் பலிகளுமே தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்னடையாளங்கள் தான். முழு உலகத்தின் பாவங்களுக்காக தம்முடைய சொந்தச் சரீரத்தைப் பலியாக்கினார்.

ஆபேல் செலுத்தின இரத்தம் சிந்துதலின் பலி வரவிருந்த மீட்பின் ஒரு நிழலாட்டமே. அந்தப் பலி தேவனுடைய திட்டத்துக்கு



ஏற்றவாறு இருந்தது. ஆபேல் மந்தையின் தலையீற்றுகளில் கொழுமையானவைகள் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். (ஆதியாகமம் 4:4)

ஆபிரகாமுக்கு அவருடைய மகனாகிய ஈசாக்கை மீட்க தேவன் வழங்கிய ஆட்டுக்கடா, உலகத்தோற்றமுதல் தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட மிகப்பெரிய மீட்கும் பொருளானவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஓர் அடையாளமே. "இதற்குப் பின்பு தேவன் ஆபிரகாமைச் சோதித்தார் : எப்படியெனில் அவர் அவனை நோக்கி ஆபிரகாமே என்றார், அவன் இதோ அடியேன் என்றான். அப்பொழுது அவர் ; உன் புத்திரனும் உன் ஏக சுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு மோரியா தேசத்துக்குப் போய் அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகன பலியாகப் பலியிடு என்றார்.

ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து தன் கழுதையின் மேல் சேணம்கட்டி தன் வேலைக்காரரில் இரண்டுபேரை தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு தகன பலிக்குக் கட்டைகளையும் பிளந்து கொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப் போனான். மூன்றாம் நாளில் ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து தூரத்திலே அந்த இடத்தைக் கண்டான். அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரை நோக்கி: நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள். நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய்த் தொழுது கொண்டு உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம் என்றான். ஆபிரகாம் தகனபலிக்குக் கட்டைகளை

எடுத்து தன் குமாரனாகிய ஈசாக்கின் மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டான். இருவரும் கூடிப்போனார்கள். அப்பொழுது, ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி ... ''இதோ நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே? என்றான். அதற்கு ஆபிரகாம் என் மகனே தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார்'' என்றான். அப்புறம் இருவரும் கூடிப்போய் தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த இடத்துக்கு வந்தார்கள். அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின் மேல் அவனை கிடத்தினான். பின்பு ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டி கத்தியை எடுத்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து ''ஆபிரகாமே ஆபிரகாமே'' என்று கூப்பிட்டார். அவன் ''இதோஅடியான்'' என்றான். அப்பொழுது அவர், ''பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரனென்றும் உன் ஏகசுதனென்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்த படியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்'' என்றார். ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும் போது, இதோ பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைப் பிடித்து, அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான்". (ஆதியாகமம் 22:1-13)

பவுல் அப்போஸ்தலன் எழுதினார். "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே". (1கொரிந்தியர் 5:7 b)



சரித்திரத்தை நாம் திரும்பிப் பார்க்கும்போது தேவனுடைய மக்கள் மோசேக்கு கையளிக்கப்பட்ட நியாயப் பிரமாணத்தின் நிழலில் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்தார்கள் எனக் காண்கிறோம். தங்களுடைய பாவங்களுக்கு மிருக பலிகள் மூலமாக பாவநிவிர்த்தி செய்ய நியாயப்பிரமணம் அவர்களுக்கு வாய்ப்பளித்தது. தேவனுடைய நியாயத்தீர்ப்பு மிகக் கடுமையாக இருந்தது. நியாயப்பிரமாணத்தை மீறின ஒவ்வொருவரையும் அவர் தண்டித்தார்.

தேவன் பலியை நியமித்ததன் நோக்கம் ஒரு பாவ ஜீவிக்குப் பதிலாக ஒரு ஜீவன் தேவனுக்கு அர்பணிக்கப்படுவது ஒரு குற்றமுள்ள மனிதனின் ஜீவனுக்குப் பதிலாக ஒரு குற்றமற்ற மிருகத்தின் உயிர் பலியாக்கப்படுவது ஆகும். வேதாகமம் கூறுகிறது: "கர்த்தர் இந்த வார்த்தைகளை யோபோடு பேசினபின்பு தேமானியனாகிய எலிப்பாஸை நோக்கி, “"உன் மேலும் உன் இரண்டு சிநேகிதர் மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது, என் தாசனாகிய யோபு பேசியது போல நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப்பேசவில்லை. இப்போதும் நீங்கள் ஏழு காளைகளையும், ஏழு ஆட்டுக்கடாக்களையும் எடுத்துக்கொண்டு என் தாசனாகிய யோபிடம் போய் உங்களுக்காகத் தகன பலியிடுங்கள். என் தாசனாகிய யோபு உங்களுக்காக வேண்டுதல் செய்வான். அவன் ஜெபத்தை நான் ஏற்றுகொண்டு, உங்களை உங்கள் புத்தியீனத்துக்குத் தக்கதாக நடத்தாதிருப்பேன். என் தாசனாகிய யோபு பேசினதுபோல என்னைக் குறித்து நீங்கள் நிதானமாய்ப் பேசவில்லை என்றார் (யோபு 42:7,8)".

மோசே கட்டளையிட்ட பலிகள் பல வகையானவை

எல்லாமே இரத்தத்தினால் பாவ நிவர்த்தி செய்வதாக இருந்தன. எபிரெயர் நிருபம் கூறுகிறது. "நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது (எபிரெயர் 9:22)".

யாத்திராகமம் இந்த அடையாளத்தை இவ்வாறு விவரிக்கிறது: "மோசே கர்த்தருடைய வார்த்தைகளை எல்லாம் எழுதிவைத்து, அதிகாலமே எழுந்து, மலையின் அடியில் ஒரு பலிபீடத்தைக் கட்டி, இஸ்ரவேலருடைய பன்னிரண்டு கோத்திரங்களினின் இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களை நிறுத்தினான். இஸ்ரவேல் புத்திரரின் வாலிபரை அனுப்பினான். அவர்கள் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தி, கர்த்தருக்குச் சமாதானபலிகளாகக் காளைகளைப் பலியிட்டார்கள். அப்பொழுது மோசே அந்த இரத்தத்தில் பாதி எடுத்து பாத்திரங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளித்து உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து ஜனங்களின் காதுகேட்க வாசித்தான். அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள். அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து ஜனங்களின் மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங் குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்". (யாத்திராகமம 24:4-8) பரிசுத்த வேதாகமத்தில் பலிகளின் வரலாற்றைப் படித்துப் பார்க்கும்போது. எல்லாப் பலிகளுமே கிறிஸ்துவுக்கும் உலகத்தின் பாவங்களுக்காக அவர் நிறைவேற்றின பலிக்கும் அடையாளங்களே என்பது தெளிவாகிறது.

எபிரெய நிருபம் இதைக்குறித்து இவ்வாறு



சாட்சிகொடுக்கிறது. "எந்தப் பிரதான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான். ஆகவே செலுத்தப்படுவதற்கு ஏதோ ஒன்று தேவையாயிருக்கிறது". (எபிரெயர் 8:3) ஆசாரியனைக் குறித்தும் எபிரெய நிருபம் கூறுகிறது: "அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிற -வனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்தி செய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்துகிறவனாயும் நிற்பான்". (எபிரெயர் 10:11)

தாங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மேசியா வரும் வரைக்கும் அந்தப் பலிகளைத் தொடர்ந்து ஆசாரியர்கள் செலுத்த வேண்டியதாயிருந்தது.

கிறிஸ்துவின் பலி மீண்டும் மீண்டும் செலுத்தப்பட வேண்டியதில்லை. ஏனெனில் தம்முடைய சொந்த இரத்தத்தை அவர் சிந்தினார், அதன் மூலம் நித்திய மீட்பையும் சாத்தியமாக்கினார்.

எபிரெய நிருபம் பின்வருமாறு இதை வலியுறுத்திக் கூறுகிறது: "ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்து கொள்வதற்காக புது உடன்படிக்கையின் மத்தியஸ்த -ராயிருக்கிறார். ஏனென்றால், எங்கே மரணசாசனமுண்டோ அங்கே அந்தச் சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில் மரண முண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும். அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே அந்தப்படி

முதலாம் உடன்படிக்கையும் இரத்தம் இல்லாமல் பிரதிஷ்டை பண்ணப்படவில்லை. எப்படியெனில், மோசே நியாப்பிரமா ணத்தின்படி சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்னபின்பு, இளங்காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து புஸ்தகத்தின் மேலும் ஜனங்கள் எல்லார் மேலும் தெளித்து, தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான். இவ்விதமாக கூடாரத்தின் மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின் மேலும் இரத்தத்தைத் தெளித்தான். நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக் கப்படும் இரத்தஞ் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது. ஆதலால் பரலோகத்தில் உள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப் படவேண்டியதாமே. அந்தப்படி மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான, கையினால் செய்யப்பட்ட தாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல்,பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித் திருக்கிறார். பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தோடு வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கிறதுபோல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக் கவில்லை. அப்படியிருந்ததானால் உலக முண்டானது முதற் கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபட வேண்டியதாயிருக்குமே. அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக் காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்". (எபிரேயர் 9.15-26)



இந்த உண்மை புதிய ஏற்பாட்டில் தெளிவாய் இருக்கிறது. யோவான் ஸ்நானன் இயேசுவைக் கண்டபோது, "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று அறிவித்தார்.(யோவான் 1:29)நம்முடைய பாவங்களுக்காக தேவனின் பலியாய் மாறப்போகும் ஒருவரை அவர் சுட்டிக்காட்டினார். அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் கூறினார்: "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்".( 1யோவான் 2.2) இயேசு ஒரு இரத்தசாட்சியாய் மரிக்கவில்லை. ஆனால் எல்லாருக்காகவும் தம்மை ஒப்புக்கொடுத்தார். "மனுஷக்குமாரன் ஊழியங் கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யும் படிக்கும், அநேகரை மீட்கும் பொருளாக தம் ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். (மத்தேயு 20.28)"

தேவன் இந்த உண்மையை ஏசாயாவுக்கு வெளிப் படுத்தினார். தேவகுமாரன் மனிதனாக அவதரிப்பதற்கு பலநூறு ஆண்டுகளுக்குமுன் இத்தீர்க்கதரிசி எழுதினார்: "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமா -கிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து அவனவன் தன் தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமங்களையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் ஒடுக்கப்பட்டும் சிறுமைப்பட்டும் இருந்தார். அவர் தமது வாயைத் திறக்கவில்லை. அடிக்கப் படுவதற்குக் கொண்டுபோகப்படும் ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடா திருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம் வாயைத் திறவா திருந்தார். (ஏசாயா 58.5-7).

அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் பாவநிவிர்த்தியை அடிக்கடி குறிப்பிடுகிறார்: "தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே அவருக்குள் பாவமன்னிப் பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது". (எபேசியர் 1.7).

நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிற யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள். ஏனெனில் "நியாயப்பிரமாண புஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கிற யாவற்றையும் கைக்கொள் ளாதவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக் கிறது....மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திலிருந்து நம்மை மீட்டார்.ஆபிரகாமுக்கு அருளப்பட்ட ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவின் மூலம் புறஜாதிகளுக்கு உண்டாகும்படிக்கும், ஆவியைக் குறித்த வாக்குறுதியை நாம் விசுவாசத்தினாலே பெற்றுக்கொள் ளும்படிக்கும் அவர் நம்மை மீட்டுக் கொண்டார்". (கலாத்தியர் 3.10,13-14).

"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவமில்லாத அவரை நமக்காக தேவன் பாவமாக்கினார்". (2கொரிந்தியர்5.21).

நியாயப்பிரமாணத்தின்படி தாமே, சிலுவையில் சுமந்து நம்மை இரட்சித்த கிறிஸ்துவைக் குறித்து இந்த வசனங்கள் பேசுகின்றன. தம்முடைய மரணத்தினால் நியாயப் பிரமாணத்தின் சாபத்திலுருந்தும் அவர் நம்மை இரட்சித்தார். இந்த பாவநிவாரண பலி அப்படிப்பட்ட தாயிருந்தது. தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களை அவர் பொறுத்துக் கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்கு கிறவருமாய் விளங்கும்படி இக்காலத்திலே தமது நீதியைக்



காண்பிக்கும்பொருட்டாகவும் கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தனார். (ரோமர் 3.25,26).

பின்வரும் விஷயங்களைப் போதிக்கும் இந்த வசனத்தை நாம் கவனமாய் ஆராயவேண்டும்.

1. தேவன் இயேசு கிறிஸ்துவை எல்லாருக்கும் பாவ நிவாரணபலியாய் தந்தருளினார்.
2. ஒவ்வொரு தனி மனிதனும் கிறிஸ்துவில் தான் விசுவாசம் வைப்பதன் மூலமாக, இந்த பாவ நிவிர்த்தியை அடைந்துகொள்ளலாம். இயேசு கிறிஸ்துவில் விசுவாசிப்போர் யாவரையும் இது சுத்திகரிக்கிறது.
3. தேவன் பாவிகளுக்கு இரக்கத்தைக் காண்பித்து கிறிஸ்துவின் பாவநிவாரண பலியின் மூலம் தமது நீதியைக் காண்பிக்கிறார். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நீதி தேவனுடைய சிறப்பான ஒரு குணாதிசயம் ஆகும், விசுவாசிக்கு தேவன் அருளும் நீதியல்ல அது. நாம் கண்ட வசனபகுதியில் இதை இப்படிக் காண்கிறோம். "தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசம் வைக்கிறவனை நீதிமானக்குகிறவருமாய் விளங்கும் படி; இந்த அறிக்கை தேவன் தாம் தேவனாக இருப்பதாலும், நியாயப்பிரமாணத்தை ஏற்படுத்தி யவராக இருப்பதாலும், உலகத்தின் நியாயதிபதியாய் இருப்பதாலும் நீதியின்படி நீதிகரிக்க விருப்பமுள்ள -வராயிருக்கிறார் என்பதை உறுதி செய்கிறது.
4. நீதியின் நிபந்தனைகளை மீறாமல் தேவனுடைய இரக்கத்தை வெளிப்படுத்த பலி அவசியமாகிறது. பாவ நிவாரண பலி இல்லாமலே தேவன் தம்முடைய இரக்கத்தைப் பாவிகளுக்கு காண்பித்திருப்பாரானால் அவர் நீதியுள்ளவர் அல்ல. இதின் நிமித்தமாகவே தேவன் கிறிஸ்துவை பாவ நிவாரண பலியாக"தாம் நீதியுள்ளவரும் இயேசுவை விசுவாசிக்கிறவனை

நீதிமானாக்குகிறவனுமாய் விளங்கும்படி, ஒப்புக் கொடுத்தார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். தேவனுடைய குண அதிசயத்தை மாற்றி அவரை இரக்கமுள்ளவராக்க அவசியம் இல்லை. தேவன் இன்றும் என்றைக்கும் மாறாதவராயிருக்கிறார். தேவனுடைய சாட்சியே பரிசுத்த வேதாகமத்தின் அடித்தளமாயிருக்கிறது. பாவிகளுக்குப் பதிலாக, மனித அவதாரம் எடுத்த கிறிஸ்துதாமே தம்மீது நியாயப்பிரமாணத்தின் சாபத்தை ஏற்றுக்கொண்டு பிதாவுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தார் என்று வேதாகத்திலிருந்தே நாம் அறிகிறோம். தேவன் அந்தப் பலியை ஏற்றுக்கொண்டார் என்றும் தமது நீதிக்கு அது போதுமானதென்று கண்டார் என்றும் நாம் அறிகிறோம். ஆனபடியால் இயேசு கிறிஸ்துவில் விசுவாசிக்கும் எல்லாரையும் தமது பரிசுத்த மகத்துவத்துக்கு எவ்வித பாதகம் ஏற்படாமலும் தமது ஒழுக்க நெறி விதிகளை எவ்விதத்திலும் மீறாமலும் மன்னிக்க முடியும்.

**பலிகளின் வகைகள்**

கிறிஸ்துவின் பலியை நன்கு கவனித்துப் பார்ப்பதால் மோசேக்குக் கையளிக்கப்பட்ட தெய்வீகப் பிரமாணத்துக்கு ஏற்ப பழையஏற்பாட்டு காலத்தில் செலுத்தப்பட்ட பலிகளின் வகைகளை ஆராய்ந்து பார்க்கமுடிகிறது.

1. பாவநிவாரண பலி (லேவியராகமம் 9)- ஜனங்களுக்கு மன்னிப்பளித்து அதன் மூலம் கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கேதுவாக செலுத்தப்பட்ட பாவநிவாரணம்.
2. குற்றநிவாரண பலி(லேவியராகமம் 5)- ஈடு செய்யகூடிய பாவங்களுக்காகச் செலுத்தப்பட்டது.
3. சர்வாங்க தகனபலி(லேவியராகமம் 1)-ஒருவர் தேவனுக்குத் தன்னை முழுவதுமாக அர்பணிப்பதைக் குறிக்கும் பூரணபலி.
4. சமாதான பலி (லேவியராகமம் 7.11-16)தேவனுக்குரிய நன்றியறிதலைச் செலுத்துவது.



5. பஸ்கா பலி(லேவியராகமம் 12)- இந்தப் பலியின் இரத்தத்தை இஸ்ரவேலர் தங்கள் வீடுகளிலுள்ள கதவுகளின் நிலைக்கால்களிலும் மேற்சட்டங்களிலும் பூச வேண்டுமென்று மோசே மற்றும் ஆரோன் மூலமாகக் கட்டளையிட்டார்.
6. சிவப்புக் கிடாரி (பசு) பலி (எண்ணாகமம்19)- இப்பலியின் சாம்பல் தீட்டிலிருந்து சுத்திகரிக்கப் பயன்படுத்தப்பட்டது.
7. குஷ்டரோகத்துக்கான பலி (லேவியராகமம் 14)- குஷ்டரோகியின் சுத்திகரிப்புக்காகச் செலுத்தப்பட்டது.
8. கிடாரி (கன்று) பலி(உபாகமம் 21.3)-ஆரோனின் குமாரரில் யாராவது ஆசாரியனாக பிரதிஷ்டை செய்யப்படும்போது செலுத்தப்பட்டபலி தேவனை ஜனங்களின் கண்களுக்கு முன்பாக கனவீனம் செய்ததாக ஆகாதபடிக்கு இந்தப் பலிப்பொருட்கள் யாவும் பழுதற்றவையாக இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். (1ராஜாக்கள் 8.13,14 சிறப்பாகச் சொன்னால் எல்லாவற்றுக்கும் மேலாக இந்த பழுதற்ற பலிகள் தேவ ஆட்டுக்குட்டியானவரக்கு அடையாளமானவை. உலகத்தின் பாவங்களுக்காக தம்மைப் பாவநிவாரண பலியாகத் தந்த "இயேசு குற்ற மற்றவர் மற்றும் பழுது அற்றவர்"(1பேதுரு 1:19,20).

**பலியின் இரத்தத்தைத் தெளித்தல்**

பழைய ஏற்பாட்டில் இரத்தத்தைத் தெளித்தல் மிக மேன்மையான ஒரு கட்டளையாயிருந்தது, ஏனெனில் பாவநிவிர்த்திக்கு அது ஒரு அடையாளமாயிருந்தது. இந்த தெளித்தல் ஜனங்களுக்கும் தேவனுக்கும் மத்தியஸ்தனாக நியமிக்கப்பட்ட ஆசாரியனுடைய கடமையாகும்.

இரத்தத்தை ஆசரிப்புக் கூடாரத்திற்குள் கொண்டு வந்தபின்பு அதை ஏழுமுறை தெளித்தல்(லேவியராகமம் 8.14) பாவநிவிர்த்தியின் பூரணத்துக்கு அடையாளம், ஏனெனில் ஏழு என்ற எண் பூரணத்தைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தினபடியினாலே விசுவாசிகள் தங்கள் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டனர் என்று புதிய ஏற்பாடு கூறுகிறது (1பேதுரு 1) (எபிரெயர் 9) கிறிஸ்து என்னும் மெய்யான பலி- இவைகள் அதற்கு அடையாளங்களாயுள்ளன.

மனிதனுடைய பலவீனத்தையும் மோசேயின் நியாயப்பிரமாணம் அவனைப் பாவத்திலிருந்து விடுவிக்கச் சக்தியற்று இருப்பதையும் பழைய ஏற்பாட்டின் தேவமனிதர்கள் உணர்ந்தனர். பலிகள் மற்றும் தகனபலிகள் அல்லாது வேறு வழியை அவர்கள் தேடினர். இந்த பலிகள் பலியிடுகிறவர்களின் மனச் சாட்சியை பூரணப்படுத்தக் கூடாதவை என்று அப்போஸ்தலன் கூறுகிறார்(எபிரேயர் 9.9) அவை தேவனைப் பிரியப்படுத்த கூடாதவைகள்: ஏனெனில் நம் சங்கீதப் புத்தகத்தில் வாசிக்கிறோம்; பலியை நீர் விரும்பவில்லை, விரும்பியிருந்தால் செலுத்துவேன். தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல, தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான் தேவனே நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.(சங்கீதம் 51:16,17)

ஏசாயா தீர்க்கதரிசி சொல்கிறார்: "உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு என்று கர்த்தர் சொல்லுகிறார், ஆட்டுக்கடாக்களின் தகனபலிகளும், கொழுத்த மிருங்களின் நிணமும் எனக்கு அரோசிகமாயிருக்கிறது.காளைகள், ஆட்டுக்குட்டிகள்,கடாக்களுடைய இரத்தத்தின் மேல் எனக்குப் பிரியமில்லை. நீங்கள் என் சந்நிதியில் வரும்போது என்



பிராகாரங்களை இப்படி மிதிக்கவேண்டுமென்று உங்களிடத்தில் கேட்டது யார்?.(ஏசாயா 1:11,12).

இருப்பினும் இந்தத் தவறின் நடுவில் தேவனுடைய குமாரனின் அன்பு பிரகாசித்தது, காலம் நிறைவேறும்போது வரப்போகும் தெய்வீக மத்தியஸ்தர் ஒருவர் மூலமாக இரட்சிப்பிற்கான ஒருமுடிவான பலியை ஆயத்தப் படுத்தியுள்ளார் என்பதை அவர் தமது உண்மையுள்ள விசுவாசிகளுக்கு அறிவித்தார். "ஏனெனில் பரிசுத்தமாக்கப் படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றைக்கும் பூரணப் படுத்தியிருக்கிறார்(எபிரேயர் 10.14)"".

கடுமையாகச் சோதிக்கப்பட்டு சிறுமைப்படுத்தப்பட்ட யோபு தமக்கும் தேவனுக்கும் நடுவில் இப்படிப்பட்ட மத்தியஸ்தர் ஒருவர் அவசியம் என்று கண்டார் (யோபு 9.33), அவர் கூறுகிறார். எங்கள் இருவர்மேலும் தன் கையை வைக்கத்தக்க மத்தியஸ்தன் ஒருவர் இருந்தாரானால்.

ஏசாயா தீர்க்கதரிசி தமது தீர்க்கக் கண்களால் கிறிஸ்துவானவரின் மீட்பின் கிரியையைக் கண்டு விவரிக்கிறார்.

இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டவர்; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லிமுடியும்; அவர் ஜீவனுள்ளோர் தேசத்திலிருந்து எடுக்கப்பட்டுப் போனார், என் ஜனத்தின் மீறுதல்களினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். துன்மார்க்கரோடு அவருடைய பிரேதக் குழியை நியமித்தார்கள்; அவர் மரித்தபோதோ ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவுமில்லை, அவர் வாயில் எந்த வஞ்சனை காணப் படவுமில்லை. கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி

அவரைப் பாடுகளுக்கு உட்படுத்தினார். கர்த்தர் தம் ஆத்துமாவைக் குற்றநிவாரண பலியாக்கும்போது, அவர் தம் சந்ததியைக் கண்டு தம் வாழ்நாட்களை நீடிக்கச்செய்வார். கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினாலே வாய்க்கும். அவர் தம் ஆத்துமாவில் வருத்தத்தை அனுபவித்தபின்பு, வாழ்வின் ஒளியைக் கண்டு திருப்தியடைவார். என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினாலே அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார். அவர் பலவான்கள் நடுவே கொள்ளைப்பொருளைப் பங்கிடுவார். அவர் தம் ஆத்துமாவை மரணத்திலூற்றி அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார். அவர் அநேகருடைய பாவங்களை தாமே சுமந்து அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் (ஏசாயா 53.8-12).

தர்சு பட்டணத்துச் சவுல் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்ட நீதியைப் பற்றிய நம்பிக்கையை இழந்தபோது தீர்க்கதரிசிகள் மூலம் முன்னுரைக்கப்பட்ட அந்த மத்தியஸ்தரைத் தேடிப்போன போதுதான் கிறிஸ்துவானவர் தமஸ்கு பட்டணத்துக்குப் போகும் வழியிலேஅவரைச் சந்தித்தார். மனிதர்களை இரட்சிக்கக் கல்வாரியில் பாவநிவாரணபலியாக மரிக்கும்படி மனித அவதாரமெடுத்த அவரில் அந்த மத்தியஸ்தரை பவுல் கண்டுகொண்டார். அதனாலேயே இப்படி எழுதும்படி ஏவப்பட்டார்.

“காலம் நிறைவேறின போது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தமது குமாரனை, நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்ட



வர்களை மீட்கவும், நாம் குமாரருக்குரிய எல்லா உரிமைகளையும் பெறவும் அனுப்பினார் (கலாத்தியர் 4:4-5)”.

வார்த்தை மனுவுருவானது மெய்யாகவே பரிசுத்த வேதாகமத்தின் மையமாய் உள்ளது, ஏனெனில், தெய்வீக மீட்பின் அடிப்படையாய் அது இருக்கிறது. மீட்பின் செயலை நிறைவேற்ற மனித அவதாரம் ஒரு முன்தகுதியாய் இருக்கிறது. இந்தக் காரணத்துக்காகவே இந்த விஷயம் தேவனால் அருளப்பட்ட பரிசுத்த வேதாகமத்தின் தெய்வீகப் புத்தகங்களில் வெளிப்படுத்தல்களாகப் பேசப்பட்டுள்ளன.

“காலம் நிறைவேறும்போது” வரப்போகிறவரும் மனுக்குலத்தை நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து விடுவித்து எல்லா ஜனத்துக்கும் பெரிதான ஒரு ஆசீர்வாதமாக இருக்கப்போகிறவருமான ஒரு இரட்சகரைச் சுட்டிக்காட்டியே இந்த வெளிப்பாடுகள் ஆரம்பித்தன. பிறகு அவரைப் பற்றிய எல்லாவற்றையும் இன்னும் அதிகமாக அந்த வெளிப்பாடுகள் தெளிவாக்கத் துவங்கின. “ஸ்திரீயின் வித்து” என்று துவங்கி பிறகு ஆபிரகாமின் சந்ததி, பிறகு யூதா கோத்திரம், பிறகு தாவீதின் குடும்பம், பிறகு அவர் ஒரு கன்னிகையிடம் பிறப்பது என அவை முன்னுரைத்தன. அந்த இரட்சகர் தெய்வீகக் குணாதிசயங்கள் உள்ளவர் என்றும் அவர் தமக்கென தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு கூட்டம் மக்களை மீட்டு அவர்கள் மேல் அவர் ஆளுநராகவும் இராஜாவாகவும் இருப்பாரென்றும் அந்த அறிவிப்புகள் கூறின (ஏசாயா 9.6).

இதில் ஆச்சரியமான காரியம் என்னவென்றால், இந்த அறிவிப்புகள் விநோதமான, அவருக்கே உரிய

தனித்துவமிக்க, சாதாரணமாக மனிதர்களுக்குப் பொருந்தாத துல்லியமான சந்தர்ப்பங்களையும் இடங்களையும் குறிப்பிட்டுள்ளன. அவற்றில் சில...

**அவர் பிறக்கப்போகும் சரியான இடம்...**

"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதாவின் பட்டணங்களில் சிறியதாயிருந்தாலும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர், உன்னிடத்திலிருந்து என்னிடம் வருவார். அவருடைய புறப்படுதல்கள் அநாதி காலங்களாகிய பூர்வத்தினுடையது" ( மீகா 5:2 ) அவர் ஏழையாயும் தாழ்மையுள்ளவராயும் இருப்பார் என்றும் மகிமைப்படுவார்:-

"ஈசாயென்னும் அடிமரத்திலிந்து ஒரு குருத்து தோன்றி, கீழே வேர்பற்றி மேலே கனிகொடுக்கும் கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். அவர் ஞானத்தையும் அறிவையும் அருளும் ஆவி, ஆலோசனையும் வல்லமையும் அருளும் ஆவி, புத்தியையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவி" (ஏசாயா 11.1,2).

அவர் ஒரு இராஜாவாயிருப்பார், ஆனால் புறம்பான மகிமை இருக்காது :-

"சீயோன் குமாரத்தியே மிகுதியாய்க் களிகூரு! எருசலேம் குமாரத்தியே ஆர்ப்பரி! இதோ உன் இராஜா நீதியுள்ளவராய், இரட்சிப்பைக் கையிலேந்தி, சாந்தமுள்ளவராய் ஒரு கழுதையின் மேலும், கழுதையின் குட்டியாகிய ஒரு மறியின் மேலும் ஏறி வருகிறார்". (சகரியா9.9)

அவர் ஒரு ஆசாரியனாயிருப்பார் :-



"நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றைக்கும் ஆசாரியராயிருப்பீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம் மாறாமலுமிருப்பார்" (சங்கீதம் 110:4).

இதின் அர்த்தம் என்னவெனில் கிறிஸ்துவின் பாவநிவர்த்தி ஆசாரியனுடைய ஒரு செயல் ஆகும் அதிலிருந்து சில காரியங்கள் காணக்கிடக்கின்றன.

1. ஆசாரியனாக இருப்பதால், பாவிகள் தாங்களாகவே செய்துகொள்ள முடியாததை அவர்களுக்காகச் செய்ய தேவனால் அவர்களுக்காக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளாக ஆக்கப்படுகிறார்கள். தங்களுடைய பாவங்கள் மற்றும் தீட்டினிமித்தம் தேவனை அடைய முடியாததலால் தெய்வீக அன்பானது அவர்களை தேவனோடு ஒப்புவாக்கும்படி அவருக்கு முன்பாக நிற்கத்தக்க தெய்வீக அதிகாரமுள்ள ஒரு நபரை நியமித்தது.
2. பாவத்திற்காக நிவிர்த்தி செய்யப்படாமல் ஒப்புரவாகுதல் ஏற்படமுடியாது. "இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லையே" என்று எழுதப்பட்டுள்ளது (எபிரேயர் 9.22).
3. பாவியின் இடத்தை ஏற்றுக்கொண்டு, அவனுக்காகப் பாவத்தின் தண்டனையான மரணத்தைச் சகிக்கக் கூடிய ஒரு பலியை வழங்குவதன் மூலமாக இந்த பாவநிவிர்த்தி நிறைவேற்றபபடும்.
4. தேவன் நியமித்த வண்ணமாகவே பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள் ஊழியஞ்செய்தனர். அதன்மூலமாக பாவி தனது சடங்காச்சாரமான பாவங்களுக்கு

மன்னிப்பு பெற்றான். ஆயினும் பாவமானது இல்லாமற் போகவில்லை என்று நாம் கண்டோம். அதே பாவத்தில் அவன் திரும்ப விழுவானானால் திரும்பவும் ஒரு பலியை அவன் செலுத்த வேண்டும்.

5. ஆரோனின் ஆசாரியத்துவம் இப்படியாக ஆதிமுதல் வாக்குப்பண்ணப்பட்ட மெய்யான ஆசாரியருக்கும் மெய்யான பலிக்கும் ஒரு அடையாளமாகவும் நிழலாகவும் இருக்கிறது.
6. கிறிஸ்து மெய்யான ஆசாரியர், ஆசாரியத்துவத்துக்குத் தேவையான எல்லா குணாதிசயங்களும் உடையவர். கிறிஸ்து மனித அவதாரம் எடுத்தபடியால் அவர் மனுக்குலத்தின் பிரதிநிதியானார். அவர் ஒரு பலியைச் செலுத்தினார், தம் மக்கள்மீது பரிதாபம் கொள்ளக் கூடியவராயிருந்தார், ஆசாரிய ஊழியத்தை மெய்யாகவே பூரணமாக நிறைவேற்றினார்.
7. மகா பிரதான ஆசாரியரான கிறிஸ்து செலுத்திய பலி மிருகங்களின் இரத்தமல்ல, தம்முடைய சொந்த இரத்தமே.
8. பரிசுத்தமாக்கப்படுகிறவர்களைப் பூரணப்படுத்தின ஒரே பலி அது தான் (எபிரேயர் 10.14).
9. கிறிஸ்துவின் பலி மற்ற எல்லா பலிகளுக்கும் முடிவுண்டாக்கி அவற்றுக்கு இனி அவசிய மில்லாமலாக்கியது.



மேற்கண்ட உண்மைகள் மூலம் கிறிஸ்துவின் பாவநிவிர்த்தி தேவ ஆலோசனையின்படியும் அவர் மனிதன்மேல் கொண்டுள்ள அன்பின் படியும் செய்யப்பட்ட மெய்யான செயல்தானே தவிர நீங்கள் கூறுவது போல ஒரு யூகம் அல்ல என்பது தெளிவாகிறது. இந்த முழுமையான விளக்கத்துக்குப் பின்பும், "கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டு இந்த மீட்பின் செயலை நிறைவேற்றத் தூண்டியது எது?" என்று நீங்கள் கேட்கக் கூடும். இதற்கான பதில்: திரித்துவத்தின் இரண்டாவது நபர் மாம்சத்தில் வெளிப்பட்டதும் மனுக்குலத்தை மீட்க அவர் மரித்தும் தாமே மனப்பூர்வமாய் முன்வந்து செய்தவைகள் ஆகும். அவர் தம்மைத் தாழ்த்தும்படி மனப்பூர்வம் கொண்டார். அவர் கூறினார்.

"நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக்கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார் ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரமுண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக் கொண்டேன்" (யோவான் 10:17,18).

கிறிஸ்து தம்மை அர்ப்பணிக்கும்படி பலவந்தம் பண்ணப்படவில்லை, மாறாக உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும்படி மனப்பூர்வமாக தம்மைக் கொடுத்தார் என்பதே இதன் அர்த்தமாகும். வேறு வார்த்தைகளில் தேவன் மனிதன் மேல் கொண்ட தமது ஆச்சரியமான அன்பினால் இந்த

உலகத்தில் வந்த தமது ஒரே போறான குமாரனை மீட்பராக வழங்கினார்.

"ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியான பிசாசைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் ஜீவகாலமெல்லாம் மரணபயத்துக்கு அடிமைப்பட்டு இருந்த யாவரையும் விடுதலையாக்கும்படிக்கும் அப்படியானார் (எபிரேயர் 2.14,15).

கிறிஸ்து மனப்பூர்வமாக ஒரு மத்தியஸ்தராக இருந்து மனிதனை தேவனுடன் ஒப்புரவாக்கும்படி மாம்ச சரீரத்தை ஏற்றுக்கொண்டார். பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

"மனுஷருடைய பாவங்களை அவர்களுக்கு எதிராகக் கணக்கிடாமல், கிறிஸ்துவில் அவர்களைத் தம்முடன் ஒப்புரவாக்கி தேவன் எங்களுக்கு ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை ஒப்புக்கொடுத்தார் (2கொரிந்தியர் 5.19).

தேவனோடு மனிதனை ஒப்புரவாக்கக்கூடிய மத்தியஸ்தர் பின்வரும் குணாதிசயங்களை உடையவராக இருக்கவேண்டும் என்று பரிசுத்த வேதாகமம் என்னும் தேவனால் அருளப்பட்ட பிரியமான புத்தகம் கூறுகிறது.

1. ஒரு மனிதனாக இருக்கவேண்டும் ... "அந்த வார்த்தை மாம்சமாகி... நமக்குள்ளே சிறிதுகாலம் வாசம்பண்ணினார்." (யோவான் 1.14).

   தேவதூதருடைய சாயலை ஏற்காமல் மனிதசாயலை வார்த்தையானவர் ஏற்றுக் கொள்ளக் காரணம் நம்மை



மீட்கும் படியாகவே, எல்லா நீதியையும் நிறைவேற்ற நாம் மீறி நடந்த நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவராக அவர் பிறந்து, நம்முடைய மனித வாழ்க்கையைப் பகிர்ந்துகொண்டு, நம்முடைய பெலவீனங்களை அனுபவித்து, பாடுபட்டு, நமது பாவங்களுக்கான நிவாரணபலியாக மரிக்கவேண்டியதாயிருந்தது.

2. பாவமில்லாதவராக இருக்கவேண்டும்.. நியாயப் பிரமாணத்தின்படி செலுத்தப்படும் பாவநிவாரணபலி பழுதற்றதாக இருக்க வேண்டும். இப்படியாக உலகமீட்புக்காகத் தம்மையே பலியாக்கப்போகும் மத்தியஸ்தரும் பாவமற்றவராக இருக்கவேண்டும். ஏனெனில் பாவங்களில் இருந்து இரட்சிக்கக்கூடிய இரட்சகர் ஒரு பாவியாக இருப்பது அசாத்தியம். ஒரு பாவி தேவனை அடைய முடியாது, அவன் பாவ நிவாரணபலியாகவோ, பரிசுத்தத்திற்குக் காரண னாகவோ, தமது ஜனங்களுக்கு நித்திய ஜீவனாகவோ விளங்கத் தகுதியற்றவன். ஆகவே நம் பிரதான ஆசாரியர், மாபெரும் இரட்சகர் "பரிசுத்தரும், மாசில்லாதவரும், தூய்மையானவரும், பாவிகளுக்கு விலகினவருமாய்" இருக்கவேண்டியதாயிற்று (எபிரேயர் 7.26).

   அப்போஸ்தலருடைய வார்த்தைகளும் அவர் பாவமில்லாவராய் இருந்தார் என்பதை நிரூபிக்கின்றன: "கிறிஸ்து உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படியாக ஒரு மாதிரியை வைத்துபோனார்; அவர் பாவஞ்செய்யவில்லை, அவர்

வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை". ( 1பேதுரு 2.21,22).

3. தேவனாக இருக்க வேண்டும் .. ஒரு மனிதனுடைய இரத்தம் பாவத்தைத் துடைக்கமுடியாது. கிறிஸ்து தேவனானபடியால் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை என்றைக்கும் பூரணப்படுத்தியிக்கிறாா் (எபிரேயர் 9.26). தேவன் மட்டுமே சாத்தானை ஜெயித்து, பிசாசினால் சிறைபிடிக்கப்பட்ட யாவரையும் விடுதலையாக்க முடியும். இந்த மீட்பின் வேலைகள் யாவையும் செய்து முடிக்கக்கூடிய நபர் மகா பிரதான ஆசாரியராகவும் யாவருக்கும் நியாயாதிபதியாகவும் விளங்கும்படி சர்வவல்லவராகவும் சர்வஞானியாகவும் இருக்கவேண்டும். எல்லாப் பரிசுத்தவான்களுக்கும் ஆவிக்குரிய வாழ்வின் ஊற்றாகும்படி தேவத்துவத்தின் சம்பூரணம் யாவும் சரீரப்பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது (கொலோசெயர் 2.9 ) என்று வேதம் சொல்லும் நபராக அவர் இருக்கவேண்டும்.

தேவனோடு மனிதனை ஒப்புரவாக்க மத்தியஸ்தருக்கு அவசியம் என்று வேதம் கூறும்இந்த எல்லா குணாதியசங்களும் இயேசு கிறிஸ்துவில் சேர்ந்திருந்தன. இதன் விளைவாக மனுஷனுடைய இரட்சிப்புக்காக மத்தியஸ்தராகிய கிறிஸ்து செய்த, இன்னும் செய்துவருகிற யாவும் ஒரு தெய்வீகத் தனிச் செயல்பாடாக அமைகிறது. அதுபோல கிறிஸ்துவின் எல்லா மத்தியஸ்த கிரியைகளும் பாடுகளும் ஒரு தெய்வீக நபருக்கு உரியனவாயிருக்கின்றன.



சிலுவையில் அறையப்பட்டவர் மகிமையின் கர்த்தர். இந்தச் சத்தியம் பின்வருபவற்றின் மூலம் தெளிவாகிறது:

1. கிறிஸ்துவின் கிரியை, அதிகாரம், அவர் போதனைகளின் உண்மைத் தன்மை, அவர் ஞானம், அவர் பாடுகளின் மதிப்பு ஆகியவற்றை அவருடைய ஆள்த்துவத்துக்கு பரிசுத்த வேதாகமம் உரித்தாக்கு -கிறது. "தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்" (1தீமோத்தேயு 3.16).

2. நமது மத்தியஸ்தர் மனிதனாக மட்டுமே இருந்திருப்பார் என்றால், விழுந்து போன பாவிகளை அவரால் இரட்சிக்க முடிந்திருக்காது, அதன் விளைவாக சுவிசேஷம், மகிமை, சத்துவம் மற்றும் போதுமான தன்மை ஆகியவை இல்லாமல் விடப்பட்டிருக்கும்.

3. தெய்வீக மனிதன் மட்டுமே விழுந்துபோன மனுக்குலத்தை மீட்கமுடியும். கிறிஸ்து தீர்க்கதரிசன ஊழியம் செய்ய ஞானம் அறிவு என்பவைகளின் எல்லா பொக்கிஷமும் உடையவராக அவர் இருக்கவேண்டும்.

கிறிஸ்துவின் பணி பலனுள்ளதாக இருக்கும்படி அவருடைய தீர்க்கதரிசன ஊழியத்திற்காக அவர் தேவகுமாரனாக கனம்பண்ணப்படவேண்டும். கிறிஸ்துவுக்கு வானத்திலும் பூமியிலும் ஒரு மத்தியஸ்தர் என்றவகையில் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை ஒரு தெய்வீக நபர் மட்டுமே பயன்படுத்தமுடியும். ஒரு தெய்வீக நபர் மட்டுமே பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை இரட்சிக்க முடியும், அதன் மரணாகரமான விளைவுகளிலிருந்து விடுவிக்க

முடியும் அல்லது மரணத்திலிருந்து எழுப்பமுடியும் அல்லது நித்திய ஜீவனை அருளமுடியும். உண்மையில் நமக்கு "பரிசுத்தரும், மாசற்றவரும், தூய்மை யுள்ளவரும், பாவிகளுக்கு விலகினவரும், எல்லா வானத்துக்கும் மேலாக உயர்த்தப் பட்டவருமான" ஒரு இரட்சகர் அவசியம் (எபிரேயர் 7.26).

**கேள்வி :** கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்த தீர்க்கதரிசிகள் அவருடைய தெய்வீகத் தன்மையை விசுவாசித்தார்களா? ( ஆம் எனில் அதற்கு ஆதாரம் தேவை).

**பதில் :** ஆம், கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்த தீர்க்கதரிசிகள் அவருடைய தெய்வீகத்தை விசுவாசித்தனர். தேவ ஏவுதலால் அவர்கள் எழுதின புஸ்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள அவர்களுடைய சாட்சிகளிலிருந்து அது தெளிவாகிறது:

**1. தாவீது:**

அ) இரண்டாம் சங்கீதத்தில் தாவீது இராஜாக்களுக்கும் பூமியில் ஆளுகைசெய்பவர்களுக்கும் கூறுகிறார்: "இப்போதும் இராஜாக்களே உணர்வடையுங்கள், பூமியின் நியாயாதிபதிகளே எச்சரிக்கையாயிருங்கள். பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள். குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தம் செய்யுங்கள், கொஞ்சம் காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும். அவரை



அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள் (சங்கீதம் 2.10-12).

தேவகுமாரனை நாம் சேவிக்கவேண்டுமென்று நமக்கு அவர் கட்டளையிடுகிறது மட்டுமன்றி அவரை நம்புகிற யாவரும் பாக்கியவான்கள் என்றும் கூறுகிறார். மனுஷனை நம்புகிற யாவரும் சபிக்கப்பட்டவர்கள் என்று வேதாகமம் கூறுவதை அறிந்தே இப்படி அவர் கூறுகிறார்.

ஆ) சங்கீதம் 110.1 இவ்வாறு கூறுகிறது: கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி, "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போகும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்திலே உட்காரும், என்றார்".

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே இவ்வசனங்களை எடுத்துப் பேசுகிறார். யூத பரிசேயருடன் அவர் பேசுகையில் அவர்களை நோக்கி, "கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் யாருடைய குமாரன்? எனக் கேட்டார். அவர் தாவீதின் குமாரன்" என்றார்கள் அதற்கு அவர்: அப்படியானால் தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை "ஆண்டவர்" என்று சொல்லியிருக்கிறது எப்படி? "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார் என்று சொல்லியிருக்கிறாரே. தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவருக்கு இவர் குமாரனாயிருப்பது எப்படி?" (மத்தேயு 22.42-45)

**2. ஏசாயா:**

அ) "அந்நாளிலே கர்த்தருடைய கிளை அலங்காரமும் மகிமையுமாய் இருக்கும். தேசத்தின் கனியானது இஸ்ரவேலில் தப்பி மீந்தவர்களுக்குப் பெருமையும் மகிமையுமாய் இருக்கும்." (ஏசாயா 4.2).

வேதாகம மொழியில் "கிளை என்பது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். தீர்க்கதரிசிகள் அவரை கிளை என்று அழைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். உதாரணமாக எரேமியா தீர்க்கதரிசி கூறுகிறார்: "அந்நாட்களிலே அந்தக் காலத்திலே தாவீதின் வம்சத்தில் ஒரு நீதியுள்ள கிளையை முளைக்கப்பண்ணுவேன். அவர் தேசத்திலே நீதியும் சரியானதுமான காரியத்தைச் செய்வார். (எரேமியா 33:5)".

ஆ) ஏசாயா தீர்க்கதரிசி உசியா இராஜா மரணமடைந்த வருஷத்திலே ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருப்பதைக் கண்டேன். அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. அவருக்கு மேலே ஆறு சேராபீன்கள் இருந்தன, அவை ஒவ்வொன்றுக்கும் ஆறு சிறகுகள் இருந்தன. அவை இரண்டு செட்டைகளால் தங்கள் முகத்தை மூடிக்கொண்டன; இரண்டு செட்டைகளால் தங்கள் கால்களை மூடிக்கொண்டன ; மற்ற இரண்டு செட்டைகளைக் கொண்டு பறந்தன. அவை ஒன்றையொன்று நோக்கி "சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்; பூமி



முழுவதும் அவர் மகிமையால் நிறைந்திருக்கிறது என்று சத்தமிட்டுக் கூறின". (ஏசாயா 6:1-3) இங்கே தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்துவைக் குறித்தே பேசுகிறார் என்பது சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருப்பதன் மூலம் தெளிவாகிறது. "ஏசாயா அவருடைய (இயேசு கிறிஸ்து) மகிமையைக் கண்டு அவரைக் குறித்துப் பேசுகிறபோது இவைகளைச் சொன்னான்". (யோவான் 12;41)

இ) "நமக்கொரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் ; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்தியப் பிதா, சமாதானப் பிரபு என்னப்படும் (ஏசாயா 9:6)

**3. எரேமியா**

இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நிதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் இராஜாவாய் இருந்து, ஞானமாய் இராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார். அவருடைய நாட்களிலே யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் பாதுகாப்பாய் வாழ்ந்திருக்கும். நம்முடைய நீதியாய் இருக்கிற கர்த்தர் என்னும் பெயராலே அவர் அழைக்கப்படுவார். (எரேமியா 23:5,6)

**4. தானியேல்**

அ) தானியேல் கூறுகிறார் இராத் தரிசனங்களில் நான் பார்த்தபோது, இதோ மனுஷகுமாரனைப் போன்ற ஒருவர் எனக்கு முன்பாக வானத்து மேகங்களுடன் வருவதைக் கண்டேன். அவர் நீண்ட ஆயுசுள்ளவர்

இருக்குமிடத்துக்கு வந்தபோது அவருக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டார். அவருக்கு அதிகாரமும், மகிமையும், இராஜரீக வல்லமையும் அளிக்கப்பட்டது. எல்லா மக்களும், ஜாதிகளும், மொழிபேசுபவர்களும் அவரைப் பணிந்து கொண்டனர். அவருடைய ஆளுகை ஒருபோதும் ஒழிந்துபோகாத நித்திய ஆளுகையாயிருக்கிறது. அவருடைய இராஜ்யம் ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை. ( தானியேல் 7:13,14)

ஆ) அவர் மேலும் கூறுகிறார் : மீறுதலை முடிவுகட்டுகிறதற்கும், பாவத்துக்கு முடிவு உண்டாக்குவதற்கும், பொல்லாப்பிற்காக பாவநிவிர்த்தி செய்வதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும், தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும் மகாபரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் செய்வதற்கும் உன் ஜனத்தின் மேலும் உங்கள் பரிசுத்த நகரத்தின் மேலும் எழுபது வாரங்கள் நியமிக்கப்பட்டுள்ளன. எருசலேமை எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை பிறந்தது முதல் பிரபுவாகிய மேசியா (அபிஷேகம் பண்ணப்பட்டவர்) வரும் வரைக்கும் ஏழு வாரங்களும் அறுபத்திரண்டு வாரங்களும் செல்லும் பின்பு அபிஷேகம் பண்ணப்பட்டவர் ( மேசியா) சங்கரிக்கப்படுவார். வரப்போகிற அதிபதியின் மக்கள் நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் அழித்துப்போடுவார்கள். நிச்சயிக்கப்பட்ட முடிவு பிரவாகம் போல வரும் : நாசம் தீர்மானிக்கப்பட்டுள்ளது, யுத்தம் முடிவு மட்டும்



தொடரும். அவர் ஒருவாரமளவும் அநேகருக்கு உடன்படிகையை உறுதிப்படுத்தி, அந்தவாரம் பாதிசென்ற பின்பு பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவான். நிர்ணயிக்கப்பட்ட முடிவு அந்த பாழக்குகிறவன் மேல் பொழியுமட்டும் அருவருப்பானதை அவன் தேவாலயத்தில் வைப்பான்" (தானியேல் 9:24-27)

கிறிஸ்துவின் வருகையைப் பற்றியும் அவர் நிறைவேற்றப்போகும் தெய்வீகக் கிரியைகளைப் பற்றியும் கூறும் தீர்க்கதரிசனங்கள் இவை. தானியேல் தீர்க்கதரிசி தமது முதலாவது சாட்சியில் கிறிஸ்துவை "மகா பரிசுத்தர்" என்று அழைக்கிறார். இரண்டாவது சாட்சியில் கிறிஸ்துவை அவர் "பிரபுவாகிய மேசியா" என்று குறிப்பிடுகிறார். இவை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமக்குப் பயன்படுத்திய பெயர்கள். மனுஷ குமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவுமே வந்தார் (மத்தேயு 20;28)

"பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவென்றால், பரிசுத்தமும் உண்மையும் உள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடி திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடி பூட்டுகிறவருமானவரும் சொல்லுகிறதாவது" (வெளிப்படுத்தல் 3:7) இவைகள் போன்றதே அதுவும்.

### 5. தீர்க்கதரிசியாகிய மீகா

இவர் கூறுகிறார் : எப்பிராத்தாவாகிய பெத்லகேமே, யூதாவின் ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தாலும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து என்னிடம் வருவார். அவருடைய புறப்படுதல் அநாதி

நாட்களாகிய பூர்வத்தினுடையது (மீகா 5;2)

இயேசு கிறிஸ்துவின் மனித அவதாரம் மற்றும் அவர் பெத்லகேமில் பிறப்பார் என்பது குறித்த ஒரு தீர்க்கதரிசனம் இது. அவருடைய நித்திய புறப்படுதல் குறித்தும் இது கூறுகிறது. அவருடைய "புறப்படுதல்" என்பது திரித்துவத்தின் இரண்டாவது நபராக அவர் ஆபிரகாமுக்கு உடன்படிக்கையின் தூதனாகக் காட்சியளித்தது ( ஆதியாகமம் 18) மோசேக்குக் காட்சியளித்தது ( யாத்திராகமம் 3) யோசவாவுக்குக் காட்சியளித்தது (யோசுவா 13) கிதியோனுக்குக் காட்சியிளித்தது ( நியாயாதிபதிகள் 6) மனோபாவுக்குக் காட்சியளித்தது ( நியாயாதிபதிகள் 13) கிறிஸ்து நித்தியமானவர், தேவனைப் போலவே நித்தியமானவர் (யோவான் 1:1,2) காண்க.

**6. மல்கியா**

"இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன் அவன் எனக்கு முன்பாகப் போய் வழியை ஆயத்தம் பண்ணுவான். அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்திற்கு தீவிரமாய் வருவார்.". (மல்கியா 3:1)

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன் வழியை ஆயத்தம் செய்யும்படி யோவான் ஸ்நானன் வருவதையே இந்த மகிமையான வார்த்தைகள் குறிக்கின்றன. "மனந்திரும் புங்கள், பரலோக இராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று மக்களுக்கு பிரசங்கம் செய்தவர் இவரே ( மத்தேயு 3:2) உடன்படிக்கையின் தூதனானவர் பரிசுத்த திரித்துவத்தின் இரண்டாவது நபரானவர். அவருக்குள் தேவனுடைய வாக்குறுதிகள் நிறைவேறும் ஆதலால் அப்பெயர் பெற்றார் (எபிரெயர் 9:15)



மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகள் மூலமாக நாம் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் கிறிஸ்துவின் தெய்வீகத்தை விசுவாசித்தனர் என்று காண்கிறோம். தேவன் உலகத்தை இரட்சிக்கும்படி மனித சுபாவம் தரித்த நபராக வருகிறார் என்று தீர்க்கதரிசன நூல்கள் அறிவித்தன. அவர் ஒரு பெண்ணின் மூலம் தோன்றுவார். ஆபிரகாமின் சந்ததியில் யூதா கோத்திரத்தில் தாவீதின் வம்சத்தில் ஒரு கன்னிகையினிடம் பிறந்து, உலகத்தின் பாவங்களுக்காத் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுப்பார்.

உடன்படிக்கையின் தூதனானவர் தேவத்துவத்தின் இரண்டாம் நபர் என்பதற்கு பலமான சான்று நம்மிடம் உண்டு, பழைய ஏற்பாட்டில் அவர் **யெகோவான் தூதன்**, எலோஹிம் மற்றும் தேவன் என்றும் கூட அழைக்கப்பட்டார், புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவரும் யோவான் திருமுழுக்குநருக்குப் பின்பு வந்தவருமான அதே கிறிஸ்துதான் இவர். ஏசாயா தீர்க்கதரிசி இவரது வருகையை இவ்வாறு முன்னறிவித்தார். "கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுங்கள், நம் தேவனுக்கு வனாந்தரத்தில் ஒரு பெரும்பாதையை நேர் செய்யுங்கள்... கர்த்தருடைய மகிமை வெளிப்படுத்தப்படும், மனுமக்கள் யாவரும் அதைக்காண்பார்கள்; கர்த்தருடைய வாய் அதை உரைத்தது என்று வனாந்தரத்தில் கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று". (ஏசாயா 40;3)

நாம் புதிய ஏற்பாட்டில் பார்க்கும்போது, வழியை ஆயத்தம் பண்ணுகிறவர் யோவான் திருமுழுக்குநர் என்றும் நம்தேவன் என்று, ஏசாயா குறிப்பிடுவது இயேசு கிறிஸ்துவே என்றும் அறியலாம். தம்முடைய ஆலயத்துக்கு வரும் ஆண்டவர் என்பதும் கிறிஸ்துவானவர் தாமே (மத்தேயு 11:10;

மாற்கு 1;2; லூக்கா 1:76;7;27)

**கேள்வி:** கிறிஸ்து சிலுவையில் அறையப்படாமலேயே ஆதாமையும் அவர் சந்ததியையும் தேவன் இரட்சித்திருக்க கூடாதா?

**கேள்வி:** பாவநிவர்த்தியின் உட்கருத்துக்கே திரும்பவும் நம்மை அழைத்துச் செல்கிறது இக்கேள்வி. பாவ நிவிர்த்தி இல்லாமல் கடந்த கால பாவங்களிலிருந்து இரட்சிப்பு இல்லை. "பாவநிவர்த்தி" என்னும் வார்த்தைக்கு "பாவத்தை மூடுவது" அல்லது "முக்காடிடுவது" என்பது பொருளாகும். கிறிஸ்தவத்தில் பாவநிவர்த்தி என்பது பிதாவின் சித்தத்துக்கு பூரணமாகக் கீழ்ப்படிந்து கிறிஸ்து நிறைவேற்றிய செயல் ஆகும். சுருக்கமாக நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து உலகத்தின் இரட்சிப்பும், மனிதனுடைய ஒப்புரவாகுதலும் சிலுவையில் சிந்தப்பட்ட தேவனுடைய சொந்த இரத்தத்தினாலே செய்யப்பட்டது.

கிறிஸ்துவின் குணாதிசயங்களை பலகோணங் களிலிருந்து பார்ப்பது உதவியாயிருக்கும் ; தேவனோடுள்ள உறவிலே அவருடைய அன்பு, பரிசுத்தம், நீதி என்பவைகளின் அம்சத்திலே மனிதனோடுள்ள உறவிலே மனுக்குலத்தில் மற்றும் மனுக்குலத்திற்காக அவர் செய்த கிரியைகளின் அம்சத்திலே.

கிறிஸ்துவின் பாவ நிவிர்த்தி மனிதனின் பாவத்திற்காக என்று சொல்லப்பட்டது. நியாயப்பிரமாணத்தின் சாபம் மற்றும் நியாயத்தீர்ப்பிலிருந்து பாவிகளுடைய இரட்சிப்பிற்காக. கிறிஸ்துவின் பலியினது தெளிவான வெளிப்பாடாகும் இது.

கிறிஸ்துவின் பாவ நிவர்த்தி தேவனைப் பிரியப் படுத்தவும் அவருடைய நீதியை நிறைவேற்றவும் என்றும்



சொல்லப்பட்டது. அதாவது தேவனைத் திருப்திப்படுத்தவும் பிரியப்படுத்தவும் ஒரு வழிமுறை ஆகும். தேவனுடைய கோபாக்கினையை அகற்றியது, பாவியை ஒப்புரவாகுதலுக்கு அவர் திருப்தியுடன் ஏற்றுக்கொண்டது என்பன கிறிஸ்துவின் பலியின் பலன்கள் என்பதை இது வெளிப்படுத்துகிறது. பாவநிவர்த்தி என்பது மீறுதல் செய்த நபர் அதற்காக தண்டனைக்குள்ளாகாதபடி அவருடைய ஆத்துமாவை கிறிஸ்துவின் இரத்தத்தினாலே மூடுவதாகும் என்பது இன்னொரு விளக்கமாகும்.

மீறுதல் செய்த நபரின் இடத்தில் அடிக்கப்பட்ட கிறிஸ்து அந்த நபருக்குரிய தண்டனையையும் சுமந்து கொண்டார். இப்படி அர்த்தப்படுத்தியே யோவான் எழுதினார் : "நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பின தினாலே அன்பு உண்டாயிருக்கிறது". (1 யோவான் 4:10)

மேலும், பாவ நிவிர்த்தியானது தேவனுடைய பரிசுத்த பிரமாணத்தைத் தரக் குறைவாக்காமல் ஒப்புரவாகுதலின் வாசலை தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் திறந்து தந்தது. இதையே பவுல் கூறுகிறார். "தேவன் உலகத்தாருடைய பாவங்களை அவர்களுக்கு எதிராக எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தம்முடன் ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களுக்கு ஒப்புவித்தார்" (2 கொரிந்தியர் 5:19).

இயேசுவின் மீட்பு பரிசுத்த வேதாகம மொழியிலே "கிருபை" என்னும் வார்த்தையினால் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. ஏனெனில் பாவ மனுக்குலத்திற்கென ஒரு பலியை

வழங்கவேண்டுமென்ற கட்டாயம் நமது பரம பிதாவுக்கு இல்லை. மாம்ச அவதாரமெடுத்து மீட்பின் திட்டத்தை தம்மேல் ஏற்கவேண்டிய அவசியம் குமாரனுக்குமில்லை. பூரண தெய்வீகமே தமது மிகுதியான அன்பினாலும், அளவற்ற இரக்கத்தினாலும் பிரமாணத்தின் தண்டனைக் கோரலை மாற்றியமைத்தது. பாவியின் இடத்தில் பதிலாளாக மாம்ச அவதாரமெடுத்த குமாரன் மனப்பூர்வமாக பட்டபாடுகளை தேவன் ஏற்றுக்கொண்டார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்தச் சத்தியத்தைப் பின்வருமாறு கூறுகிறார். "ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்". (யோவான் 10:15) "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை". (யோவான் 15:13)

இந்த வசனங்களில் தாம் செய்தவைகளுக்கான காரணத்தை நம்முடைய வாழ்த்தப்பட்ட ஆண்டவர் கூறுகிறார். அவர் பரிசுத்தமுள்ள ஒருவராக இருந்தாலும் மனித சரீரத்தை ஏற்றுக்கொண்டு சிலுவையின் மேல் தமது சரீரத்தில் நம்முடைய பாவங்களைச் சுமந்து பாடுபட்டார்.

ரோமருக்கு எழுதின நிருபத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் இந்த பதிலாள் பாடுகளின் அவசியத்தைத் தெளிவுபடுத்துகிறார். "மாம்சத்தினாலே (பாவ சுபாவத்தினாலே) பெலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும் பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி



நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார். (ரோமர் 8:3,4)

வேறு வார்த்தைகளில், நம்மேல் சுமரவிருந்த, பாவத்தின் சம்பளமாகிய நித்திய மரணத்தைக் கிறிஸ்து நம்முடைய பிரதிநிதியாகத் தம்மேல் ஏற்றுக்கொண்டார். "நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது ; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" ( ஏசயாா 53:5) என்றும் தீர்க்கதரிசன உரைப்படி இது நிகழ்ந்தது.

தேவன் தாம் விரும்பியவனை மன்னிக்கிறார் தண்டிக்கவேண்டுமென நினைக்கிறவர்களை தண்டிக்கிறார் என்று பலர் சொல்வதைக் கேட்க முடிகிறது. தேவனுடைய எச்சரிப்புகள் மற்றும் வாக்குறுதிகள் மூலமாகத் தெரிவிக்கப்படும் தேவனுடைய சத்தியத்துக்கு முரணாயிருக்கிறது இந்தக் கூற்று. தேவ நீதி மன்னிப்பைத் தருவதற்கு ஒரு பாவநிவாரண பலியைக் கேட்கிறது. இந்த நியதி ஆரம்ப முதலே அறியப்பட்ட ஒன்றாகும். பழைய ஏற்பாட்டின் பக்கங்களினூடே ஒரு இரத்தாம்பர இழையைப் போல உருவிச் செல்கிறது. அதிலிருந்து இரத்தம் சொட்டுகிறது, ஒவ்வொரு தலை முறையிலும் "இரத்தஞ் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை" என்று சத்தமிடுகிறது. தேவன் தம் எல்லா குணாதிசயங்களிலும் பூரணமாக இருக்க வேண்டுமெனில், தமது சத்தியத்தையும் நீதியையும் புறந்தள்ளிவிட்டு மனிதனுடைய மீறுதல்களை மன்னிப்பது இயலாது. பூர்வகால தீர்க்கதரிசி கூறுகிறார் : பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசேக்கியேல் 18:20) தேவன் ஒரு ஆத்துமாவைப் பாவத்திலிருந்து மன்னிக்கிறார் எனில், அந்த மன்னிப்புக்கு ஓர் அடிப்படை தேவனுடைய பரிசுத்தத்தையும் நீதியையும்

திருப்திப்படுத்தும் ஒரு காரணம் இருக்க வேண்டும்.

கிறிஸ்துவுக்கு அடையாளமான இரத்தபலிகளைச் செலுத்தியதன் மூலம் பழைய ஏற்பாட்டில் இந்த திருப்தி அடையப்பட்டது. புதிய ஏற்பாட்டில் எல்லா நீதியையும் நிறைவேற்றின கிறிஸ்துவின் பலியினால் அத்திருப்தி பெறப்பட்டது.

கிறிஸ்துவின் பலியானது தன்மைகளில் ஒன்று அது மனிதனுடைய பாவத்தை அகற்றிப் போடுவது மட்டுமல்ல ஒழுக்கக்கேடு எனும் வியாதியான பாவத்தினைக் குணமாக்கவும் செய்கிறது. ஏனெனில் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை விசுவாசிக்கும் எவனும் புதிய ஜீவனைப் பெற்றுக்கொள்கிறான். பாவத்தின் பயங்கரமான செயல்பாடுகளையும் அதன் அச்சமூட்டும் தண்டனையையும் காணத்துவங்கி அதனால் பாவத்தைச் செய்யாது ஓய்கிறான். இதனாலேயே அப்போஸ்தலன் கூறுகிறார். "தேவனால் பிறந்த எவனும் பாவத்தில் தொடர்ந்திருக்கமாட்டான் ஏனெனில் தேவனுடைய வித்து அவனில் நிலைத்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியால் இனி பாவஞ்செய்வதில்லை" (1 யோவான் 3:9)

**கேள்வி :** கிறிஸ்துவின் தெய்வீகத்தை வேதாகமம் நிரூபிக்கிறதில்லை. மோசேக்கு அது தெரியுமா, அதை அவர் தம் ஜனங்களுக்கு மறைத்தாரா அல்லது அவருக்கு அது தெரியாதா?

**பதில் :** தேவத்துவத்தின் மூன்று ஆள்த்துவங்களை மோசே அறியாமல் இருக்கவில்லை, அதை மறைக்கவுமில்லை, ஆனால் தேவனால் ஏவப்பட்டு



தாம் எழுதிய ஐந்து புத்தகங்களிலும் அதாவது தோராஹ் என அழைக்கப்படும் வேதத்தில் பல இடங்களில் அதை அறிவித்துள்ளார். உதாரணமாக.

தேவனால் அருளப்பட்ட பதிவுகளில் மோசே எழுதிய முதலாம் வசனம் : "ஆதியிலே தேவன் ( எரோஹிம்) வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்". (ஆதியாகமம் 1:1) வேதத்தில் பயன்படுத்தப்படும் "எலோஹிம்" என்னும் பதம் ஒரு பன்மைப் பதமாகும், தேவனுடைய ஒருமைப்பாடும் அதில் அடங்கியுள்ளது என்பதை அது குறிக்கிறது.

மோசே மேலும் எழுதினார் : "இஸ்ரவேலே, நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்". ( உபாகமம் 6:4) இங்கும் "தேவன்" என்னும் பதம் பன்மையில் உள்ளது. தேவனுடைய ஒருமைப்பாட்டைச் சுட்டிக்காட்டவே அப்படி உள்ளது. தேவனே தம்மைக் குறிக்கப் பன்மைப் பதங்களை மோசே எழுதின நூல்களில் பல வசனங்களில் பயன்படுத்தியுள்ளார். அவர் பயன்படுத்தியவற்றுள் "நமது சாயலின் படியும் நமது ரூபத்தின் படியும் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதியாகமம் 1:26) என்பதில் நம்முடைய சாயல், நம்முடைய ரூபம் என்பது சரீரப்பிரகாரமானதல்ல, ஆனால் ஒழுக்க நெறிசார்ந்தது, மனோரீதியானது மற்றும் ஆவிக்குரியது ஆகும்.

"மனுஷன் இப்போது நம்மில் ஒருவரைப் போலானான்" (ஆதியாகமம் 3:22)

நாம் கீழே இறங்கிப்போய் அவர்களுடைய மொழியைக் குழப்பிவிடுவோம் (ஆதியாகமம் 11:7)

தேவன் இயைபில் ஒருவர், ஆளத்துவங்களில் திரியேகர்

என்ற உண்மையை இவ்வசனபகுதிகள் சுட்டிக்காட்டுகின்றன. இந்த உபதேசத்தை நாம் படிக்குமுன், அதைக்குறித்து முறையாக விவாதிக்குமுன், கிறிஸ்துவின் சபையில் அதற்குள்ள சரித்திரத்தை நன்கு அறிந்து, அது இப்போது உள்ள முடிவான மாற்றமில்லா நிலையை அடையுமுன் அது தெரிவித்த கருத்துக்களையும் அடிப்படை உண்மைகளையும் நன்கு அறிந்திருப்பது நன்றாக இருக்கும்.

அப்போஸ்தலர் காலத்திலும் இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ உபதேசத்தை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் உட்படுத்த நினைக்கவில்லை. வேதத்தில் அறிவிக்கப் பட்டிருந்த வண்ணமே அவ்வுபதேசங்களை அவர்கள் பயிற்சித்து வந்தனர். கஷ்டங்களும் பிரச்சினை ஏற்பட்டபோதெல்லாம் அப்போஸ்தலரிடமோ அல்லது அவர்களது வழித்தோன்றல்களிடமோ சென்றனர். இருப்பினும் கிறிஸ்தவம் சிதறுண்டு உலகெங்கும் பரவி சில மதக்குழுக்கள் அதற்குள் எழும்பினபோது சூழ்நிலை மாறியது. குறிப்பாக ஏரியஸ் மற்றும் சேபலியஸ் ஆகியோரின் துர்உபதேசங்கள் பரவ ஆரம்பித்தபோது சபையானது தனது தீர்மானமான முடிவினை அறிவிக்க வேண்டியதாயிற்று. மேற்குறிப்பிட்ட இரு நபர்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவரின் தெய்வீகம் குறித்த கிறிஸ்தவ உபதேசங்களை எதிர்த்தனர். முன்னணி கிறிஸ்தவத் தலைவர்கள் எழும்பி இந்த துர்உபதேசங்களை சுட்டிக்காட்டிப் பேசினார்கள். இந்த பிரசித்தமான தலைவர்களில் மிக முதன்மையானவர் புனித அத்தனாசியஸ் ஆவார். இத்துர்ப்போதனைக் குழுக்களை இவர் தீவிரமாய் எதிர்த்து



புகழ்பெற்ற அத்தனாசியன் விசுவாசப் பிரமாணத்தை வெளியிட்டார். அந்த பிரமாணத்தின் அம்சங்கள் வருமாறு :

1. இரட்சிக்கப்பட விரும்பும் எவரும் மற்ற யாவற்றுக்கும் முன்பாக கிறிஸ்தவ சபையின் உலகளாவிய அப்போஸ்தல விசுவாசத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
2. இந்த விசுவாசத்தைச் சரியாகக் காத்துக்கொள்ளாத எவரும் நித்தியமாக ஆக்கினைக்குள்ளாவார்.
3. இந்த உலகளாவிய விசுவாசமானது மூன்று ஆளத்துவங்களுள்ள ( திரித்துவம்) ஒரு தேவனை அல்லது ஒரு தேவனில் மூன்று ஆளத்துவங்களைத் தொழுது கொள்வதாகும்.
4. திரித்துவத்தின் மூன்று ஆளத்துவங்களை நாம் ஒன்று சேர்க்கவோ, அவர்களுடைய இயைபைத் தனித்தனியாக்கவோ கூடாது.
5. பிதாவானவர் ஒரு ஆளத்துவம் ( ஹைப்பாஸ்டேசிஸ்) குமாரன் ஒரு ஆளத்துவம், பரிசுத்த ஆவியும் ஒரு ஆளத்துவம்.
6. பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் சமமான மகிமையும் நித்தியமான மகத்துவமும் உள்ள ஒரே தேவனாக இருக்கின்றனர்
7. பிதா எப்படியோ, குமாரனும் அப்படியே, பரிசுத்த ஆவியானவரும் அப்படியே
8. பிதா குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் சிருஷ்டிக்கப்படாதவர்கள்.
9. பிதா குமாரன், பரிசுத்த ஆவியானவர் எல்லைக்குட்பட்டவர்கள் அல்ல.
10. பிதா நித்தியமானவர், குமாரன் நித்தியமானவர், பரிசுத்த

ஆவியனாவரும் நித்தியமானவர். மூன்று நித்தியங்கள் அல்ல, ஒரே நித்தியம்

11. சிருஷ்டிக்கப்படாத மூவர் அல்ல அவர்கள், ஒரு அளவுக்குட்பட்ட மூவர் அல்ல அவர்கள், சிருஷ்டிக்கப்படாத ஒரே தேவன், ஒரு அளவுக்குட்படாத ஒரே தேவன்.

12. அதே போல பிதா சர்வவல்ல தேவன், குமாரன் சர்வ வல்ல தேவன், பரிசுத்த ஆவியானவர் சர்வவல்லவர். சர்வவல்லமையுள்ள மூன்று தேவர்கள் அல்ல சர்வவல்லமையுள்ள ஒரே தேவன்

13. பிதா தேவன், குமாரன் தேவன், பரிசுத்த ஆவியானவர்தேவன், மூன்று தேவர்கள் அல்ல ஒரே தேவன்

14. பிதா கர்த்தராயிருக்கிறார், குமாரன் கர்த்தராயிருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் கர்த்தராயிருக்கிறார். மூன்று கர்த்தாக்கள் அல்ல, ஒரே கர்த்தர்.

15. இந்த மூன்று ஆள்த்துவங்களும் தேவனாக, கர்த்தராக இருக்கிறதை நாம் அறிக்கை செய்யும்படி கிறிஸ்தவ விசுவாசம் நம்மை ஏவுகிற அதே வேளையில், மூன்று தேவர்கள் உண்டு அல்லது மூன்று கர்த்தாக்கள் உண்டு என்று நாம் கூறாதபடி அது நம்மைத் தடை செய்கிறது. நாம் ஒரே தேவனில் ஒரே கர்த்தரில் விசுவாசிக்கிறோம்.

16. பிதாவானவர் வேறு யாராலும் செய்யப்படவில்லை, சிருஷ்டிக்கப்படவில்லை. அவர் பிறக்கவில்லை. பிதாவிடமிருந்து வந்தவரான குமாரன் செய்யப்படவோ



சிருஷ்டிக்கப்படவோ இல்லை. அவர் பிறந்தார். பரிசுத்த ஆவியானவர் பிதாவுனுடைய வரும், குமாரனுடைய வரும் ஆனவர். அவர் செய்ய படவோ, சிருஷ்டிக்க படவோ இல்லை. அவர் பிறக்கவும் இல்லை.

17. ஆகவே பிதா ஒருவரே, மூன்று பேரல்ல, குமாரன் ஒருவரே, மூன்று பேரல்ல, பரிசுத்த ஆவியானவரும் மூன்றுபேரல்ல, ஒருவரே.

18. திரித்துவத்தில் எந்த ஆள்த்துவமும் ஒருவருக்கொருவர் முந்தினவரல்ல. ஒருவரை விட ஒருவர் பெரியவர் அல்லது சிறியவரும் அல்ல,

19. திரித்துவத்தின் மூன்று ஆளத்துவங்களும் நித்தியமானவர்கள், சமமானவர்கள்.

20. ஆனபடியால் ஒரே தேவத்துவத்தில் பரிசுத்த திரித்து வராகவும் பரிசுத்த திரித்துவத்தில் ஒரே தேவத்துவ மாகவும் உள்ளவரையே தொழுதுகொள்ள வேண்டும்.

21. ஆனபடியால் இரட்சிக்கப்பட விரும்பும் எவரும் பரிசுத்த திரித்துவத்தை விசுவாசிக்க வேண்டும்.

22. இரட்சிக்கப்பட விரும்பும் எவரும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மனித அவதாரத்தை உண்மையாய் விசுவாசிக்க வேண்டும்.

23. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவகுமாரன் என்றும், அவர் தேவனும் ( தெய்வீக மனிதன்) மனித குமாரனும் என்றும் விசுவாசிப்பதே வைதீகமான விசுவாசம்.

24. கிறிஸ்து எல்லா காலங்களுக்கும் முன்பு பிறந்தவர், பிதாவிடமிருந்து வந்த தேவன். கிறிஸ்து உலகத்திலே கன்னிமரியாளிடம் பிறந்த மனிதன்.

25. கிறிஸ்து பூரண தேவன், பூரண மனிதன். ஒரு விவேகமுள்ள ஆத்துமாவும், மனித சரீரமும் உடையவராக அவர் அவதாரம் எடுத்தார்.

26. தமது தெய்வீகத் தன்மையில் கிறிஸ்து பிதாவுக்குச் சமமானவர். அவருடைய மனித தன்மை பிதாவுக்குக் கீழ்ப்பட்டது.

27. இயேசு தேவனும் மனிதனுமாக இருப்பினும், அவர் இரண்டு கிறிஸ்துக்குள் அல்ல ஒரே கிறிஸ்துதான்.

28. அவர் ஒருவரே தெய்வீகத்தன்மை மனிதத்தன்மையாக மாறியதால் அல்ல, ஆனால் தெய்வீகத் தன்மையிலேயே மனித சரீரத்தை எடுத்துக் கொண்டதினாலேயே.

29. அவர் ஒன்றான தேவன், தெய்வீக கலந்ததால் அல்ல, ஆனால் திரித்துவத்தின் ஒருமைப்பாட்டினாலேயே

30. ஆத்துமாவும் சரீரமும் ஒரு மனிதனாக இருப்பது போலதேவனும் மனிதனும் கிறிஸ்துவாக இணைந்துள்ளனர்.

31. அவர் நமது இரட்சிப்புக்காகப் பாடுபட்டு, கீழே ஹேடிஸுக்கு ( ஆவிகள் வாழும் இடம்) சென்று, மூன்றாம் நாளிலே மரித்தோரிலிருந்து எழுந்தார்.

32. கிறிஸ்து பரமேறிச் சென்றார். இப்போது அவர் சர்வவல்லமையுள்ள பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

33. ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கும் படியாகக் கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கி வருவார்.

34. கிறிஸ்து வரும்போது மரித்தோர் யாவரும் தங்கள்



சரீரங்களோடு எழும்புவார்கள், அவனவன் தன்தன் கிரியைகளுக்கான கணக்கை ஒப்புவிப்பான்.

35. நன்மையான கிரியைகளைச் செய்தவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவார்கள், தீவினைகளைச் செய்தவர்கள் நித்திய அக்கினியை அடைவார்கள்.

36. இது சர்வலோகத்துக்கும் உரிய விசுவாசம், இதை உண்மையாகவும் உறுதியாகவும் ஒருவன் விசுவாசியாவிட்டால் இரட்சிப்பை அடைய முடியாது.

சுருக்கமாகச் சொன்னால் திரித்துவத்தில் பிதா, குமாரன் பரிசுத்த ஆவியனாவர் என்னும் மூன்று ஆள்தத்துவங்கள் இருந்தாலும் தேவன் ஒரே தேவனே. அதாவது ஒரே ஊற்றானவர் மூன்று ஆள்த்தத்துவங்களில் திரித்துவத்தின் இயைபு பிரிந்திருக்கிறதில்லை. ஆகவே ஒவ்வொரு ஆளத்துவத்துக்கு ஒரு குறிப்பிட்ட இயைபின் பகுதி என்றில்லாமல் ஒவ்வொருவரும் மற்றவரைப் போல அதே இயைபு உள்ளவர்களாய் இருக்கின்றனர். மனித மூளை இவைகள் யாவற்றையும் கிரகிக்க இயலாது, அவர்களுடைய உறவின் இரகசியத்தையும் புரிந்தறிய இயலாது. ஆனால் இந்த இரகசியத்தை பரிசுத்த வேதாகமம் நமக்கு விளக்குகிறது. பரிசுத்த வேதவாக்கியங்களுக்குப் புறம்பேயிருந்து வரும் ஒவ்வொரு மனோதத்துவ எண்ணமும் அல்லது பகுத்தறிவு விவாதமும், வேதவாக்கியங்கள் தரும் விளக்கங்களுக்குமுன் ஒரு சிறிய விளக்க முயற்சியே.

ஆதி கிறிஸ்தவர்களுக்கு திரித்துவ உபதேசம் மிகவும் பழக்கப்பட்ட ஒன்று என்று சரித்திரம் மூலம் நாம் அறிகிறோம். தேவனால் அருளப்பட்ட பரிசுத்த வேதவாக்கியங்களின் வெளிச்சத்திலே அதை அவர்கள் கற்றார்கள். அதை அவர்கள்

விசுவாசித்து அதைச் சார்ந்து கொண்டார்கள். சபையின் விதி முறைகளில் அதை வைத்தார்கள். சபையின் கொள்கை விதிகளில் மிகவும் புகழ்பெற்றது நைசின் விசுவாசப்பிர மாணமாகும் அது வருமாறு:

"வானத்தையும், பூமியையும் , காணப்படுகிற மற்றும் காணப்படாத யாவற்றையும் சிருஷ்டித்தவரான ஒன்றான மெய்த்தேவனை, சர்வவல்ல பிதாவை நான் விசுவாசிக்கிறேன். தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய, எல்லாக் காலங்களுக்கும் முன்னால் பிதாவால் ஜனிப்பிக்கப் பட்டவராகிய, தேவனாகிய தேவனாயிருக்கிறவராகிய, ஒளியின் ஒளியும், மெய்த்தேவனில் மெய்த்தேவனும், பிறந்தவர் ஆனால் சிருஷ்டிக்கப்படாதவர், பிதாவின் அதே தெய்வீக இயைபுடையவருமாகிய ஒன்றான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்.

எல்லாம் அவரால் உண்டாக்கப்பட்டன, மனிதராகிய நமக்காகவும், நம்முடைய இரட்சிப்புக்காகவும் அவர் பரலோகத்திலிருந்து இறங்கி, பரிசுத்த ஆவியின் மூலமாக கன்னி மரியாளிடம் உற்பவித்து, மனித சரீரம் எடுத்து, பொந்தியுபிலாத்துவினால் சிலுவையிலறையப்பட்டு பாடுபட்டு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார். அவர் பரலோகத்துக்கு ஏறி பிதாவுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அங்கிருந்து அவர் மிகுந்த மகிமையோடு திரும்பவும் ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருகிறார். அவருடைய இராஜ்யத்துக்கு முடிவில்லை என்று விசுவாசிக்கிறேன்.

பிதாவிடமிருந்தும் குமாரனிடமிருந்தும் புறப்படுகிற, பிதாவோடும், குமாரனோடும் ஒன்றாகப் பணிந்து கொள்ளப்பட்டு, மகிமைப்படுத்தப்படுகிற, தீர்க்கதரிசிகளால்



பேசப்பட்டவரான கர்த்தரும் ஜீவனை அருளுகிறவருமான பரிசுத்த ஆவியானவரை நான் விசுவாசிக்கிறேன்.

உலகளாவிய அப்போஸ்தல சபையை விசுவாசிக்கிறேன் பாவங்களின் மன்னிப்புக்காக அளிக்கப்படும் ஒரே ஞானஸ்நானத்தை விசுவாசிக்கிறேன்; மரித்தோரின் உயிர்த்தெழுதலையும் நித்திய ஜீவனையும் விசுவாசிக்கிறேன். ஆமென்

**இஸ்லாத்தில் திரித்துவம்**

இஸ்லாம் பலதெய்வ போதனைகளை எதிர்த்து வந்தது என்பது நிச்சயம். இந்த ( பல தெய்வ விசுவாசம்) தவறான போதனைகளை எதிர்க்கும் வசனங்கள் வருமாறு:

1. மூன்று (கடவுள்) என்று கூற வேண்டாம்..... தேவன் ஒரு தேவனே (ஸுரா அன்னிஸாவு 4:171)
2. தேவன் சொன்னார் ஓ, மரியமின் மகனான ஈசாவே, தேவனோடு கூட என்னையும் என் தாயாரையும் தெய்வங் களாக வைத்துக்கொள்ளுங்கள் என்று மக்களிடம் நீர் சொன்னதுண்டா? (ஸுரா அல்மாயிதா 5:116)
3. தேவன் மூன்றில் ஒருவர் என்று சொல்பவர்கள் அவிசுவாசிகள் ஒரே தேவனைத் தவிர வேறே தேவன் இல்லை (ஸுரா அல்மாயிதா 5:73)

தேவனுடன் வேறு தெய்வங்களை இணைத்தும் பலதெய்வங்கள் உண்டென்றும் கூறும் போதனைகளை இஸ்லாம் எதிர்த்தது என்று இந்த வசனங்களிலிருந்து தெளிவாகிறது. தேவனை மற்ற தெய்வங்களுடன் இணைத்தோ, பல தெய்வங்கள் உண்டென்றோ கிறிஸ்தவம் போதிக்கவில்லை. கிறிஸ்துவின் வார்த்தைகளை கவனியுங்கள்: உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரையே

பணிந்து, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள். (மத்தேயு 4:10)

ஆகவே இஸ்லாம் மூன்று கடவுள்களை வணங்கிய மதக்குழுவையே எதிர்த்தனர், கிறிஸ்தவ திரித்துவத்தை அல்ல என்பது தெளிவு. அவர்கள் வேறொரு போதனையை, வேறு ஒரு உபதேசத்தை எதிர்த்துப் போராடினர். நிச்சயமாகவே, பாலிதீசம் ( பல தெய்வ வணக்கம்) கொள்கைகள் எதிராக இஸ்லாம் நடத்திய தாக்குதல் பொய்யான ஒரு அல்லது பல மதக்குழுவுக்கு எதிராகவேயாகும். இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் எழும்பிய இக்குழுவை இஸ்லாம் தாக்கியது மட்டுமல்ல, கிறிஸ்தவர்களும் தீவிரமாக அதைத் தாக்கி அதை அழிக்குமட்டும் தொடர்ந்தனர். இதை என் பதில்கள் ஒன்றில் முன்னமே குறிப்பிட்டுள்ளேன்.

கிறிஸ்தவம் பல தெய்வங்களைப் போதிக்கவில்லை, கிறிஸ்து தேவனுக்கு அப்பாற்பட்ட இன்னொரு தேவன் என்றும் போதிக்கவில்லை ஒருமுறை கூட நான் சொல்லுவேன். பிதாவும் குமாரனும் தனித்தனியானவர்கள் அல்லது பிரிவுள்ளவர்கள் அல்லாது ஒரே தேவனாக இருக்கிறார்கள் என்று தான் கிறிஸ்தவம் விசுவாசிக்கிறது. கிறிஸ்துவானவர் இதை உறுதிப்படுத்தும்படியாகவே நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் (யோவான் 10:30) ஆசீர்வதிக்கப்பட்ட வரான மரியாள் தெய்வம் என்று கிறிஸ்தவம் போதிக்கிற தில்லை. மரியாளும் தமக்கு தெய்வீகத்தன்மை உண்டு என்று உரிமைகோரவில்லை. அவர் கூறினார்; என் ஆத்துமா கர்த்தரை மகிமைப் படுத்துகிறது ; என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களி கூறுகிறது (லூக்கா 1:47)

குர்ஆனில் வார்த்தைகளைப் பொறுத்த மட்டில் ஸூரா அல்மாயிதா 5:73ல் தேவன் மூன்றில் ஒருவராக இருக்கிறார் என்று சொன்னவர்கள் அவிசுவாசிகள்... என்று உள்ளது. இது



கிறிஸ்தவத்தின் எதிரிகளான மர்சியோனைட்ஸ் போன்றவர்கள் பயன்படுத்திய மேற்கோள் ஆகும். இந்தக் கூட்டத்தார் மூன்று கடவுள்களை வணங்கும்படி போதனை செய்த படியால் சபைக்குப் புறம்பாக்கப்பட்டனர். மூன்று தெய்வங்களுக்கு அவர்கள் வைத்த பெயர்கள் :

1. அடில் – தோராஹ்வை அனுப்பிய தேவன்
2. சலிஹ் – தோராஹ்வுக்குப் பதில் புதிய ஏற்பாட்டை ஏற்படுத்திய தேவன்
3. ஈவில் – சாத்தான்

இஸ்லாம் இன்னும் இரண்டு போலி மதக் குழுக்களையும் எதிர்த்தது. மானிசீஸ் மற்றும் திசனியே என்ற பெயருடைய அவ்விரண்டு கூட்டத்தார். இரண்டு கடவுள்களை வணங்கினார் ஒரு கடவுள் ஒளியின் ஊற்றான நன்மைக்கான கடவுள் மற்றது இருளின் ஊற்றான தீமைக்கான கடவுள். இஸ்லாமுக்கு முன்னரும் பின்னரும் இப்போலி மதக்குழுக்கள் கிறிஸ்தவத்துக்கு எதிரிகளாயிருந்தனர். முஸ்லிம்கள் கரிஜியாவைக் கருதுவதுபோல சபையானது இவர்களை துர்உபதேசக்காரர்களாக, புறம்பானவர்களாக இன்னமும் கருதுகிறது. கரிஜியாவின் இறைநூலையும் ஸுன்னாவையும் விட்டு விலகி ஃபாதிமித் ஆளுநரான ஹக்கிமிற்குள் இறைவன் வாழ்ந்தார் என்று கூறினார். சிலர் கற்பனை செய்வதுபோல ஆரோக்கியமான கிறிஸ்தவ உபதேசமான திரித்துவத்தை இஸ்லாம் : எதிர்த்துப் போராடவில்லை. ஆனால், மேற்குறிப்பிட்ட போலி மதக்குழுக்களை மட்டுமே எதிர்த்தது. எனவே பல கடவுள்களை வணங்குபவர்களை எதிர்த்துப் பேசப்பட்ட மேற்குறிப்பிட்ட வசனங்கள் உண்மையில் மெய்யான கிறிஸ்துவத்துக்கு எதிரானவை என்று நான் கருதமாட்டேன்.

இஸ்லாமிய நூல்களில் இக்கருத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, தீர்க்கதரிசிகளாக மதிக்கப்பட்ட முஸ்லிம் கல்விமான்கள் கிறிஸ்தவ உபதேசமான திரித்துவத்தை ஆய்வு செய்து அதன் மெய்யான அர்த்தத்தை உறுதி செய்தனர் என்று நாம் காணலாம். உஸூல்-எத்-தீன் என்னும் நூலின் பழைய பதிப்பில் எழுதப்பட்டவைகளை மேற்கோள் காட்டுவது போதுமானது. இமாம் அபா ஹமித் அல்-கஜாலியின் காலத்தில் வாழ்ந்த அபி அல்கஹய்ர் இபின் அல்-தயிப் என்பவரால் இந்நூல் எழுதப்பட்டது. அவர் கூறினார். சில கிறிஸ்தவர்கள் நீங்கள் உலக முழுவதும் சென்று சுவிசேஷம் அறிவித்து பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று சுவிசேஷம் குறிப்பிடுவது பல கடவுள்கள் மீது விசுவாசிக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது என்று அடி அல் கஹய்ர் இபின் அல் – தயிப்பிடம் கூறினார் அதற்குப் பதிலாக அல்-தயிப் கூறினார். சுவிசேஷங்கள் பவுலுடைய நிருபங்களுடனும் மற்ற சீஷர்களுடைய எழுத்துக்களுடனும் சேர்ந்து கிறிஸ்தவப் பிரமாணத்தின் நடுமையமாக விளங்குகின்றன என்பதில் சந்தேகமில்லை. இந்த நூல்களும் உலகமெங்குமுள்ள கிறிஸ்தவக் கல்விமான்களுடைய கூற்றுகளும் அவர்கள் ஒரே தேவனில் விசுவாசிக்கின்றனர் என்பதற்குச் சாட்சிகளாய் இருக்கின்றன. பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி என்னும் பெயர்கள் தேவனுடைய குணாதிசயங்கள் தாமே. நான் இதை விளக்கமாக விவரிக்க வேண்டுமென்றால், நான் விளக்கமான சான்றுகளைத் தரமுடியும். ஆனபடியால் கிறிஸ்தவர்கள் விசுவாசிப்பதன் நம்பகத் தன்மையை ஏற்றுக்கொள்ள இசைந்தேன். அவர்களுடைய விசுவாசத்தின் சாரம் இதுதான். சிருஷ்டிகர் பூரணத்தைக் குணாதிசயமாகக் கொண்ட ஊற்றானவர் கிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்ட தனிப்பட்ட



குணநலன்கள் அவருக்குண்டு. அவையாவன: பிதா, குமாரன், பரிசுத்த ஆவி அவை முழுமையான மனதை உடைய ஆளத்துவத்தை பிதா அல்லது சிருஷ்டிகர் என்று குறிப்பிடுகின்றன. விவேகமுள்ள மனதையுடைய அதே ஆளத்துவத்தை குமாரன் என்று குறிப்பிடுகின்றன. விவேகமுள்ள வெளிப்படுத்தல்களுடையவராய் கீழ்ப் படிந்துள்ள அதே ஆளத்துவத்தை பரிசுத்த ஆவி என்று குறிப்பிடுகின்றன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஊற்றானவர் இருப்பவரும், சூழ்நிலைகளைச் சார்ந்துகொள்ளாத வருமானவர்.

புகழ்பெற்ற முஸ்லிம் எழுத்தாளரான இமாம் அப்-ஹமித் முஹம்மத் அல்- கஜாலி தமது புத்தகமாகிய அல்-ரடஜ் அல்-ஜமீல் (அழகான மறுமொழி) -ல் கிறிஸ்தவ உபதேசமாகிய திரித்துவம் பற்றி கூறுகிறார்.

சிருஷ்டிகர் தாமே ஒரே ஊற்றானவர் என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர், இது அர்த்தம் பொதிந்தது. இந்த இருக்கிறவரானவர் மற்றொருவரைச் சாராமலிருக்கும் போது அவர் முதன்மையானவர் மற்றும் முழுமையானவர். அவரைத் தான் கிறிஸ்தவர்கள் பிதாவானவர் என்று அழைக்கின்றனர். அவர் இன்னொன்றைச் சார்ந்து இருப்பாரானால் அறிந்து கொள்பவரைச் சார்ந்திருக்கும் அறிவைச் சார்ந்திருப்பரானால் அவரை குமாரன் அல்லது வார்த்தை என்று அழைக்கின்றனர். அவர் அவரிடத்திலிருந்து பெறப்படும் அதிகாரத்தைச் சார்ந்துகொள்வாரானால் அவரை பரிசுத்த ஆவியனாவர் என்று அழைக்கின்றனர். ஏனெனில் சிருஷ்டிகரின் ஆளத்துவம் அவராலே உருவேற்றப்படுகிறது. இந்த வழக்கத்தின்படியான விளக்கத்தின் பலன் என்னவெனில் தேவனுடைய ஆளத்துவம் அடிப்படையில் ஒன்றானது, திரித்துவத்தின் மூன்று ஆளத்துவத்தின் குணாதிசயங்களை

உடையது.

**அவர் தொடர்ந்து கூறிகிறார்.**

தேவன் என்பவர் சரீரமற்ற ஒரு ஆள்த்துவம் பொருள் சார்ந்ததல்ல, புரிந்து கொள்ளும் சக்தி என்பதன் அர்த்தத்துக்காக நிற்பவர், பிதா என்னும் ஆள்த்துவமாக அழைக்கப்படுவர். தன்னையே வெளிப்படுத்தும் விவேகத்துடன் கூடிய அதிகாரமானவர் குமாரன் அல்லது வார்த்தை என்ற அழைக்கப்படுகிறார். அவரிடம் இருந்து புறப்படுவது என்ன என்று நீங்கள் எண்ணிப்பார்ப் பீர்களானால், அது அவரிடமிருந்து புறப்படுவதின் வெளிப்பாடு எனில் அவர் பரிசுத்த ஆவியானவர் என்று அழைக்கப்படுகிறார். இந்த வார்த்தைகளின்படி புரிந்துகொள்ளும் சக்தி என்பது தேவன் என்னும் ஆளத்துவத்தின் வெளிப்பாடு மட்டுமே. பிதாவானவர் அவருக்குச் சமமானவர். விவேகத்தினால் நிறைந்து தம்மில்தாமே வெளிப்படுகிறவராய் இருக்கிறவர் குமாரன் அல்லது வார்த்தை அவருக்குச் சமமானவர். உருவேற்றப்படுகிறவரும் தேவனுடைய வெளிப்பாடா யிருக்கிறார் அவருடைய சுயம் தாமே உருவேற்பட்டவர். பரிசுத்த ஆவியானவர் அவருக்குச் சமமானவர் மேலும் அவர் கூறினார்: "இந்த அர்த்தங்களும் சரியாக இருக்குமென்றால் பேச்சாளர்களின் தத்துவார்த்தங்களும் மரபு வழக்குகளும் பிரச்சனையே அல்ல".

இமாம் ஃபக்கீர் அத்தீன் அல் ரஸி கிறிஸ்தவ திரித்துவ உபதேசங்கள் குறித்துப் பின்வருமாறு கூறுகிறது.

கிறிஸ்தவர்கள் கூறுவதாக இறையியல் வல்லுநர்கள் கூறுவதாவது, ஒரு அடிப்படை, மூன்று ஆளத்துவங்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி இந்த மூன்று ஆளத்துவங்களும் ஒரே தேவனாயிருக்கிறார்கள். சூரியனில் ஒரு வட்டம்,



ஒளிக்கீற்றுகள் மற்றும் வெப்பம் ஆகியவை இருப்பது போல பிதா தேவன் என்றும் குமாரன் வார்த்தை என்றும் பரிசுத்த ஆவி ஜீவன் என்றும் கிறிஸ்தவர்கள் கூறுகின்றனர். மேலும் பிதா தேவன் என்றும் குமாரன் தேவன் என்றும் பரிசுத்த ஆவியானவர் தேவன் என்றும் கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர். இந்த மூன்று ஆளத்தவங்களும் ஒரே தேவனாயிருக்கின்றனர். (பெரும் வியாக்கியானம், பகுதி 12, பக்கம் 102)

அலி பின் வாஃபாவை மேற்கோள் காட்டி இன்னொரு எழுத்தாளர் கூறுகிறார்: "சுயமானது ஒன்றை மட்டுமே குறிக்க வேண்டும் பலவற்றை அல்ல. ஆனால் குணாதிசயங்கள் விஷயத்தில் பூர்வத்தார் பன்மையையும் பயன்படுத்தி யுள்ளனர் என்று முதாஜிலா கூறியுள்ளார். இது வழக்கமான ( பயன்படுத்தப்படுகிற) பன்மையாகும், ஒரு மரத்தின் கிளைவேரோடு கொண்டுள்ள, அல்லது விரல்கள் உள்ளங்கையுடன் கொண்டுள்ள, அவசியமான ஐக்கியத்தை இது மறுப்பதில்லை.

அல் மிஹல் வல் நிஹல் எழுதிய புத்தகத்தில் முதஜிலாவின் ஷேக்கும் பாடசாலையின் தலைவருமான அபௌ ஹுஜைல் ஹம்தான் கூறுகிறார். சிருஷ்டிகர் ( அவர் போற்றப்படுவாராக) அறிகிறவராயிருக்கிறார், அவரது அறிவு அவரேயாவார். அவர் திறமையுள்ள சர்வவல்லவர், அவரது திறமை அவரேயாவார் ; ஜீவன் உள்ள ஜீவனானவர், அவரது ஜீவன் அவரேயாவார். சிருஷ்டிகரின் சுயம் ஒன்றே பல அல்ல என்று கூறய தத்துவஞானிகளிடமிருந்து இந்த அடிப்படைக்க ருத்தை அபௌ ஹுஜைல் எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆயினும் குணாதிசயங்கள் அவரது ஆள்த்துவத்திலிருந்து வேறுபட்டதல்ல, அந்தக் குணாதிசயங்களே அவராயிருக்கிறார் என்பதே உண்மை. அறிவை அறிந்து கொள்கிறவரானவர்

அவரே என்பதின் பொருள் அந்தக் குணாதிசயம் என்பது அவரே, அந்தக் குணாதிசயமே சுயமாயிருக்கிறவர், அந்த சுயமே குணாதிசயம் என்பதாகும். குணாதிசயங்களை சுயமானவருக்கு உரியதென நிரூபிப்பதில் அபௌ ஹுஜைல் வெற்றி பெற்றிருந்தால் அந்த குணாதிசயங்கள் கிறிஸ்தவ திரித்துவத்தின் ஆளத்துவங்களேயாகும்.

தலைவர் என்று அழைக்கப்பட்ட இபின்சினா கூறுகிறார்: "அவசியமான அடிப்படையானவர் ( தேவன்) என்பது ஒரு மனதை, ஒரு பகுத்தறியக்கூடிய நபரை, பகுத்தறிவைக் குறிக்கிறது. அவர் தம்மைத்தாகும், மற்றவைகளையும் ஆராய்ந்து அறிபவர். ஆனால் அவருடைய நேரான மற்றும் எதிரான குணாதிசயங்கள் ஆள்த்துவ பன்மையைக் குறிப்பிடுவதாக இருக்க வேண்டுமென்பதில்லை. அது தன்னில் தானே முழுமையானதாயிருந்தால் அது தானே மனதாக இருக்கிறது. மேலும் அவசியமான அடிப்படையானவர் (தேவன்) முழுமையானவர், பொருளிலிருந்து வேறுபட்டவர் ; ஆகவே அவர் தம்மில் தாமே ஒரு மனதாய் இருக்கிறார். அவருடைய முழுமையான அடையாளத்தை சுயம் என்ற கருதுகிறோம், ஆகவே அவர் தம்மையே ஆராய்ந்து அறிகிறவர். அவருடைய சுயம் முழுமையான அடையாளம் உள்ளதெனில் அவர் தம்மில் தாமே விவேகமுள்ளவர். தம்மில் தாமே விவேகமும் ஆராய்ந்தறியும் தன்மையும் அடையாளத்தில் அல்லது விவேகத்தில் இரட்டைத் தன்மையுடையவராய் இருக்கத்தான் வேண்டும் என்பதில்லை.

இபின் சினா மற்றும் அபு ஷதியேல் ஆகியோர் இவை யாவற்றையும் சொல்வதால் வெளிப்படுத்தும் கருத்து யாதெனில் : தேவன் அறிவாகவும், அறிகிறவராகவும், அறியப்படுகிறவராகவும் இருக்கிறார். மனிதனுடைய மனது இதை கிரகிக்க முடியாது, தான் ஒரு கூட்டுப்பொருளல்ல



என்பதையும் அவன் அறியான். அவன் கூட்டுப்பொருளுக்கு அப்பாற்பட்ட ஒரு ஐக்கியம், தூய்மையான எளிய ஒருவன்.

சில முஸ்லிம் கல்விமான்களை மேற்கோள் காட்டுவதன் காரணம். அவர்களுடைய கருத்துக்களுடன் தேவனுடைய திரித்துவத்தை ஒப்பிடுவதற்காக அல்ல, ( வேதாகமம் நமக்கு வித்தியாசமாய்ப் போதிக்கிறது ஆனால் கிறிஸ்தவர்கள் ஒரே தேவனில் பன்மையோ பல பாகங்களோ உண்டு என்று விசுவாசிப்பதில்லை என்பதைக் கேட்பவர்களுடைய மனதில் பதியவைக்கும் படியாகவே அப்படிச் செய்கிறோம். தேவன் மூன்று ஆளத்தவங்களில் இருக்கிறார் என்றும் அந்த மூன்று ஆள்த்துவங்கள் ஒன்றான ஒரே தேவனின் வெவ்வேறு தோற்றங்களல்ல என்றும் கிறிஸ்தவ விசுவாசம் நமக்குப் போதிக்கிறது. ஆனபடியால் தேவத்துவத்தின் முதல் ஆள்த்துவத்துடன் இரண்டாவது ஆள்த்துவத்தின் குமாரத்துவம் என்னும் உறவு நாம் வழக்கமாகச் சிந்திக்கிறபடி மனுஷீகப் பிறப்பல்ல, தேவத்துவத்தின் இரண்டு ஆளத்துவங்களுக்கு இடையில் நித்தியமாய் விளங்கும் உறவைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு பதமாகும் அது. தேவத்துவத்தின் மூன்றாவது ஆளத்துவத்துக்கும் முதலாம் மற்றும் இரண்டாம் ஆளத்துவம் இரண்டுக்கும் இடையிலுள்ள உறவையும் அந்த பதம் வரையறுப்பது போலவே இதுவும்.

வேதாகமத்தில் கிறிஸ்துவைக் குறிக்கும், பிற்காலத்தில் இஸ்லாத்தில் பயன்படுத்தப்பட்ட, "வார்த்தை என்னும் பதம் முதலாம் மற்றும் இரண்டாம் ஆளத்துவங்களுக்கிடையேயுள்ள ஐக்கியத்தைக் குறிக்கிறது". முஸ்லிம் ஒருவர் குர்ஆனின் வசனங்களை வகைப்படுத்திப் பார்ப்போமானால் "தேவனுடைய வார்த்தை என்னும் பதம் தேவனுடைய சுயத்தின் குணாதிசயமாக நித்தியமாக மாற்றப்படாததாக விளங்குகிறது என்று உணர முடியும். சுருக்கமாக, கேள்வி கேட்பவர்

கற்பனை செய்தது போல மூன்று வித்தியாசமான தோற்றங்களை உடையவரல்ல தேவன், ஆனால் வல்லமையிலும் மகத்துவத்திலும் மகிமையிலும் சமமான மூன்று ஆள்தத்துவங்களான ஒரே தேவனாக இருக்கிறார். அவருடைய குணாதிசயங்கள் ஒற்றுமையின்மைக்கு அப்பாற்பட்டிருப்பது போல தேவத்துவத்திலும் மூன்று ஆள்தத்துவங்களும் அப்படியேயிருக்கிறார்கள்.

வார்த்தையானவர் மாம்ச சாயலை தம்மேல் தாமே ஏற்றுக்கொண்டார், எனினும் எல்லைக்குட்பட்டவராகவோ முடிவுக்குட்பட்டவராகவோ மாறவில்லை. ஏனெனில், அவர் விரிவாகவோ குறுகவோ முடியாத எல்லையற்ற முடிவற்ற ஆவியாயிருக்கிறார் என்று நாம் கருதாதபடி இறையியல் நம்மைத் தடுப்பதில்லை.

ஆனபடியால், தெய்வீகமான தேவன், தேவனுடைய நித்தியமான பரம அடிப்படையை மாற்றவோ வேறுபடுத்தவோ இல்லை, தேவத்துவத்தின் ஆளத்துவங்களிலும் எந்த வேற்றுமையும் இல்லை. அவர்கள் வல்லமையிலும் திறமையிலும் சமமானவர்கள். கிறிஸ்து மனிதனான போதும் அப்படியே. அவர்கள் ஒரே மனதும் சித்தமும் உடையவர்களாய் அறிவாற்றலில் ஒன்றானவர்களாய் இருக்கின்றனர்.

கிறிஸ்து கூறினார்: "பிதாவானவர் செய்வதெதுவோ அதைக் குமாரன் நாமும் செய்கிறார்" (யோவான் 5:19) பவுல் கூறுகிறார். "அப்படிப்போல தேவனுடைய ஆவியேயன்றி தேவனுக்குரியவைகளை ஒருவனும் அறியான்" (1கொரிந்தியர் 2;11) ஒரே தேவனுடைய திரித்துவத்தில் எவ்வித வித்தியாசமும் இல்லை. குமாரன் மனித அவதாரமெடுத்து உலகத்திற்காகத் தம்மைப் பாவ நிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார். பரிசுத்த ஆவியானவர் நமது இருதயங்களைப் புதுப்பிக்கிறார். திரித்துவத்தின் சம்பூரண குணாதிசயங்களுள்ள தெய்வீக



மனிதனாக குமாரனை பிதாவானவர் அனுப்பினார். நாம் புரிந்து கொள்வதற்கும் அப்பாற்பட்டதாய் இது இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. தேவனைக் குறித்து பவுல் ரோமர் 11:33ல் கூறுகிறார்.

"ஆ தேவனுடைய ஞானம், அறிவு என்பவைகளின் ஐசுவரியத்தினுடைய ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் ஆராயப்பட முடியாதவைகள் ; அவருடைய வழிகள் அறியமுடியாதவைகள்".

இஸ்லாம் இந்தச் சத்தியத்தை விசுவாசிக்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அல்-பாப் என்னும் (கதவு) புத்தகத்தில் பக்கம் 322ல் ஷேக் முஹ்யி அல் - தீன் கூறுகிறார். தேவனுடைய மனதில் அதிக ஆழமாய்த் தோண்டிப் பார்க்கிறவன் தேவனுக்கும் அவருடைய தீர்க்க தரிசிகளுக்கும் எதிரான மீறுதல் செய்கிறான். வேலையாள் தன்னைக் கூட அறியமுடியாமலிருக்கும் போது, உன்னதமானவரின் சத்தியத்தை எப்படி அவன் அறியவோ அல்லது ஊடுருவவோ முடியும்?

பக்கம் 373ல் அவர் கூறுகிறார் : "தேவன் எண்ணத்தின் பார்வையினால் கிரகிக்கப்படமுடியாதவர். தேவனுடைய மனதை ஊடுருவ முயற்சிப்பவர்கள் மகாபாவிகள். அவர்கள் அறியாமையின் மிக அவர் மேலும் கூறுகிறார்: "நாம் இரத்தக்குழாயைவிட அவருக்குச் சமீபமாயிருக்கிறோம்", அவர் மிக அருகில் இருக்கிறார், அந்த இரத்தக்குழாயை விடவும் மிக அருகில் என்பது இதன் பொருள். ஷேக் இப்பரஹீம் கூறுகிறார். ஆனபடியால், தம்முடைய ஆளத்தவத்துக்கு அப்பால் தம்முடைய எல்லா குணாதிசயங்களுடனும் நமக்கு மிக அருகிலிருக்க முடியாது. உண்மையில் தம்முடைய ஆளத்துவங்களுடன் அவர் நமக்கு அருகிலிருக்கிறார். ஷேக் முஷம்மத் அல்-மக்ஹரபி அல்-ஷத்லி அந்த கூட்டத்திற்கு

வந்து அவர்கள் பேசுவதைக் கேட்டார். அவர் கூறினார். தேவன் நித்தியமானவர், துவக்கமில்லாதவர். துவக்கத்திற்கு முன்பே அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். தேவன் என்றைக்கும் இருக்கிறார், அவர் முடிவில்லாதவர். தேவன் தமது சிருஷ்டிகளுடன் ஆரம்ப முதல் இருக்கிறார்." அவர்கள் அனைவரும் அவருடன் ஒத்துப்போனார்கள், அந்தக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. அந்தக் கல்விமான்களும், புகழ்பெற்ற ஷேக்குகளும் தேவ பிரசன்னத்தினை ஒப்புக் கொண்டனர். "தேவன் உங்களோடு இருக்கிறார். தேவன் தரும சிந்தனையுள்ளவர்களிடமிருக்கிறார் என குர்ஆன் சொல்வது போல தமது எல்லாக் குணாதிசயங்களுடனும் ஆளத்துவத் துடனும் இருக்கிறார் என ஏற்றுக்கொண்டனர். பரிசுத்த வேதாகமம் மத்தேயு 28:20ல் கூறுகிறது.

"நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார்.

**இம்மானுவேல் தேவன் நம்மோடு**

கி.பி. 905ம் ஆண்டில் ஒரு கடிதத்தைக் குறித்து விவாதிக்க அநேக முஸ்லிம் ஷேக்குகளின் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட கருத்து "தேவன் நம்மோடு" என்பதாகும். ஷேக் புரா அல்தீன் கூறினார்: "தேவன் தம் முடைய பெயர்களாலும், குணாதிசயங்களாலும் அல்ல". ஷேக் இப்ரஹீம் கூறினார்: "இல்லை! அவர் தம்முடைய ஆளத்துவத் தாலும் குணாதிசயத்தாலும் நம்முடன் இருக்கிறார்" வேறொரு ஷேக் கேட்டார்: "நீர் சொல்லும் வார்த்தைக்கு ஆதாரம் என்ன?" ஷேக் இப்ராஹீம் மறுமொழியாக, "குர்ஆன் கூறுகிறது, இறைவன் உங்களோடு இருக்கிறார்" ஆகவே தேவனுடைய தனிப்பட்ட பிரசன்னத்தை நாம் விசுவாசிக்க



வேண்டும். ஷேக் இபின் அல்-லாபான் கூறினார்: "நாங்கள் உங்களை விட அதிகமாக அவருக்கு அருகிலிருக்கிறோம், இருப்பினும் நீங்கள் அவரைக் காண்கிறதில்லை. "இந்த வசனம் தேவன் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு நெருக்கமாக இருக்கிறார் என்பதற்கு ஒரு சான்றாகும். நீங்கள் காண்கிறதில்லை" என்று சொல்வதானது தேவனுக்கு மனிதனிடமுள்ள நெருக்கத்தை வலியுறுத்திக் காண்பிக்கவே.

முடிவாக, தெய்வமானது மனித உருவில் அவதாரம் எடுப்பது மிகவும் சாத்தியமே என்று நான் சொல்ல விழைகிறேன். தேவன் தம்முடைய குணாதிசயங்களுடனும் தமது ஆளத்துவத்துடனும் தம்முடைய சிருஷ்டியோடு கூட இருக்க முடியும் என்று இஸ்லாம் விசுவாசிக்கிறது, அறிக்கை செய்கிறது. இந்த இரகசியம் மனித மனதிற்கும் புரிந்து கொள்ளுதலுக்கும் மேற்பட்டது.

வார்த்தையின் அவதாரத்தை அதாவது தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டதை ஏற்றுக்கொள்ள எப்படி மற்ற முஸ்லிம்கள் மறுக்க முடியும்?

**கேள்வி:** ஆதாமின் பாவம் மன்னிக்கப்பட அப்படிப்பட்ட சோகமும் சிரிப்பும் கலந்த நாடகம் தேவைப்பட்டதென்றால், ஆதாம் முதல் இதுவரைக்குமுள்ள எல்லா மனிதருடைய பாவங்களை மன்னிக்க என்ன தேவைப்படும்?

**பதில் :** கிறிஸ்துவின் பலியானது உலகத்தின் பாவங்களைப் போக்கிவிட்டது என்று ஏற்கனவே நான் குறிப்பிட்டிருக்கிறபடியால் அதை இப்போது மறுபடியும் சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் நாடகம் என்று பரிகசிக்கும் காரியத்தை தேவன் இயேசுவின் சாயலை வேறொருவர் மீது வைத்தார் என்றும் இயேசுவுக்குப் பதில் இவர் தான்

சிலுவையில் அறையப்பட்டார் என்று சொல்லப் படுவதில் தான் கண்டுபிடிக்க வேண்டும். அந்த வேறொரு நபரின் அடையாளம் குறித்து முஸ்லிம் கல்விமான்களுக்கும் ஒத்த கருத்து இல்லை.

**அவருடைய அடையாளத்திற்கான சில யூகங்கள் இதோ:**

1. அவர் யூதனாகிய டிடாவுஸ், இயேசுவைக் கைது செய்யும்படி ஒரு வீட்டில் இவர் பிரவேசித்தார். இவரால் இயேசுவைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. தேவன் இவரை இயேசுவைப் போலத் தோற்றமளிக்கச் செய்து விட்டார். அவர் வீட்டிலிருந்து வெளியேறியபோது அவரை கிறிஸ்து என்று யூதர்கள் எண்ணி, அவரைப் பிடித்துக் கொண்டுபோய் சிலுவையில் அறைந்து விட்டனர்.
2. யூதர்கள் இயேசுவைக் கைது செய்தபோது அவரைக் கண்காணிக்க ஒரு காவலரை நியமித்தனர். இயேசு தம் சாயலை அந்த காவலர் மீது வைத்துவிட்டுப்பர மேறிவிட்டார். யூதர்கள் அவரைப் பிடித்துக் கொண்டு போய், "நான் கிறிஸ்து அல்ல" என்று அவர் கதறியும், அவரைச் சிலுவையில் அறைந்து விட்டனர்.
3. இயேசு தம் நண்பர்களில் ஒருவருக்கு பரதீசை வாக்குப் பண்ணினார், அந்த நண்பர் இவருடைய இடத்தை எடுத்துக்கொள்ள முன்வந்தார். ஆகவே தேவன் கிறிஸ்துவின் சாயலை அந்த நண்பர் மீது வைக்க, யூதர்கள் அவரைப் பிடித்துக் கொண்டு போய். சிலுவையில் அறைந்து விட்டனர். இயேசுவோ பரமேறிச் சென்று விட்டார்.
4. கிறிஸ்துவின் சீடர்களுள் ஒருவரான யூதாஸ் அவரை விட்டு விலகி யூதர்களிடம் சென்று தான் இயேசுவைக் காட்டிக்கொடுப்பதாகக் கூறினார் அப்படி இயேசுவைப்



பிடிக்க யூதர்களுடன் அவர் உள்ளே சென்றபோது தேவன் இயேசுவின் சாயலை யூதாஸின் மேல் போட்டுவிட, யூதர்கள் யூதாஸை வெளியே கொண்டுபோய் சிலுவையில் அறைந்துவிட்டனர்.

இமாம் அபூஜாஃபர் அல்-தபரி வியாக்கியானம் என்னும் நூலில் இந்த சாயல் குற்றச்சாட்டுகள் குறித்துப் பல கதைகளைக் குறிப்பிட்டுள்ளார்.

1. சிலர் கூறியுள்ளதாவது, "யூதர்கள் இயேசுவையும் அவருடைய சீஷர்களையும் சூழ்ந்து கொண்டபோது, எல்லாருமே இயேசுவின் சாயலை அணிந்து கொண்டனர். யூதர்கள் குழம்பிப்போய் அதனால் மற்றவர்களில் ஒருவரைக் கொன்றுபோட்டனர் (சல்மாவுக்குப் பிறகு)
2. இன்னொரு கதை : "இயேசு பதினேழு சீஷர்களுடன் வந்தார். யூதர்கள் அவர்களைச் சுற்றி வளைத்தனர். தேவன் சீஷர்களை இயேசுவின் சாயலில் ஆக்கிவிட்டார். யூதர்கள் சீஷர்களைப் பார்த்து, நீங்கள் எங்களை மாயவித்தை செய்துவிட்டீர்கள். உங்களில் யார் இயேசு என்று சொல்லிவிட்டால் உங்களுக்கு நல்லது அல்லது உங்கள் அனைவரையும் கொன்று போடுவோம், அப்பொழுது இயேசு சீஷர்களைப் பார்த்து, பரதீசை அடைந்துகொள்ளும்படியாக உங்களில் யார் உயிரைக் கொடுக்கத் தயாராயிருக்கிறீர்கள்? "சீஷர்களில் ஒருவர் முன்வந்து, வெளியே போய் "நான் தான் இயேசு என்று சொல்ல அவர்கள் அவரைக் கொண்டு போய் சிலுவையிலறைந்தனர்.
3. இன்னொரு கதை : இஸ்ரவேல் புத்திரர் ஒரு வீட்டில் இயேசுவையும் பத்தொன்பது சீஷர்களையும் சுற்றி வளைத்தனர். இயேசு சீஷர்களை நோக்கி, என்

சாயலை ஏற்றுக்கொண்டு, மரித்து, பரதீசுக்குச் செல்ல விருப்பமுள்ளவன் யார்? எனக் கேட்க ஒரு சீஷன் முன் வந்தார். அவரைப் பிடித்துக் கொண்டுபோய் சிலுவையில் அறைந்து விட்டனர். இயேசுவோ பரலோகத்துக்குச் சென்று விட்டார்.

4. இன்னொரு கதை : இஸ்ரவேலின் இராஜாவாகிய தாவீது இயேசுவைக் கொல்லும்படி ஒரு மனிதனை அனுப்பினான். அம்மனிதன் வேறு ஆட்களைக் கூட்டிக்கொண்டு சென்றான். இயேசு தமது பதின்மூன்று சீஷர்களுடன் இருந்தார். தம்மை ஆட்கள் பிடிக்க வந்துவிட்டதை அறிந்த இயேசு தமது சீஷர்களில் ஒருவரை தம்மைப் போலவே தோன்றச் செய்தார். அந்த ஆட்கள் அந்தச் சீஷனைப் பிடித்துக் கொண்டு போய் சிலுவையில் அறைந்து விட்டனர்.

அப்படியானால் இயேசுவின் சாயலுக்கு மாற்றப்பட்ட மனுஷன் யார் தான்? அவர் யூதாஸா அல்லது வேறு ஒருவரா? தேவன் கொடுமையுள்ளவரென்றும், அவர் ஒரு ஏழையான, பாவமற்ற மனுஷனைக் காட்டிக்கொடுத்து சிலுவையிலறையப்படவும் கொல்லப்படவும் ஒப்புக்கொடுத்தார் என்று அவரைக் குற்றஞ்சாட்டுவதில் தான் நீங்கள் சொல்லும் சோகமும் சிரிப்பும் கலந்த நாடகம் உள்ளது. யாரையும் வஞ்சிப்பது தேவனுக்குத் தூரமாயிருப்பதாக. "தேவன் தம்மில் விசுவாசிக்கிற மக்களை வஞ்சிக்கிறவரல்ல. மனிதன் தான் தனது சகமனிதனை வஞ்சிக்கிறான்".

**கேள்வி :** பாவநிவர்த்தி திட்டம் ஏன் கிறிஸ்து வரும் வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டது? கிறிஸ்துவின் பாவநிவர்த்திக்கு முன்பு மரித்தோரின் கதி என்ன?

**பதில் :** தேவன் தமது ஆலோசனையில் உலகின் மீட்புக்காக ஒரு நேரத்தையும், இடத்தையும்,



பலியையும் நியமித்தார். இந்தத் திட்டம் நீங்கள் பயன்படுத்திய ஒத்திவைக்கப்பட்டது என்னும் வார்த்தையை புறந்தள்ளுகிறது.

ஆதாமின் விழுகையின் விளைவாக உலகம் சாபத்திற்குள்ளானது என்பது மெய்யே. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையினால் சகலமும் சீர்படுத்தப்படுவதற்கு முன் சாபம் விளைவுகளை ஏற்படுத்த வேண்டும் என தேவன் தீர்மானித்தார். உலகத்தில் வடிவத்தையே மாற்ற போகும் ஒரு உலகளவிய பேரழிவினால் இது வருவதாய் இருந்தது. இப்படியாக சீர்திருத்த நேரத்திற்க்கு முன்பே சாபத்தின் விளைவுகள் காணப்படும்.

மேலும் மோசே வருவதற்கு முன்பே கிறிஸ்துவின் வருகை சரியானதாக அமையாது, ஏனெனில் தேவனுக்கு எதிராக ஒட்டுமொத்தமாக ஜனங்கள் பொதுவாகக் கலகம் செய்யவில்லை. வேறு வார்த்தையில், அவர்கள் எல்லாருமே விக்கிரகாராதனை என்னும் இருளின் கீழ் இருக்கவில்லை.

ஜலப்பிரளயத்திற்கு முன்போ அல்லது அது நிகழ்ந்த பின்போ கிறிஸ்து வராததற்கு காரணம் ஒருவேளை இந்த உலகமானது தேவன் ஆதாமுக்குச் சொன்னது போல (ஆதியாகமம் 1:28) ஜனங்களால் நிறைந்திருப்பதைக் காண தேவன் விரும்பியதனால் இருக்கலாம்.

கிறிஸ்துவின் வருகை பாபிலோனிய சிறையிருப்புக்கு முன்பாக நிகழ்வதும் சரியாக இருந்திருக்காது. ஏனெனில் சாத்தானின் இராஜ்யம் உச்சநிலையை அடைந்திருக்கவில்லை. சிறையிருப்புக்குமுன் விக்கிரக ஆராதனைக்காரர்களின் இராஜ்யங்கள் பெரியவனாக இருக்கவில்லை. ஆகவே சரித்திரம் ஒருபோதும் கண்டிராத மிகப்பெரிய இராஜ்யம் ஆளுகை செய்தபோது கிறிஸ்து வருவது பொருத்தமாக இருக்கும் என்று தேவன் கண்டார். அது

உலகத்தில் காணக்கூடிய சாத்தானின் இராஜ்யமாய் இருந்த ரோமப் பேரரசாகும். இந்தப் பேரரசு மகிமையின் மற்றும் வல்லமையின் உச்சத்தில் இருந்தபோது அதை மேற்கொள்வதன் மூலமாக கிறிஸ்து சாத்தானின் இராஜ்யத்தை தோற்கடித்திருப்பார்.

முக்கியமான காரியம் என்னவெனில், "ஆதியிலே தேவனோடு இருந்த அந்த வார்த்தை, தேவனாக இருந்த அந்த வார்த்தை" நம்மை மீட்கும்படியாக, இம்மானுவேல் நம்மோடிருக்கிறராக காலம் நிறைவேறினபோது வந்தார். கண்கள் அவரைக் கண்டன, காதுகள் அவரைக் கேட்டன, கைகள் அவரைத் தொட்டன. "கண்கள் அவருடைய மகிமையை, ஒன்றான ஒரேயொருவருடைய மகிமையை, பிதாவிடமிருந்து, கிருபையும் சத்தியமும் நிறைந்தவராய் வந்தவருடைய மகிமையைக் கண்டன. "அவரை விசுவாசித்தவர்கள் அவருடைய நிறைவிலிருந்து கிருபையின் மேல் கிருபை பெற்றனர். வார்த்தை மாம்ச அவதாரமெடுத்தது தான் தேவன் மனுக்குலத்துக்குத்தம்மை வெளிப்படுத்திய மிகப்பெரிய வெளிப்படுத்தலாகும். தேவன் தம்முடைய வல்லமையும் மேன்மையையும் வெளிப்படுத்தினது மட்டுமல்ல, தேவனுடைய அன்புள்ள, உருக்கமுள்ள இருதயத்தையும், நம்முடைய இரக்கத்தையும், கருணையையும், தயவையும் கூட மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தினார்.

ஆம்! அப்படித்தான் தேவனுடைய சித்தம் நிறைவேறியது. இம்மானுவேல் ( தேவன் நம்மோடு) மூலம் மீட்பின் உதய ஒளி வெளிப்படுத்தப்படுமுன் உலகமானது ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குக் காத்திருக்க வேண்டும் ஆனால் அந்தக் காலகட்டத்தில் இந்த வருத்தமளிக்கும் நம்பிக்கையற்ற உலகத்தின் மீது வியாகுலமும் கவலையும் கொண்டிருந்தார்.



கிறிஸ்து மாம்ச அவதாரமெடுத்தபோது இவ்வுலகில் கிரேக்கர், ரோமர் மற்றும் யூதர் என்னும் மூன்று செல்வாக் குள்ள ஜாதிகள் இருந்தன என்று சரித்திரம் நமக்கு அறிவிக் கிறது. கிரேக்கர் பண்பட்டவர்களாயும் புதுப்பிக்கப் பட்டவர் களாயும், ரோமர் பலமுள்ளவர்களாயும் ஆதிக்கம் செலுத்து பவர்களாயும், யூதர்கள் தேவனுடைய பிரமாணத்தின் அறங் காவலர்களாயும் இருந்தனர். கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம் பண்ணுவதில் தங்களை அவர்கள் அறியாமலேயே ஈடுபடுத்தி இம்மூன்று ஜாதிகளும் ஒத்துழைத்தன. தன்னார்வ மில்லாதவருக்கு ஜாதிகளும் ஒத்துழைத்தன. தன்னார்வமில்லா இவ்வொத்துழைப்பு "கர்த்தருடைய நாமத்தினால் வருகிறவருக்கு வழியை ஆயத்தம்பண்ணுவதற்கு தேவ கட்டளையின்படி உண்டானதாகும்.

முதலாவதாக தேவன் நாகரிகமடைந்த உலக பகுதிகளை இணைத்து எங்கும் பாதுகாப்பை ஏற்படுத்துவதனால் வழியை ஆயத்தம் பண்ண ரோமர்களைப் பயன்படுத்தினார். அதற்கு முற்பட்ட காலத்தில் புனித நாட்டில் பிறக்கும் எந்தவொரு செய்தியும் அதன் குறுகிய நிலப்பரப்புக்கு அப்பால் பரவுவது அசாத்தியமாயிருந்தது. ஏனெனில் கள்ளரும் கொள்ளைக்காரரும் எங்கும் சுற்றித்திரிந்து நாசத்தை விளைவித்து வந்தனர்.

அதேபோல கிரேக்கர்களும் தங்களுடைய அழகான இணக்கமான மொழியை, அந்த காலத்தில் பேரரசு முழுவதும் முக்கியமான அரசாங்க ஆட்சிமொழியாகிய கிரேக்கத்தைப் பரப்பியதன் மூலம் தங்களுடைய பங்கை தம்மையுமறியாது கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம் பண்ணுவதில் ஆற்றி னார்கள். நாகரீக உலக முழுவதும் நற்செய்தியைப் பரப்பு வதற்கு அம்மொழி அருமையான கருவியாக விளங்கியது.

உலக முழுவதும் சிதறுண்டிருந்த யூதர்களைப்

பொறுத்தமட்டில், தங்களுடைய புனித நூல்களை உடன் எடுத்து சென்றனர். ஏனெனில் ஒவ்வொரு ஓய்வு நாளிலும் (சனிக்கிழமை) ஜெபாலயங்களில் அவற்றை வாசிக்க வேண்டும் என்று மோசே அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார்.

இந்த ஜாதிகளை எளிதில் சென்றடைய உதவிய முக்கியமான காரணிகளில் ஒன்று பரிசுத்த வேதாகமம் கிரேக்க மொழியாக்கம் செய்யப்பட்டதாகும். அதன் மூலம் புறஜாதிகளின் உலகம் கிறிஸ்துவின் (மேசியா) வருகை குறித்த தீர்க்கதரிசனங்களைக் கவனிக்கவும், அவரை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கவும் உதவியாயிருந்தது. கர்த்தருக்கு வழியை ஆயத்தம் செய்வதில் இந்த எல்லா ஜாதிகளும் அறியாமலேயே ஐக்கியப்பட்டது மெய்யாகவே ஓர் ஆச்சரியமாகும்.

எல்லாவற்றிலும் புதுமையான காரியம் என்னவெனில், கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக யூதர்களின் ஆவலான எதிர்பார்ப்பு ஆகும். வெளிப்படுத்தல்களின் போக்கில் ஐந்து நூற்றாண்டுகளுக்கும் மேலாக உண்டான நிறுத்தத்தின் விளைவாகவே இந்த எதிர்பார்ப்பு உண்டாயிற்று என்று பார்வையாளர்கள் கருதுகின்றனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மக்கள் மறதியுள்ளவர்களாகி, அவர்களுடைய நம்பிக்கை பலவீனமடைவதே எதிர்பார்க்கக்கூடிய ஒன்றாகும். ஆனால் அப்படி நிகழவில்லை, ஏனெனில் அதிகரிக்கும் ஆவலுடன் சகல ஜாதிகளின் விருப்பமான வரை அவர்கள் எதிர் நோக்கியிருந்தனர்.

பரிசுத்த வேதவாக்கியங்களை வாசித்ததான புறஜாதிகளும் கூட யூதர்களுடன் இந்த எதிர்பார்ப்பில் பங்கு கொண்டனர் என்பதில் ஐயமேதுமில்லை. கீழை நாட்டிலிருந்து பெத்லகேம் மாட்டுத் தொழுவத்தின் இயேசு என்னும்



குழந்தைக்கு மரியாதை செய்து வர ஞானிகள் புனித நாட்டுக்கு வந்தது இதற்கு சான்றாகும்.

வார்த்தையானது பெத்லகேம் மாட்டுத் தொழுவத்தில் மனித அவதாரம் எடுத்த போது மிக முக்கியமான சம்பவங்கள் நிகழ்ந்தன என்பதைக் குறிப்பிடுவது தகுதியானது. கர்த்தருக்காகக் காத்திருந்தவர்களின் நம்பிக்கையை அவை புதுப்பித்தன. அவகைளில் சில:

1. மல்கியா தீர்க்கதரிசியுடன் நின்று போயிருந்த தீர்க்கதரிசன ஆவியும் வெளிப்பாடும் மீண்டும் வந்தன. தீர்க்கதரிசிகளை ஏவுகிறவர் இங்கே இருந்தபடியால் இந்த வரம் முதலாவது ஆசாரியனாகிய சகரியாவிலும், பின்பு எலிசபெத்திலும், பின்பு இயேசுவின் தாயாகிய மரியாளிலும், பின்பு யோசேப்பிலும், பின்பு வயதான சிமியோனிலும், பின்பு தீர்க்கதரிசினியான அன்னாளிலும் கடைசியாக திருமுழுக்குநரான யோவானிலும் புதுப்பிக்கப்பட்டது.
2. வானத்திலும், பூமியிலும் உண்டான பெரு மகிழ்ச்சி. தேவதூதர்கள் வானத்திலிருந்து இறங்கி வந்து,. "உன்னதத்தில் தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனுஷர்கள் மேல் பிரியமும் உண்டாவதாக". (லூக்கா 2:14) என்று பாடினார்கள. வானத்தின் குடிகளும் பூமியின் குடிகளும் வார்த்தையானவர் மாம்ச அவதாரமெடுப்பதை எதிர்பார்த்துக் காத்திருந்தனர், ஏனெனில் தேவன் ஆயத்தப்படுத்தின மீட்பின் வாக்குறுதிகளைக் குறித்து அவர்கள் அறிந்திருந்தனர்.
3. குழந்தையாகிய இயேசு தேவாலயத்திலே பிரவேசித்தது. இது ஆகாயின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது. நான் சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன் ;

எல்லா ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார் ; இந்த ஆலயத்தை மகிமையால் நிரப்புவேன் என்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.

.... முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரியதாயிருக்கும் என்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார். "இந்த ஸ்தலத்திலே சமாதானத்தை நான் கட்டளையிடுவேன்" என்று "சர்வவல்லமையுள்ள கர்த்தர் கூறுகிறார்" (ஆகாய் 2:7-9).

திரித்துவ வணக்கம் கிறிஸ்தவத்துக்கு முன்பே பெர்ஸியா, கிரீஸ், ரோம், இந்தியா, சீனா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் புறஜாதிகள் நடுவில் அறியப்பட்டிருந்தது. இதனுடைய இரகசியம் என்ன? கிறிஸ்தவ திரித்துவ உபதேசத்துக்கும் புறஜாதிகளுடைய திரித்துவ நம்பிக்கைக்கும் பெரிய வித்தியாசம் உண்டு.

1. எகிப்தியர்களின் திரித்துவ வணக்கத்தில் ஓசிரிஸ் இசிஸ் மற்றும் ஹோராஸ் ஆகிய தெய்வங்களை அவர்கள் விசுவாசித்தனர். அவை ஒரே தேவனல்ல மூன்று தெய்வங்கள்
2. அதேபோல எவ்வித குணாதிசயங்களும் இல்லாத ஒரு எளிய தெய்வ அடிப்படையை விசுவாசித்தனர். அந்த தெய்வத்திலிருந்து மற்றவைகளை விட மேலான மூன்று தெய்வங்கள் தோன்றின. முதலாவதான பிரம்மா சிருஷ்டிகர் எல்லாவற்றிற்கும் ஊற்றானவர். இரண்டாவது கடவுள் விஷ்ணு, எல்லாவற்றையும் காப்பாற்றுகிறவர். மூன்றாவது கடவுள் சிவா அழிக்கிறார்.
3. பெர்ஸியர்கள் இரண்டு பெரிய தெய்வங்களை விசுவாசித்தனர். முதலாவது ஒர்முஸ்டு, நன்மைகளின் தேவன், இரண்டாவது அஹ்ரிமான், தீமைகளின்



கடவுள். எல்லா நன்மையான மற்றும் ஆவிக்குரிய காரியங்கள் நன்மைகளின் கடவுளிலிருந்து புறப்படுகின்றன என்றும், தீமையான மற்றும் பொருள் பிராகரமான யாவும் தீமையின் கடவுளிலிருந்து புறப்படுகின்றன என்று அவர்கள் கூறினார்கள். இந்த இரண்டுக்கும் இடையில் தொடர்போராட்டம் இருப்பதைக் கவனித்த அவர்கள், இந்த இரண்டு கடவுள்களும் நித்தியமானவைகள், சமமானவைகள், ஒன்றை மற்றொன்று மேற்கொள்வது என்பது அசாத்தியம் என்று அவர்கள் சொல்ல வேண்டியதாயிற்று.

எவ்விதத்திலும் கிறிஸ்தவ திரித்துவம் இந்த புறஜாதிகளின் திரித்துவ வணக்கங்களுடன் எவ்விதத் தொடர்பும் உடையதல்ல. அவர்களுடைய எண்ணங்கள் எதுவானாலும் திரித்துவத்தை இல்லையென்றாக்க முடியாது. உதாரணமாக, தேவன் என்னும் பதம் இஸலாத்துக்கு முன்பே வழக்கத்திலிருந்தது, எனினும் அது குர்ஆனுக்கு எவ்விதத் திலும் பிரச்சனையாயிருக்கவில்லை. இஸ்லாத்துக்கு முன் பிருந்த அரபியர்கள் தங்கள் கவிதைகளிலும் புத்தகங்களிலும் தேவனைக் குறித்து எழுதினர். புறஜாதிகளின் சில பழக்கங்கள் சில முஸ்லிம்களுக்குள் கலந்து விட்டிருக்கிறதால் குர்ஆனி லிருந்து திசைதிரும்புவதாகிவிடுகிறதா? அதேபோல புனித யாத்திரை, ஊர் வலங்கள் சென்று கல்லெறிதல், கறுப்பு கல்லை முத்தமிடுதல் இவையாவும் இஸலாத்துக்கு முன்னமே அரபுகளிடையே நிலவிய பழக்கமாகும்.

நீங்கள் "அல்-அஸ்ஸூரா" மற்றும் "இரவுப் பயணம்" மற்றும் "அல்- மாரஜ்" பரமேறுதல் ஆகிய கதைகளை குறித்து என்ன சொல்லுகிறீர்கள்? இஸ்லாத்துக்கு முன்பே ஜெராஸ்டிரிய மதப்புத்தகங்களில் இதுபோன்ற கதைகள்

உள்ளன. அல்லது இஸ்லாத்துக்கு முன்பே ஏக இறைக்கொள்கையுடையதாய் யூதமதம் இருந்தவந்ததால் இஸ்லாத்துக்குக் குறையேதும் ஏற்பட்டுவிட்டதா?

**கேள்வி :** இயேசுவின் காலத்தில் வாழ்ந்த, அவரைப் பின்பற்றின சீஷர்கள் அவருடைய தெய்வீகத்தை விசுவாசித்தனர் என்பதற்கு எவ்விதச் சான்றுமில்லை. அவருடைய சீஷர்களைவிட இயேசுவை உங்களுக்கு நன்றாகத் தெரியுமா?

**பதில் :** இயேசு பரமேறுவதற்கு முன்பு தம்முடைய சீஷர்களைக் கூட்டி இவ்வாறு சொன்னார் என்று புதிய ஏற்பாடு நமக்கு அறிவிக்கிறது.

“மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்க தரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே”.

பிறகு வேதவாக்கியங்களை அவர்கள் புரிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து, மேலும் கூறியதாவது.

“எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டிய தாயிருந்தது : அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன், நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்”... பின்பு அவர் அவர்களை பெத்தானியா



வரைக்கும் அழைத்துக்கொண்டுபோய், தம் கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர்களை விட்டுப் பிரிந்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் அவரைப் பணிந்து கொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்து, நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து, துதித்துக்கொண்டிருந்தார்கள். (லூக்கா 24:44-53)

லூக்கா நற்செய்தியின் முடிவு வசனங்களான இவைகளின்படி இயேசு பரமேறியபோது அவருடைய சீஷர்கள் அவரைப் பணிந்து கொண்டனர் என்று காண்கிறோம். கிறிஸ்துவின் தெய்வீகத்தை சீஷர்கள் தனித்தனியே விசுவாசித்த சந்தர்ப்பங்களும் பல உண்டு.

1. அன்பின் அப்போஸ்தலாகிய யோவான் கூறினார் “ஆதியிலே வார்த்தை இருந்தது : அந்த வார்த்தை தேவனோடிருந்தது, அந்த வார்த்தை தேவனா யிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டாக்கப் பட்டதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாக வில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது (யோவான் 1:1-4)
நான் அல்ஃபாவும் ஒமெகாவுமாயிருக்கிறேன் என்று இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் (வெளிப்படுத்தல் 1:8)
2. தோமாவின் சாட்சி : “மறுபடியும் எட்டு நாளைக்கு பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்கள் உடனே கூட இருந்தான். கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று, “உங்களுக்குச் சமாதானம்” என்றார். பின்பு

அவர் தோமாவை நோக்கி ; ''நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தமாக என் ஆண்டவரே, என் தேவனே என்றான்" (யோவான் 20:26-28).

3. பேதுருவின் சாட்சி : "நீங்களும் போய்விடமன தாயிருக்கிறீர்களோ? என்று இயேசு பன்னிருவரையும் பார்த்துக் கேட்டார். சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக, ''ஆண்டவரே யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்'' என்றான் (யோவான் 6:67-28).

மூன்றாந்தரம் "அவர் அவனை நோக்கி, சீமோனே, யோனாவின் குமாரனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார்... பேதுரு அவரை நோக்கி ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான்.

இயேசு : என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார் (யோவான் 21:17)

4. அப்போஸ்தலனாகிய பவுலின் சாட்சி : "கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன் (ரோமர் 9:5)

**கேள்வி :** தோரா (பஞ்சாகமங்கள்) சொல்கின்றன, "தூக்கிப் போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்" (உபாகமம் 21:23) உங்கள் நெஞ்சிலே சிலுவைச் சின்னத்தைப் பெருமையுடன் அணிந்து கொள்ளு



கிறீர்கள். நீங்கள் கூறுகிற எதுவும் இயேசுவுக்குத் தெரியாது, அவர் சிலுவையில் அறையப் படவில்லை. அதை நாங்கள் ஒத்துக் கொள்கிறதில்லை.

**பதில் :** தோரா சொல்வது சரியே. நியாயப்பிரமாணத்திலே (தோரா) சொல்லப்பட்ட யாவற்றையும் கைக் கொள்ளாதவர்களின் சாபத்தை நீக்கும்படியாகவே கிறிஸ்து சிலுவையில் தூக்கப்பட்டார்

2. தன் கழுத்தில் சிலுவைச் சின்னத்தைத் தொங்க விட்டுக்கொள்வதில் கிறிஸ்தவன் பெருமைப்படுகிறான். பவுல் சொல்வதைக் கவனியுங்கள். "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே அல்லாமல் வேறொன்றைக் குறித்தும் மேன்மை பாராட்டா திருப்பேனாக. அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையப்பட்டுள்ளது ; நான் உலகத்திற்குச் சிலுவையில் அறையப் பட்டிருக்கிறேன்" (கலாத்தியர் 6:14)

3. இயேசு கிறிஸ்துவின் மரணம் தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசனங்கள் மற்றும் சாட்சிகள், அவர் மரித்ததையும் அவர் உயிர்த்தெழுதலையும் கண்ட அவருடைய சீஷர்களின் சாட்சிகளையும் அடிப்படையாக கொண்ட மெய்யான நிகழ்வாகும். இந்த மெய்நிகழ்வை வரலாறும் கூட சாட்சியிடுகின்றது. அப்போஸ்தலர்கள் தேவ ஏவுதல் பெற்று எழுதினவைகளை நாம் கவனமாக வாசித்துப் பார்ப்போமானால், கிறிஸ்தவத்தின் துவக்க முதல் பிரசங்கிக்கப்பட்ட புதிய ஏற்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டு அதனால் பல இலட்சக்கணக்கானவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்று காணலாம். புதிய ஏற்பாடு

நற்செய்தியாகும், பவுல் அதைக் குறித்துக் கூறுகிறார்.

"அன்றியும், சகோதரரே நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். மற்றபடி உங்கள் விசுவாசம் வீணாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். (1 கொரிந்தியர் 15:1-4)

உலகத்தில் நற்செய்தி பரவி ஐந்நூறு ஆண்டுகளுக்கும் பிறகு, இந்த வேதாகம உண்மையை எதிர்த்துக்கொண்டு, ஏற்றுக்கொள்ள மறுத்து ஒரு மனிதன் வருகிறார். உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்களைப் பார்த்து நீங்கள், சொல்வது தவறு, உங்கள் வேதாகமத்திலும் உங்கள் மதத்திலும் தவறு இருக்கிறது என்று அவர் சொல்வது போலிருக்கிறது.

சிலுவையின் விஷயம் குறித்து உங்களுக்குக் காண்பிக்க உங்களை ஒரு காட்சிப் பயணம் போல அழைத்துச் சென்று பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளும், இயேசு கிறிஸ்துவின் சீஷர்களும் வெளிப்படுத்தியவைகளை, இயேசுவும் கூட தம்மைக் குறித்து வெளிப்படுத்தியவைகளை உங்களுக்குக் காண்பிக்கவேண்டுமென்று எண்ணியிருந்தேன். சரித்திர ஆசிரியர்களும், எல்லா நேரில்கண்ட சாட்சிகளும் கூட கூறியிருப்பவைகளையும் காண்பிக்க வேண்டுமென்று விரும்பியிருந்தேன். ஆனால் அது அவசியமற்றது என்று கண்டேன் ; ஏனெனில், பரலோக



இராஜ்யம் அது வெளிப்படுத்தியுள்ள எல்லா புத்தகங்களுடனும், பூமிக்கோலம் தனது எல்லா சரித்திரப் பதிவுகளோடும் சிலுவையிலறைதல் குறித்துச் சாட்சியிடுகின்றன.

4. உங்களுடைய கேள்வியின் கடைசி பகுதியைக் குறித்து நான் சொல்ல விரும்புவதாவது: "இயேசு யூதர்களுக்குத் தமது அழைப்பைக் கொடுத்த போது கூறினார்". பிதாவானவர் எனக்குத் தருபவைகள் யாவும் என்னிடம் வரும் ; என்னிடத்தில் வருபவர்களை நான் ஒருக்காலும் புறம்பே தள்ளுவதில்லை (யோவான் 6:37) அவர் மேலும் கூறினார், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்". (யோவான் 11:25)

இயேசுவிடம் வருவது என்பது : அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வது, அவர் சிலுவையில் நிறைவேற்றிய மீட்பின் மூலம் இது சாத்தியமாகும். இயேசுவின் மீது விசுவாசம் வைப்பதில் அவருடைய தெய்வீகத்தை விசுவாசிப்பதும் அடங்கும். உண்மையிலேயே இதை நீங்கள் ஒப்புக்கொள்ள விரும்பினால் இயேசுவானவர் "சமாதானப் பிரபுவாக" எருசலேமில் பிரவேசித்தபோது எருசலேம் வாசிகள் பாடினதுபோல நாம் சேர்ந்து, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்" என்று பாடுவோமாக!

அப்போது, மீட்கப்பட்ட திரள் கூட்டத்துடன் நாமும் சேர்ந்து "நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தம்முடைய இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் உண்டாவதாக! ஆமென். வெளிப்படுத்தல் 1:5-6) ஆமென்.

## புதிர் வினாக்கள்

1. இப்போதும் இப்புத்தகத்தைப் படித்துள்ளீர்கள் பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள். அப்போது அடுத்த கிறிஸ்தவ போதனையில் விசுவாசத்தின் வரையறை என்ன? புத்தகத்தை உங்களுக்கு அனுப்பி வைப்போம்.
2. அதரிசனமானவரை மனித மனம் கிரகிக்க முடியுமா?
3. விசுவாசத்தின் வரையறைக்கு சில உதாரணங்கள் தருக
4. ஸூரா 5 அல்-மாயிதா (திடேபிள்) 116ல் சுட்டிக்காட்டப் பட்டுள்ள துர் உபதேசம் எது?
5. இயேசு தம்மைக்குறித்துக் கொடுத்துள்ள சாட்சிகளுக்கு ஓர் உதாரணம் தருக.
6. பிதாவாகிய தேவன் குமாரனாகிய கிறிஸ்துவைக் குறித்து எவ்வாறு சாட்சி கொடுத்தார்?
7. கிறிஸ்துவைக் குறித்து அப்போஸ்தலருடைய சாட்சியின் சாராம்சம் என்ன?
8. கிறிஸ்தவ உபதேசத்தின்படி பரிசுத்த ஆவியானவர் யார்?
9. கிறிஸ்தவ பாவநிவிர்த்திக்கு அடிப்படை என்ன?
10. பரிசுத்த வேதாகமத்தை வாசிப்பதின் மூலம் நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?
11. பாவமின்றி யாராவது பிறந்ததுண்டா? இதைக் குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது?
12. இயேசு என்ற பெயரின் அர்த்தம் என்னன? பாவத்திற்கு அவருடன் தொடர்பு உண்டா?
13. இரட்சிப்பு தற்செயல் நிகழ்வா அல்லது தேவனுடைய ஒரு நித்திய திட்டமா?
14. தேவன் முதல் மனிதனை யாருடைய சாயலில் படைத்தார்?
15. ஆதாமும் ஏவாளும் எப்படி சாத்தானின் சோதனையில் விழுந்தனர்?



16. சங்கீதம் 14 மற்றும் எரேமியா 17ல் குறிக்கப்பட்ட வசனம் என்ன?
17. பாவத்தின் சம்பளம் என்ன?
18. தேவன் முதன் முதலாக எப்போது பாவநிவாரண பலியைக் கோரினார்?
19. தேவன் பலிகளைக் கேட்டதின் நோக்கம் என்ன?
20. பலிகளின் இறுதியான அடையாளம் யார்?
21. கிறிஸ்தவ போதனையில் மாம்ச அவதாரம் என்றால் அர்த்தம் என்ன? அதன் நோக்கம் என்ன?
22. கிறிஸ்தவ போதனையில் பாவநிவிர்த்தியின் அர்த்தம் என்ன?
23. தேவத் திரித்துவ ஐக்கியத்திற்கு தோராவில் மேற்கோள் உண்டா? ஒரு உதாரணம் தருக
24. அத்தனாசியின் விசுவாசப் பிரமாணத்தின் சாராம்சம் என்ன?
25. இஸ்லாம் எதிர்த்துப் போராடும் திரித்துவம் மெய்க் கிறிஸ்தவ திரித்துவமா?
26. திரித்துவ விசுவாசம் குறித்து இஸ்லாமிய தத்தவஞானிகளும் இறையியல் வல்லுநர்களும் கொண்டுள்ள அடிப்படைக் கருத்து என்ன?
27. இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகள் பதில்கள் குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?

**இந்த கேள்விகளுக்குப் பதில் எழுதி உங்கள் பெயர் மற்றும் விலாசத்துடன் அனுப்பவும்.**

**சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** யோவான் 8:32